இந்து ஒளி

HINDU OLI

தீபம் - 7 சுடர் - 2



# மகா சிவராத்திரி சிறப்பிதழ்

அகில இலங்கை இந்து மாமன்றம்
காலாண்டிதழ்

*Quarterly of*
*All Ceylon Hindu Congress*

# வைத்தியக்கலாநிதி வேலாயுதபிள்ளை நினைவுப்பேருரை நிகழ்வுகள்




மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை உரையாற்றுகிறார்.



மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா, கல்கி பகவானின் சீடர் சுஜேய் கிருஷ்ணாஜி அவர்களுக்கு மாலை அணிவிக்கிறார்.



அமரர் வேலாயுதபிள்ளை அவர்களின் படத்திற்கு மாமன்றத் தலைவர் மாலை அணிவிக்கிறார்.



கல்கி பகவானின் சீடர் சுஜேய் கிருஷ்ணாஜி பேருரையாற்றுகிறார்.



மாமன்ற சமய விவகாரங்கள் குழுத் தலைவர் திரு. க. இராஜபுவனீஸ்வரன் உரையாற்றுகிறார்.



பிரதம விருந்தினர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் மாணவர்களுக்கு இலவச அப்பியாச புத்தகங்களை வழங்குகிறார்.



நிகழ்வில் கலந்து கொண்டவர்களுள் ஒரு பகுதியினர்.

உ
சிவமயம்

# பஞ்ச புராணங்கள்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

**(திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அருளியது)**

மாலொ டயனறியாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆல வாயான் திருநீறே.

## திருவாசகம்

**(மணிவாசக சுவாமிகள் அருளியது)**

பிரம னரியென் றிருவருந்தம் பேதமையாற்
பரம மியாம்பரம மென்றவர்கள் பதைப்பொடுங்க
வரனா ரழலுருவா யங்கே யளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்க மாடாமோ.

## திருவிசைப்பா

**(சேந்தனார் அருளியது)**

இடர் கெடுத்து என்னையாண்டு கொண்டு என்னுள்
இருட் பிழம்பற வெறிந்தெழுந்த
சுடர் மணிவிளக்கின் உள்ளொளி
தூய நற் சோதியுட் சோதி
அடல் விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

**(சேந்தனார் அருளியது)**

ஆரார்வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முக னங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல் புகழ் பாடியு மாடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

**(கச்சியப்ப சிவாசாரியார் அருளியது)**

ஆன்றதோ ரளவை தன்னில் அடைந்தது மாகந்தன்னில்
வான்றிகழ் பானாட்கங்குல் மதிபகல் தழுவு நென்னல்
ஞான்றது தனில்யாங் கீண்டு நடுக்குற நடுவணாகத்
தோன்றினன் கனற்குன்றே போல் சொல்லரும் பரத்தின் சோதி

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

# இந்து ஒளி

தீபம் — 7 சுடர் — 2
சித்திரபானு வருடம் மாசி 17ம் நாள்
01. 03. 2003

# தவறான வழியிலான மதமாற்றம் நிறுத்தப்பட வேண்டும்

மக்களை ஏமாற்றி மதமாற்றம் செய்விக்கும் முயற்சிகள் இந்நாட்டில் நடப்பதைச் சட்டம் மூலமாகத் தடுக்க இந்து சமய விவகார அமைச்சர் மாண்புமிகு தி. மகேஸ்வரன் அவர்கள் எடுத்துவரும் முயற்சிகளை அகில இலங்கை இந்து மாமன்றமும் ஏனைய இந்து நிறுவனங்களும் ஏகோபித்த குரலில் வரவேற்று இருக்கின்றன. இந்துக்கள் மட்டுமல்ல பௌத்தர்கள் கூட இந்த ஏமாற்று வித்தையால் பாதிக்கப்பட்டிருப்பதால் பௌத்த நிறுவனங்களும் விழித்தெழுந்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

உத்தேச சட்டத்தின் மூலம் மட்டும் அப்பாவி மக்கள் ஏமாற்றப்படுவதைத் தடுத்து நிறுத்த முடியாது. இந்து மக்கள் விழிப்புணர்ச்சியுடன் இருக்க, ஏழை மக்கள் இந்த ஏமாற்று வித்தைக்கு இரையாவதைத் தடுக்க இந்து நிறுவனங்கள் அனைத்தும் தங்களாலான பணிகளையாற்ற வேண்டும். இச்சேவையில் ஆலயங்களும் இந்து நிறுவனங்களுக்கு உரிய ஆதரவு தரவேண்டும்.

அதே நேரத்தில், பாடல்பெற்ற தலமான திருக்கேதீச்சரத் திருப்பணியில் அயராது பணியாற்றிய சேர். கந்தையா வைத்தியநாதன் மன்னார் பகுதியில் மதமாற்றத்தை எதிர்த்துப் போராடிய சீலர் என்பதை நினைவில் கொள்வது பொருத்தமானது.

திருக்கேதீச்சரத் தலம் புனருத்தாரணம் செய்யப்பட்டு வைகாசி மாதமளவில் குடமுழுக்கு காணப்படவிருக்கும் இவ்வேளையில், சேர் கந்தையா வைத்தியநாதனின் முயற்சியால் திருக்கேதீச்சரம் பற்றி எழுதப்பட்டவையைத் தொகுத்து மகா சிவராத்திரியன்று திருக்கேதீச்சரத் தலத்திலேயே ஒரு சிறப்பு நூலை வெளியிடுவதற்கு மாமன்றம் ஒழுங்குகள் செய்திருக்கின்றது. இப்படியான பணிகள் நாளைய தலைமுறையினரின் நலன்கருதி மாமன்றத்தினால் எடுக்கப்படுகின்றன. இதுபோன்ற ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு அதரவு தருமாறு சகலரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.



# மகா சிவராத்திரி தத்துவம்



ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கடவுள் எங்கும் நிறைந்தவர்; எல்லாவற்றிலும் பரந்து நிலைத்திருப்பவர். இந்தக் குணங்கள் இருப்பதால் அவருக்கு ஓர் உருவம் இருக்க முடியாது. அவர் உருவம், நாமம் ஆகிய எல்லைகளைக் கடந்தவர். இருந்தாலும் நமக்கு அநுக்கிரகம் செய்வதற்காக அவர் பல்வேறு அவதாரங்களை எடுக்கிறார்.

சிவபெருமானை வழிபடுவதற்காக நாம் உருவகம் செய்யும் லிங்கம் இந்த உருவம் – உருவம் இல்லாதது என்ற, இரண்டு குணங்களையும் கொண்டது. லிங்கம் என்ற வடிவம் இருப்பதால் இது உருவம் கொண்டது. அடி, முடி, கை, கால் என்ற அங்கங்கள் இல்லாதிருப்பதால் இது உருவம் இல்லாதது. இந்த லிங்கம் என்ற தத்துவமே ஆரம்பமோ முடிவோ இல்லாத ஒன்றைக் குறிப்பதாகும். லிங்கம் என்ற பெயருக்கு அடையாளக் குறி என்பதே பொருள்.

பொதுவாக வழிபாட்டில் பஞ்சாய தன பூஜை இடம் பெறுகிறது. இதில் முக்கியமாக நர்மதைக் கரையிலிருந்து கொண்டு வந்த பாணலிங்கத்தை ஈசுவரனின் பிரதியாக வைத்து வழிபடுகிறோம். நேபாளத்தில் கண்டகியிலிருந்து கொண்டு வந்த சாளக்கிராமம் மகாவிஷ்ணுவின் பிரதியாக இடம் பெறுகிறது. சோரைப் பத்ரத்திலிருந்து எடுத்து வந்த சிவப்பு நிறக்கல் கணபதியை உருவகமாகக் காட்டுகிறது. தஞ்சாவூருக்கருகில் வல்லத்திலிருந்து கொண்டுவரப்பட்ட ஒளிக்கல் சூரியனின் பிரதியாக விளங்குகிறது. தங்கநிறம் பிரதிபலிக்கும் ஒருவகைக் கல், காளஹஸ்தியின் அருகே ஸ்வர்ணமுகியிலிருந்து கொண்டு வரப்பட்டது, அம்பிகையின் பிரதியாக இடம் பெறுகிறது.

மகாவிஷ்ணுவின் அடையாளமாக விளங்கும் சாளக்கிராமம், சிவபெருமானின் அடையாளமாக விளங்கும் ருத்ராக்ஷம், இரண்டுமே நேபாளத்திலிருந்து வந்தது என்பது குறிப்பிடத்தகுந்தது. சாளக்கிராமத்தில் சிறு துவாரம் இருக்கிறது. அதை வெளிச்சத்தில் உயர்த்திப் பிடித்துப் பார்த்தால், உள்ளே சக்கரம் இருப்பது தெரியும். சங்கு போன்ற பலவகை கிளிஞ்சல்களிலும் உள்ளே ஒரு வகைப் புழு தங்கி இருப்பதைப் போல, சாளக்கிராமத்திலும் தங்கி உள்ளது. சாறி என்பது ஒரு புழுவையும் கிராவ என்பது கல்லையும் குறிப்பிடுவது. நேபாளத்தில் கண்டகி நதி, நான்கு மலைகளுக்கு நடுவில் ஏரியாக விரிந்து பரந்திருக்கிறது. இங்கிருந்துதான் சாளக்கிராமம் எடுக்கப்படுகிறது. வைரமாக முழு உருவம் பெறாத ஒளி சிதறும் படிகக் கல் வல்லத்தில் கிடைக்கிறது. சூரிய ஒளியில் ஸ்படிகம் ஒளிச்சிதறலாக மின்னும். சூரிய ஒளி இதன் வழியாகப் பாய்ந்து கதிர்களாக மின்னும். அதனால் இந்த ஸ்படிகத்தைக் கழுத்தில் அட்டிகையாகச் செய்து போட்டுக் கொண்டால், வெய்யிலில் சூடான வெப்பக் கதிர்கள் உடம்பில் இறங்குவதை உணரலாம்.

முட்டை வடிவமான பாணலிங்கம் ஈசுவரன் ஆரம்பமோ முடிவோ இல்லாதவர் என்பதை நமக்கு உணர்த்துகிறது. விரிந்து கிடக்கும் வானமும் இதேபோல நமக்குத் தொடக்கமும் முடிவும் இல்லாத வடிவத்தைக் காட்டுகிறது. லிங்கம் என்ற அடையாளத்தின் தத்துவத்தை நாம் உணர முயன்றால், அது நம்மால் புரிந்து கொண்டு உணர முடியாத ஒன்றை, நம்முடைய மனத்தின் கிரகிக்கும் எல்லைக்குள் கொண்டு வரச் செய்வது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

ஈசுவரன் தெய்வீக லீலைகளில் பல்வேறு உருவங்களை எடுத்துக் கொண்டு விளங்குகிறார். உருவமே இல்லாத சிவபெருமான் ஓர் உருவத்தை எடுத்துக் கொண்டதே லிங்கோற்பவ மூர்த்தியின் வடிவமாகும். மகாசிவராத்திரியன்று நள்ளிரவில் ஈசுவரன் இந்த வடிவத்தை எடுத்துக் கொண்டார். அதனால்தான் பக்தர்கள் மகாசிவராத்திரியன்று, நடுராத்திரியில் சிவபூஜை செய்து வழிபடுகிறார்கள். வழிபடுகிறார்கள். லிங்கோற்பவ மூர்த்தியில் மகா விஷ்ணுவும் பிரம்மாவும் ஈசுவரனின் இரு எல்லைகளைக் காண முயலும் தோற்றம் வெளிப்படுகிறது. அதனால் லிங்கோற்பவ மூர்த்தியை வழிபடும்போது சிவா, விஷ்ணு, பிரும்மா ஆகிய மூன்று மூர்த்திகளையுமே தரிசிக்கும் பேறு நமக்குக் கிடைக்கிறது. கடவுளை முழுமையாகவும், எல்லா அம்சங்களிலும், உருவம் உள்ளவராகவும் அற்றவராகவும் பார்க்கக் கூடிய வாய்ப்பு நமக்கு, லிங்கோற்பவ மூர்த்தியின் தரிசனத்தில் கிட்டுகிறது.

மற்ற லிங்கங்களைக் காட்டிலும் ஸ்படிக லிங்கத்துக்கு மகிமை அதிகம். ஏனென்றால் ஒளியைப் பெருக்கும் அதில் குறிப்பாக எந்த ஒரு வர்ணத்தையும் நாம் காண முடியாது என்பதால்தான் எந்தப் பொருளை அது சார்ந்து நிற்கின்றதோ அந்தப் பொருளின் வர்ணத்தை அது எடுத்துக் கொள்கிறது. முழுமையான பக்தன் ஈசுவரன் எவ்விதமாகத் தன்னிடம் தொடர்பு கொண்டு சாந்நித்யம் அளிக்க வேண்டும் என்று விரும்புகிறானோ, அப்படியெல்லாம் விளங்குவான் என்ற தத்துவத்தை இது உணர்த்துகிறது. ஈசுவரன் எல்லா வர்ணங்களுக்கும் மூலமாக விளங்குபவன்; அதேபோல எல்லா வர்ணங்களுமே அவனிடம் உறைந்து அடங்குகின்றன. அவனே எல்லா உயிரினங்களுக்கும் மூலமானவன். எல்லா உயிரினங்களுமே அவனிடம் அடங்குகின்றன . இதைவிட மிக உயர்ந்த தத்துவம் வேறு ஏதேனும் இருக்க முடியுமா?

பகவான் மகாவிஷ்ணு தனது கிருஷ்ணாவதாரத்தைக் கோகுலத்தில் எடுத்தது நள்ளிரவில் என்பது நமக்குத் தெரியும். அந்தப் புண்ணிய தினமான கோகுலாஷ்டமியிலிருந்து சரியாக 180 நாட்களுக்குப் பிறகு சிவராத்திரி வருகிறது. சிவபெருமானும்

லிங்கோற்பவ மூர்த்தியாக அன்று நள்ளிரவில்தான் உருவம் எடுக்கிறார். ஒரு வருஷம் என்ற முழுமையான சுழற்சி, இவ்விதம் இரண்டு (அர்த்த) பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, சமமான பங்கில் காட்டப்படுகிறது. இதுவே ஹரியும் ஹரனும் சமமே என்று நமக்கு உணர்த்தும் தத்துவம் என்றும் நாம் கொள்ள வேண்டும். கடவுள் இந்த இரு உருவங்களிலும் நம்மை ரட்சிக்கிறார் என்று நாம் கொள்ள வேண்டும். ஆண்டு முழுவதும் நமக்கு அப்படி அருள் பாலிக்கிறார் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

லிங்கோற்பவ மூர்த்தியின் மகோன்னதமான உருவம் கம்பீரமாக நமக்குத் தோன்றும்போது, உருவத்தின் எல்லைகளைக் கடந்த ஈசுவரன் உலகத்தை ரட்சித்து நடத்திச் செல்லுபவனாக, நமக்குத் தரிசனம் தருகிறான். நிலையான சக்தியாக உறைந்து நிற்கும் ஈசுவரன், பல்வேறு வடிவங்களை எடுத்து இயங்கி, ஜகத்பரிபாலனம் செய்யப் பலவிதமாகவும் தோற்றம் தந்து இயங்குகிறார் என்பதை இதன் மூலம் உணருகிறோம். சிவபெருமானை நடராஜராக இருந்து ஆடி, நம்மை எல்லாம் ஆட்டுவிக்கும் தோற்றம் இவற்றுள் ஒன்றாகும்.

சிவானந்த லஹரியில் ஒரு சுலோகம் இந்த நடனத் தோற்றத்தை எல்லையில்லாத ஆனந்தத்தை வெளிப்படுத்து வதாகக் காட்டுகிறது. அந்தச் சுலோக வருணனையில் ஈசுவரன் நீலகண்டன் என்று குறிப்பிடப்படுகிறார். சம்ஸ்கிருத மொழியில் நீலகண்டம் என்பது மயிலையும் குறிக்கும். மயில் என்பது நர்த்தனம் ஆடும் பறவை என்பது நமக்குத் தெரியும். இந்த உவமையை நாம் சாஹித்ய ரத்னாகரம், சிவானந்த லஹரி ஆகிய இரண்டிலுமே காண்கிறோம். முந்தையதில் இந்த ஆனந்த நர்த்தனம் சிவபெருமானைக் குறிப்பிடுகிறது; இரண்டாவதிலோ இது மயிலைக் குறிப்பிடுகிறது!

சாஹித்ய ரத்னாகரம் இப்படி வருணிக்கிறது :

வேனிற்காலம் முடிவுற்று மழைக்காலம் தொடங்கப் போகும் வேளையில், வானம் கறுத்து மேகங்கள் சூழ்ந்து, அவ்வப்போது மின்னலும் இடியுமாகக் காட்சி தருகிறது. மென்மையான தூற்றலும் உதிர்கிறது. இந்த இயற்கை தரும் காட்சியின் உணர்ச்சிப் பெருக்கில் ஆண் மயில் தனது பெட்டைக்கு முன், அழகாகத் தோகை விரித்து, ஒற்றைக் காலில் நின்று ஆடி மகிழ்விக்கிறது.

சிவபெருமான் ஆனந்த சொரூபனாக நர்த்தனமாடும் வேளையில், காளிகாம்பாள் என்ற உருவில் பார்வதி தனியே உக்கிர சொரூபத்துடன் கபாலங்களை மாலையாக அணிந்து கொண்டு கோபத்துடன் நடனமாடுவதாக ஒரு மரபு உண்டு. இதுவே இந்த சுலோகத்தில் உருவமாகக் கூறப்பட்டிருக்கிறது. கவிமேகங்கள் குவிந்து நிற்பதைக் காளிகா என்று குறிப்பிட்டு, வளையம்போல விரிந்து பறந்து வரும் பறவைகளின் அணியை, கபாலங்களின் மாலைக்கு நிகர்த்ததாகக் கூறுகிறார். இணைந்து நிற்கும் பெட்டை (மயூரி) நர்த்தனத்தைப் பெருமையுடன் பார்க்கிறது. ஆண் மயிலின் வண்ண மிகு தோகையில் உள்ள மயிற்கண்கள் அப்படி ஆடும்போது அசைந்து அழகு சிந்துகின்றன. இது நடராஜரின் நற்தனத்தில் முடியில் உள்ள பிறைச் சந்திரன் அசைந்து ஒளி சிந்துவதை நிகர்த்ததாகும்.

ஸ்ரீ சங்கர பகவத்பாதர் சிவானந்த லஹரியில் சிவபெருமானின் ஆனந்த நடனத்தை இவ்வாறு வருணிக்கிறார் :

சந்தியா வேளையில், இரவும் பகலும் கூடும் தருணத்தில், இந்த நடனம் நிகழுவதாக வருணிக்கப்படுகிறது. அதேபோல வேனிற் கால முடிவும் மழைக் காலத்தின் தொடக்கமும் கூடும் பருவமாகவும் இதைக் கொள்ளலாம். ஹரியின் திருக்கரங்கள் முழங்கும் முரசம், இடி அதிர்ந்து ஒலிப்பதைக் குறிப்பிடுகிறது. தரிசித்து அதிசயிக்கும் தேவர்களின் கண்பார்வை சிந்தும் ஒளி மின்னலாகவும், மெய்மறந்து கண்ணீர் பெருகித் தரிசிக்கும் பக்தர்கள் சிந்தும் கண்ணீர் மழைத்துளியாகவும் உருவகிக்கப்படுகிறது. நர்த்தனமாடும் நீலகண்டனுக்கு அம்பிகை, இணையான பெண் மயிலாகத் தோற்றம் அளிக்கிறாள்.

இத்தகையதோர் இணையிலாத அற்புத நடனத்தை ஆடும் ஈசுவரன் மகா சிவராத்திரி தினத்தன்று லிங்கோற்பவ மூர்த்தியாக நமக்குக் காட்சி தருகிறார். அவர் நமக்கு அனுக்கிரகத்தை அருளும் அந்த வேளையில் நாம் உபவாசம் இருந்து, நள்ளிரவு வரையில் கண் விழித்திருந்து, வில்வதளங்களால் அவரைப் பூஜிக்க வேண்டியது நமது கடமையாகும். சிவராத்திரி தினத்தன்று நள்ளிரவு வரையில் புத்திக் கூர்மை உள்ள நாய்கூடத் தனது உணவைத் தொடுவதில்லை என்று சொல்லுவார்கள்.

தன்னையறியாமல் சிவபெருமானை வில்வ தளங்களால் அர்ச்சித்த வேடன் அன்று ஈசுவரனின் அனுக்கிரகத்தைப் பெற்றதாகக் கதை கூறுகிறது. புலி ஒன்று தன்னைத் துரத்திக் கொண்டு வந்தபோது, வேடன் அஞ்சி ஒதுங்கி, அருகில் உள்ள மரத்தின் மீது ஏறிக் கொள்கிறான். அவன் பிடி நழுவிக் கீழே விழுந்தால் அவனைப் பற்றிக் கொண்டு, கொன்று தின்னப் புலி கீழேயே தயாராக இருந்திருக்கிறது.. தான் கண்ணயர்ந்து தூங்கி விடாமல் இருப்பதற்காக, வேடன் இரவு முழுவதும் கண்விழித்து, அந்த மரத்தின் இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்து எடுத்துக் கீழே போட்டு கொண்டிருக்கிறான். அந்த வேடன் ஏறி அமர்ந்திருந்தது வில்வ மரம். அவன் அதன் இலைகளைப் பறித்துக் கீழே போட்ட இடத்தில் ஒரு லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. அவன் தன்னையறியாமல் இலைகளைப் பறித்துக் கீழே போட்டது, லிங்கத்தை இரவு முழுவதும் கண் விழித்திருந்து அர்ச்சனை செய்ததற்கு ஒப்பாகிறது. இந்த வழிபாட்டின் பலனாக அவனுக்கு ஈசுவரன் அருளால் முக்தி கிடைக்கிறது. மகா சிவராத்திரியன்று அவன் தன்னையறியாமல் இவ்விதம் செய்த சிவபூஜை, அவனுக்கு முக்தியைப் பெற உதவுகிறது.

நாமும் மகா சிவராத்திரியன்று உபவாசம் இருந்து, இரவு கண் விழித்திருந்து, ஈசுவரன் லிங்கோற்பவ மூர்த்தியாக அவதரித்த வேளையில், அவரைப் பூஜித்தால், நமக்கு நிச்சயமாக ஈசுவரானுக்கிரகம் கிடைக்கும்.

(நன்றி : ஞானபூமி)

**உற்சாகமான உழைப்பு இல்லாமல் உயர்ந்த வெற்றிஎதையும் சாதிக்க இயலாது**

*(எமர்சன்)*

# மகா சிவராத்திரி வரலாறு

மாசி மாதம் கிருஷ்ண பட்சச் சதுர்த்தசி கூடிய தினத்தன்று இரவு சிவபெருமானை வழிபடுவதற்குரிய சிறந்த இரவாகியதால் சிவராத்திரி என வழங்கலாயிற்று. சகல ஜீவான்மாக்களும் பரமபதியை வழிபட்டுப் பரமுத்தி அடைய உகந்த தினமானதால் ஜீவர்களுக்குச் சிவத்தை (நன்மையை) அளிக்கும் இரவு என்ற கருத்திலும் சிவராத்திரி என வழங்கலாயிற்று. இச் சிவராத்திரி தினத்துக்குக் காரணமாய் அமைந்த சம்பவங்கள் மூன்றுண்டு.

அவாந்தரப் பிரளயம், மகாப்பிரளயம் என பிரளயம் இரு வகைப்படும். நீரினால் வரும் பிரளயம் அவாந்தரப் பிரளயமாகும், நெருப்பினால் வரும் பிரளயம் மகாப் பிரளயமாகும். பிரம்மாவின் இறுதிக் காலமாகிய மகாப் பிரளயத்திலே சீவராசிகள் முழுவதும் சிவனிடம் ஒடுங்கின. அவ்வமையம் உமையம்மையார் சிவபெருமானைப் பூசித்தார். மீண்டும் திருவருளால் படைப்புத் தொடங்கியது. அப்பொழுது தேவி, "எம்பெருமானே! தேவரீரை அடியேன் பூசித்தமையால் இவ்விராத்திரி 'சிவராத்திரி' எனப் பெயர் பெற்று விளங்க வேண்டும். இத்தினத்தில் விரதமிருந்து தேவரீரைப் பூசிப்பவர் இம்மையில் விரும்பிய போகங்களையும் மறுமையில் பேரின்பத்தையும் பெறக்கிருபை செய்தருளுக" என்று வேண்டினார். பெருங்கருணைக் கடலாகிய சிவபெருமான் அவ்வாறு கிருபை செய்தருளினார். (இவ் வரலாறு சிவரகசிய காண்டத்திற் கூறப்பட்டது.)

மற்றொரு சமயம் மாலும் அயனும் அகங்காரம் மேலிட்டுத் தாமே பரப்பிரமம் என்று தருக்குற்றுப் போர் புரிவாராயினர். அதனை அறிந்த சிவபெருமான் அவர்களின் அஞ்ஞானத்தை நீக்கியருளத் திருவுளம் கொண்டு அங்கே அவர்கள் காணும்படி ஒளிப்பிழம்பாகத் தோன்றியருளினார். "இவ்வொளிப்பிழம்பின் அடிமுடியை யார் காண்கின்றனரோ அவரே பரமபதி!" என்று ஆகாயத்தில் ஒரு அசரீரி வாக்கு எழுந்தது. உடனே 'அயன்' அன்ன வடிவம், கொண்டு முடியைக் காணவும் 'மால்' பன்றி வடிவங்கொண்டு அடியைக் காணவும் புறப்பட்டனர். ஆயிரம் ஆண்டுகள் சென்றன. முடியையேனும் அடியையேனும் காணலாற்றாதவர்களாய்த் தத்தம் வலிகுன்றி அகந்தை நீங்கிச் சோதிப்பிழம்பின் சமீபம் வந்து துதித்து நின்றனர்.

"எம்பெருமானே! நாம் தேவரீருடைய அடி முடியைக் காணவில்லை. சகல ஜீவான்மாக்களுக்கும் தாய் நீர்; தந்தையும் நீர்; உடன் பிறந்தவரும் நீர்; யாவற்றையும் காண்பவரும் நீர்; கேட்பவரும் நீர்; எல்லாக் காரியங்களையும் செய்விப்பவரும் நீர்; செய்பவரும் நீர்; யாவருக்கும் மூத்தவரும் நீர்; எல்லாவற்றிற்கும் மேலானவரும் நீர்; இதனை எவன் அறிகிறானோ அவன் சிவசாயுச்சிய பதவியை அடைகிறான்." என்று துதித்தனர். ( இருக்கு வேதம்)

இவ்வாறு துதிசெய்த அவர்களுக்குச் சிவபெருமான் அச் சோதியினின்றும் லிங்க ரூபமாய் அடியையும் முடியையும் காட்டாது ஒரு முகூர்த்த நேரம் காட்சி கொடுத்தருளினார். ஒளிப்பிழம்பு லிங்க ரூபமானதால் லிங்கோற்பவம் என்று நாமம் உண்டாயிற்று. மேலும், மாலும் அயனும் சிவபெருமானை வணங்கி "எம் பரமபிதாவே! எங்களுக்குக் காட்சி தந்தருளிய இப் புண்ணியதினம் "சிவராத்திரி" என்று பெயர் பெறும். இத் தினத்தில் விதிப்படி விரதம் அனுட்டிப்பவர்கள் இம்மையில் விரும்பிய பலன்களைப் பெற்று மறுமையிலும் நித்தியானந்த முத்தி பெற்றுய்யவும் திருவருள் பாலித்தல் வேண்டும்" என்று வேண்டினார்கள். பரம கருணைக் கடலாகிய சிவபெருமான் அவ்வாறு திருவருள் பாலித்தருளினார். இச்சம்பவம் நிகழ்ந்த தினமும், மகாப்பிரளயம் முடிந்து மீண்டும் திருவருளால் படைப்புத் தொடங்கும் தினமும் ஒன்றாகவே அமைந்தது. ஆகவே இதனைச் சிவராத்திரி புண்ணியகால உற்பத்திற்கு இரண்டாவது காரணமாகக் கூறுவர். (இச் சரித்திரம் ஸ்காந்தம் பரஸ்கர சங்கிதை முதலியவற்றில் விளக்கப்பட்டிருக்கிறது.)

ஒரு சமயம் ஒரு வேடன் வேட்டையாடுவதற்காகக் காட்டுக்குச் சென்றான். அங்கு வெகுநேரம் அலைந்து திரிந்தும் ஒரு மிருகமும் கிடைக்காமற் போகவே பசியினால் மிகவும் வாட்டமுற்றிருந்தான். அப்பொழுது சூரியன் அஸ்தமித்தது. காரிருள் எங்கும் சூழ்ந்து கொண்டது. வேடுவன் தனது வழியைத் தவறவிட்டுக் காட்டில் அலைந்து திரிந்து கொண்டிருந்தான். காட்டிலுள்ள வனவிலங்குகளின் இரைச்சல் அவனுக்கு மிகவும் அச்சத்தை உண்டாக்கியது. ஆகவே அண்மையிலுள்ள ஒரு மரத்தில் ஏறி அமர்ந்து கொண்டான். மிகுந்த பசியினாலும், அலைந்து திரிந்ததினாலும் நித்திராதேவி அவனை ஆட்கொண்ட போதிலும் மரத்திலிருந்து விழுந்து விடுவேனோ என்ற பயத்தினால் நித்திரை செய்யாதிருந்தான். பொழுது போக்குவதற்காக மரத்திலிருந்த இலைகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கிச் சிவ என்ற நாமத்தை உச்சரித்துக் கொண்டு கீழே போட்டான். முற்பிறப்பில் செய்த நல்வினை கூடும் காலம் வந்துவிட்டமையால், அவன் ஏறிய மரம் வில்வமரமாய் அமைந்தது. மரத்தடியில் ஸ்வயம்பிரகாசமான சிவலிங்கம் ஒன்றிருந்தது. வேடுவன் பறித்துப்போட்ட இலைகளெல்லாம் அந்த சிவலிங்கத்தின் சிரசிலே விழுந்தன. இவ்வாறிருக்கச் சூரியன் உதயமானான். அப்பொழுது அந்தச் சிவலிங்கம் சிறிது மேலே உற்பவித்திருந்தது. உடனே வேடுவன் பரமசிவனின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். கருணைக்கடலாகிய பரமசிவன் வேடுவனுக்கு உலகிற் பெறுதற்கரிய பேரின்பத்தைக் கொடுத்தருளினார். வேடுவன் தான் அன்று முழுவதும் உணவு அருந்தாமல் இரவு கண்விழித்து வில்வத்தினால் பூசை செய்ததினால் இந்நாள் சிவராத்திரி என்ற

பெயருடன் விளங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். கருணைக் கடலாகிய பரமசிவன் அவன் இச்சைக்கிணங்க அவ்வாறே ஆகட்டும் என அருளினார். இது நிகழ்ந்த தினமும், மகாப்பிரளய முடிவில் மீண்டும் திருவருளினால் படைப்புத் தொடங்கிய தினமும் ஒன்றாகவே அமைந்தது. ஆகவே இதனை இவ்வுத்தம புண்ணிய தினத்துக்கு மூன்றாவது காரணமாகக் கூறுவர். (இச்சரிதம் கல்பமஞ்சரியில் கூறப்பட்டுள்ளது.)

இந்தச் சிவராத்திரி புண்ணிய தினத்தில் பகல் முழுவதும் உபவாசம் இருந்து, இரவு நான்கு சாமங்களிலும் கண்விழித்துச் சிவதரிசனம் செய்ய வேண்டும். தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களை ஓதவேண்டும், அல்லது ஓதுவித்துக் கேட்கவேண்டும். நித்திரை விழிக்க இயலாத வயோதிபர்களும், நோயாளிகளும் லிங்கோற்பத்தி வரையிலாவது விழித்திருத்தல் வேண்டும். மறுநாட் காலை நீராடி, விபூதி, உருத்திராட்சம் அணிந்து சிவனையும் குருவையும் வணங்கிப் பாரணை செய்தல் வேண்டும். (பாரணை என்பது உபவாசத்துக்குப் பின் செய்யும் போஜனம்) இப்பாரணையில் உட்கொள்ளும் ஒவ்வொரு கவளமும் பலமுறை சிவநாமாவை உச்சரித்த பலனுக்கொப்பாகும். மறு நாட்பகலில் நித்திரை செய்யலாகாது.

சைவர்கள் யாவரும் இவ்விரதத்தை அனுஷ்டித்து அவனருளால் இம்மையில் சகல போகங்களையும் பெற்று, மறுமையில் சாயுச்சித்தைப் பெறுவார்களாக!

(நன்றி: சிவதொண்டன்)

---

**மாமன்றச் செய்தி**

# தவறான மதமாற்றத்தை தடுக்கும் சட்டத்திற்கு இந்து நிறுவனங்களின் மனப்பூர்வமான ஆதரவு

தவறான வழியில் மக்களை ஏமாற்றி நடக்கின்ற மத மாற்றங்களைத் தடுக்கும் வழிவகைகளை ஆராயவும், அதற்கு எதிரான சட்டமூலத்தை ஆதரிக்கவும், சட்டமூலத்திற்கு எதிரான மதத் துவேச நடவடிக்கைகளைக் கண்டிக்கும் வகையிலும் அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அவசரக் கூட்டமொன்று, 2003 பெப்ரவரி 8ம் திகதி சனிக்கிழமை மாமன்றத் தலைமையகத்தில் நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அகில இலங்கை இந்து மாமன்றம், இந்து சமய அலுவல்கள் அமைச்சு, இந்து சமய அலுவல்கள் திணைக்களம், விவேகானந்த சபை – கொழும்பு, மாளிகாவத்தை இந்து பொதுப்பணி மன்றம், கொழும்பு தமிழர் நற்பணி மன்றம், வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம், கொழும்பு மகளிர் இந்து மன்றம், உலக சைவப் பேரவை (இலங்கைக் கிளை) அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம், அகில இலங்கை ஐயப்ப தேவஸ்தானம், அன்னை ஆதிபராசக்தி இல்லம், சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கம், கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபை, இந்து கலாசார மன்றம், திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபை, வட்டுக்கோட்டை இந்து இளைஞர் சங்கம் (கொழும்புக் கிளை), ஈழத்து திருநெறி மன்றம், கொழும்பு 11. விவேகானந்தர் இளைஞர் விழிப்புணர்ச்சிக் கழகம், இராஜகிரிய இந்து தர்ம சமூக சேவா சங்கம், ஜிந்துப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில், கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம், தேவார பண்ணிசை மன்றம், நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம், தந்தை செல்வா நற்பணி மன்றம் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன், பல தனிப்பட்ட அன்பர்களும் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

இந்தக் கூட்டத்தின் போது, முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த பின்பு, பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. மதத் துவேச, இனத் துவேச முயற்சிகளை – குறிப்பாக 31.01.2003 அன்று அளுத்மாவத்தையிலுள்ள ஐயப்பன் தேவஸ்தான ஆலய புனிதத் தன்மையை மாசுபடுத்தும் வகையில் நடந்த சம்பவங்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

   மதத் துவேசத்திற்கு வித்திடும் எந்தவொரு சம்பவமும் நிகழாது உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதற்காக உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கவேண்டுமென வற்புறுத்துகின்றோம்.

2. உத்தேச மதமாற்றச் சட்டம் மதச் சுதந்திரத்திற்கு எதிரானதல்ல. ஆனால் தவறான வழியிலும் பலாத்காரமாகவும், ஏமாற்று வழிகளிலுமான மதமாற்றங்களைத் தடுப்பதே உத்தேச சட்டத்தின் நோக்கம் என்பதனை யாவரும் உணரவேண்டும். இதற்குச் சகல மதத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும் ஆதரவு வழங்க வேண்டுகின்றோம்.

3. சகல இந்துமத நிறுவனங்களும், சகல இந்து ஆலயங்களும் தவறான வழியிலான மதமாற்ற முயற்சிகளை முறியடிக்கும் வகையில் இந்து மக்களிற்கு உதவி புரிதல் இன்றியமையாதது.

4. தவறான வழிகளிலும் பலாத்கார முறைகளிலும் நடக்கும் மதமாற்ற முயற்சிகள் எதுவும் இந்து மக்களைப் பாதிக்கும் வகையில் நடந்தால் அதுபற்றி அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அல்லது இந்து சமய அலுவல்கள் அமைச்சின் கவனத்திற்கு உடன் கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுத்து அம்முயற்சிகளைத் தடுப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ள உதவுமாறு வேண்டுகின்றோம்.



# திருக்கேதீச்சரமும் மகா சிவராத்திரியும்



ஈழத்தில் பாடல் பெற்ற தலங்களில் திருக்கேதீச்சரமும் ஒன்றாகும். திருக்கேதீச்சர ஆலயம் மிகமிகப் பழைமையானது என்பதைத் திருஞானசம்பந்தர் தேவாரமும், சுந்தர மூர்த்திநாயனார் தேவாரமும் சான்றுகளாக அமைந்துள்ளன. திருஞான சம்பந்தர் சுவாமிகள் காலம் கி.பி. 3ம் நூற்றாண்டாகும். சுந்தர மூர்த்தி சுவாமிகளின் காலம் கி.பி. 7ம் நூற்றாண்டாகும்.

திருக்கேதீச்சர ஆலயம் வேதகாலத்திற்கு முந்தியது என்பதை இராகு கேது வரலாறுகள் மூலம் அறியக் கிடக்கின்றது. மோட்சத்தையும், பேரின்பத்தையும் தருவது மண்ணுலக சிவ வழிபாடாகும் என்பதைத் திருவாதவூரடிகள் அருளிய "புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே" என்ற அடிகள் மூலம் அறியக்கிடக்கின்றது.

அசுரரும் அமரரும் தேவாமிர்தம் எடுப்பதற்காகத் திருப்பாற் கடலைக் கடைந்த காலம் வேதகாலம். வேதகாலம் என்பது தேவர்காலம். அதற்கு முன்பே ஈழத்து மன்னார் மாவட்ட மாந்தையில் திருக்கேதீச்சரம் அமைக்கப்பட்டது என்பதை ராகு கேது தவமிருந்து சாப விமோசனம் பெற்ற வரலாறு வலியுறுத்துகின்றது. அக்காலந் தொடக்கம் புனித தலமாகவும் சாப விமோசனம் நீக்குமிடமாகவும், கிரகபீடை நீக்கும் தலதீர்த்த மாகிய பாலாவி காணப்பட்ட தெனலாம். இன்றிலிருந்து திருக்கேதீச்சரம் தோற்றப்பட்ட காலந் தொடக்கம் மகா சிவராத்திரி தினம் விசேடமாக அனுட்டிக்கப்பட்டது.

திருக்கேதீச்சரம் இராவணன் காலம். சோழர் காலத்திலும் வழிபாட்டுத் தலமாக இருந்தது. இராவணனின் ஆட்சிபீடக் காலத்தில் மாந்தை தலைநகரமாக இருந்தது. வீணைக்கொடி பறந்தது. திருக்கேதீச்சரமும் பல வீதிகள் கோபுரங்கள் உடைய மூர்த்தி, தலம், தீர்த்தம் உடையதாக இருந்தது.

சோழர் காலத்தில் மாந்தை புகழ்பெற்ற தலமாகக் காணப்பட்டது. புலிக்கொடி பறந்தது. கடல் கடந்து அராபியர் போன்ற வணிகர்கள் முத்து, நெல், இரத்தினம் போன்றவைகளைப் பெறுவதற்காக வந்தனர். இதனால் மாந்தை இந்தியாவின் திருப்பெருந்துறையோ என்று கணிக்கும்படி மாந்தைத் துறைமுகம் காணப்பட்டது.

காலங்கள் உருண்டோடின. அந்நியரின் வருகை ஏலம், கறுவா, மிளகு, கராம்பு முதலிய வாசனைச் சரக்குக்காக வந்தவர்கள், இலங்கையின் எழிலிலும் வருமானத்திலும் மயங்கி இலங்கையைத் தம் ஆட்சிக்குட்படுத்திய காலத்தில் 17ம், 18ம் நூற்றாண்டளவில் சைவசமய ஆலயங்கள் முற்றாக அழிக்கும் போது திருக்கேதீச்சரமும் முற்றாக அழிக்கப்பட்டது.

ஈழத்தின் சைவத்தமிழர் செய்த மாதவம் மீண்டும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், தவத்திரு சிவயோக சுவாமிகளின் ஆசியும் வாழ்த்தும் 1954 களில் ஆலயப் புனருத்தாரணம் செய்யப்பட்டது. மகா சிவராத்திரி தினமும் சிறப்பாக அனுட்டிக்கப்பட்டது.

1974 களின் பின் திருக்கேதீச்சர ஆலயப் பொலிவு மகோன்னதமாகக் காணப்பட்டது. சிவபெருமான் ஞானகுருவாக வந்து வாதவூரடிகளை தடுத்தாட் கொண்டு ஞான உபதேசம் அளித்த திருப்பெருந்துறைக் காட்சி போன்று திருக்கேதீச்சரம் காணப்பட்டது. சுந்தர மூர்த்தி நாயனார் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருக்கேதீச்சரப் பதிகத்தில் பாடிய செய்திகளின் பிரதிபலிப்பின் ஒருசில காணப்பட்டன. எம்பெருமானின் ஆனந்தத் தாண்டவ காட்சி, ஆலயச் சூழ்நிலைக்காட்சி, அலைகடலின் ஓசையின் காட்சி ஆலய மகோற்சவ காட்சி, சிவராத்திரி, திருவெம்பாக் காட்சிகளை வர்ணிக்க வர்ணிக்க பக்தி நதி பாலாவியுடன் மயங்கி எம்பெருமானின் மகாலிங்கத்தின் மீது பல்லாயிரக் கணக்கான குடநீராகச் சொரிந்து கொண்டே இருக்கும். மயில்கள் ஆட, மந்தி முழவு கொட்ட மான்கள் துள்ள பசுக்களின் முலைகள் தாமாக பால் தரையிற் சொரிய மாங்கனியின் சாறும் தேனும் மயங்க பக்த கோடிமக்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிய எப்படி வர்ணிப்பது.

சிவராத்திரி சிவனுக்குரியது. மாசிமாத அமாவாசைத் தினத்தன்று பஞ்சாட்சரமாகிய திருவைந்தெழுத்தோதி ஆகம ஆசாரத்துடன் திருக்கேதீச்சரத்தில் கண்விழிக்க இலங்கையின் மூலைமுடுக்குகளில் உள்ள மக்கள் ஒன்று கூடுவர். நாடும் வீடும் சிறக்க சைவம் தழைக்க சிவாராத்திரி தினம் திருக்கேதீச்சரம் சிவலோகத்தைவிட விஞ்சியதாகக் காணப்படும்.

கடந்த பத்தாண்டு காலத்தில் திருக்கேதீச்சர ஆலய நிலைமைகள் கண்ணப்ப நாயனார் எம்பெருமானின் கண்ணில் குருதி பாய்ந்த காலத்தில் கண்ணப்பர் பட்ட மீளாத்துயரைவிட விஞ்சியதாகும். மணிவாசகப் பெருமான், சிவபெருமான் கூலியாளாய்வந்து மண் சுமந்து அடிபட்ட போது வைகையாற்றங் கரையில் கண்ணீர் பெருக வீழ்ந்து புரண்டழுத நிலைதான் நினைவுக்கு வருகின்றது. சுற்றவர இருந்த மடங்களிலே, பசுக்கூட்டம், மயில் கூட்டம், மான்கூட்டம், குடிமனை நெருக்கம் ஏதுமின்றி எம்பெருமானின் கோபுர வானத்தையும் கடலலையையும் நோக்க 2002 ம் ஆண்டு சிவராத்திரி விழா நடந்தது. சனக்கூட்ட நெருசல், கடைகள் அதிகம். ஆனால் எம்பெருமானுக்கு, சிவலிங்கத்திற்கு அபிடேகம் முதலியன இல்லை. இனி வருங்காலம் மீண்டும் திருக்கேதீச்சர சிவராத்திரி விழா கண்விழிப்பு புத்துயிர் புதுப் பொலிவுகாண இலங்கை வாழ் சைவத்தமிழர் மனப்பூர்வமான ஒத்துழைப்பும், முக்கரண சுத்தியுடைய விசுவாசமான பக்தி வெள்ளம் பாயும் தவமும் கைகூட வேண்டும். ஆன்மீகம் ஆலயத்தை வளர்க்கட்டும்.

\- மாதாஜி



# ஈஸ்வரன் கோயில் கொண்ட திருத்தலங்கள்



த. மனோகரன்

சீதா பிராட்டியைத் தேடி ஆகாயமார்க்கமாக அனுமன் இலங்கைக்குப் புறப்பட ஆயத்தமானபோது இலங்கையடங்கிலும் சிவலிங்கங்கள் நிறைந்துள்ளதால் கவனமாக இலங்கை மண்ணில் கால் பதிக்குமாறு இராமபிரான் அனுமனுக்கு அறிவுறுத்தியதாக இராமாயண காவியத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. திருமூலரும் இலங்கையைச் சிவபூமி என்று குறிப்பிட்டுள்ளார். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் விஜயன் இலங்கைக்கு வந்தவேளை இங்கு பிரசித்தி பெற்ற ஐந்து சிவாலயங்கள் இருந்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கே யாழ்மாவட்டத்தில் நகுலேஸ்வரமும், வடமேற்கில் மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வரமும், மேற்கில் புத்தளம் மாவட்டத்தில் முன்னேஸ்வரமும் கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் திருக்கோணேஸ்வரமும், தெற்கில் மாத்தறை மாவட்டத்தில் தொண்டீஸ்வரமும் அவ்வைந்து சிவாவயங்களாகும். இவ்வைந்து சிவாலயங்களும் பஞ்சேஸ்வரங்கள் என்றும் பெர் பெறுகின்றன.

இலங்கைத் தீவின் நாலாபக்கங்களினும் எழுந்தருளி யுள்ள இந்து மக்களின் திருத்தலங்களான ஈஸ்வரங்களை அறிந்து கொள்வது அவசியமாகும். அவ்வகையிலே சில சிவாலயங்களின் விபரங்கள் இங்கு குறிப்பிடப்படுகின்றன.

## பசுபதீஸ்வரம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சியில் பருத்தித்துறை நகரில் பசுபதீஸ்வரம் அமைந்துள்ளது. பருத்தித்துறை சிவன் கோயில் என்றும் குறிப்பிடப்படும் இவ்வாலயத்தில் தினமும் ஐந்து காலப் பூசைகள் சிறப்பாக நடைபெறுவதுடன் ஆனிமாதம் சிவனுக்கு பதினாறு திருவிழாக்களும், ஆடி மாதம் அம்மனுக்குப் பத்து திருவிழாக்களும் நடைபெறுகின்றன.

பசுபதீஸ்வரர் மீது ஆறுமுகநாவலர் அவர்களால் பாடப்பெற்ற ஊஞ்சல் பாடல்களும், முத்துக்குமார சுவாமிக்குருக்களால் பாடப்பெற்ற பசுபதீஸ்வரர் அந்தாதியும் இவ்வாலயத்தின் சிறப்புக்குக்குக் கட்டியம் கூறுகின்றன.

## கணபதீஸ்வரம்

யாழ். மாவட்டத்தில் ஊர்காவற்றுறையில் கருவில் வீதியில் அமைந்துள்ளது சிறப்புமிக்க கணபதீஸ்வரம். தினமும் ஐந்து காலப் பூசைகள் நடைபெறும் இவ்வாலயத்தில் ஆண்டுதோறும் ஆனிமாதம் பதினைந்து நாட்கள் திருவிழாக்கள் நடை பெறுகின்றன. சிவனுக்குரிய சிறப்பு தினங்களில் பூசைகளும், அபிஷேகங்களும் நடைபெறுவதுடன் தைப்பொங்கல், தைப்பூச தினங்கள் மிகவும் விசேடமாக அமைகின்றன.

## கண்ணலிங்கேஸ்வரம்

யாழ் மாவட்டம் வலிகாமப் பிரிவின் வட்டுக்கோட்டையில் கண்ணலிங்கேஸ்வரர் கோயில் கொண்டுள்ளார். தினமும் காலையும், மாலையும் இருநேரப் பூசைகள் நடைபெறும் இவ்வாலயத்தில் ஆண்டு தோறும் ஆனிமாதத்தில் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாட்கள் நடை பெறுகின்றது. வருடத்தில் ஆறு அன்னதான வைபவங்கள் நடைபெறும் இங்கு தைப்பொங்கல், சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை என்பன விசேடமாகக் கொண்டாடப்படுகின்றன.

## அம்பலவாணேஸ்வரம்

யாழ் மாவட்டம் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் ஏழாலைக் கிராமத்தில் பிரசித்தி பெற்ற அம்பலவாணேஸ்வரம் அமைந்துள்ளது. ஏழாலைக் கிராமத்திலுள்ள சிறப்புமிகு ஏழு இந்துத் திருக் கோயில்களில் அம்பலவாணேஸ்வரமும் ஒன்றாகும்.

தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரை வருடப்பிறப்பு, ஆடிப் பூரம், சோமவாரம், திருவெம்பாவை நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும் இவ்வாலயத்தில் தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

## விஸ்வநாதீஸ்வரம்

யாழ்மாவட்டம் நவாலி வடக்கில் கோயில் கொண்டுள்ள விஸ்வநாதீஸ்வரருக்கு தைபூசம், திருவெம்பாவை, சோமவாரம் ஆகிய நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. தினமும் இரு காலப் பூசைகள் நடைபெறும் இவ்வாலயம் நவாலியூர் சோமசுந்தரப் புலவரால் ஊஞ்சல் பாட்டு பாடப் பெற்ற புண்ணிய தலமாகும். விசாலாட்சி அம்மனுடன் விஸ்வநாதீஸ்வரர் இங்கு எழுந்தருளி அருள் பாலிக்கின்றார்.

## மகாலிங்கேஸ்வரம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப் பற்று பிரதேச செயலகப் பிரிவில் கொக்குத் தொடுவாய் கிராமத்தில் மகாலிங்கேஸ்வரர் கோயில் கொண்டுள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சிறப்புப் பெற்ற இச்சிவாலயத்தில் தினமும் இரண்டு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. சிவனுக்குரிய சிறப்புத் தினங்களில் உற்சவங்கள் நடைபெறுகின்றன. மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம், ஆனி உத்தரம் உட்பட ஒவ்வொரு மாதமும் வரும் சிறப்புத்தினங்களில் சிறப்புவழிபாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

## தக்கயாகேஸ்வரம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் கோட்டை முனையில் தக்கயாகேஸ்வரம் அமைந்துள்ளது. கிழக்கிலங்கையின் பிரசித்தி பெற்ற இச்சிவாலயத்தில் வெள்ளிக் கிழமைகளில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. பழமை வாய்ந்த இவ்வாலயக் காவியத்தில் முதலாம் கஜவாகுவின் சோழநாட்டுப் படையெடுப்பு பற்றிக் கூறப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

ஆண்டு தோறும் ஆடிப் பௌர்ணமியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் திருவிழா ஏழாம் நாள் தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைகின்றது.

## செம்பீஸ்வரம்

திருகோணமலை மாவட்டத்தில் குச்ச வெளி பிரதேச செயலகப் பிரிவில் செம்பிமலை என்னும் இடத்தில் செம்பீஸ்வரர் கோயில் கொண்டுள்ளார். செம்பிமலை, குச்சவெளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் சிறப்பு மிகு வழிபாட்டுத்தலமான இச்சிவாலயம் திருமலை மாவட்டத்திலுள்ள பழம் பெரும் சிவாலயங்களில் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது. சிவராத்திரி தினம் சிறப்பாகக் கொண்டாடப்படும் செம்பீஸ்வரர் திருக்கோயிலில் ஏனைய முக்கிய தினங்களினும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

## பாசுபதேஸ்வரம்

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேச செயலகப்பிரிவிலுள்ள பனங்காடு கிராமத்தில் பழமை வாய்ந்த சிவாலயமாக பாசுபதேஸ்வரம் விளங்குகின்றது. பக்தர்கள் துயர்களையும் பாசுபதேஸ்வரருக்கு தினமும் மூன்று காலப் பூசை நடைபெறுகின்றது. அத்துடன் ஆண்டு தோறும் ஆவணி மாதத்தில் தொடர்ந்து ஆறுநாட்கள் திருவிழாக்கள் நடை பெறுவதுடன் சிவனுக்குரிய சிறப்புத்தினங்களில் பூசைவழிபாடுகள் நடைபெறுகின்றன.

## மீனாட்சி சுந்தரேஸ்வரம்

இலங்கையின் தென் மாகாணத்தின் தலைநகரான காலி மாநகரில் மிகப் பழமை வாய்ந்த மீனாட்சி சுந்தரேஸ்வரம் அமைந்துள்ளது. பாண்டிய மன்னர்களால் நிறுவப்பட்டதாகக் கருதப்படும் இச்சிவாலய வாயிலின் மேற்புறத்தில் பாண்டியரின் இலச்சினையான மீன் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமம் செல்லும் வழியில் பக்தர்கள் மீனாட்சிசுந்தரேஸ்வரரையும் தரிசித்துச் செல்வது வழக்கம். மிகப்பெரிய நந்தியுடன் இலங்கும் இவ்வாலயத்தில் சகல இந்து சமய நன் நாட்களிலும் சிறப்பாகப் பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த மீனாட்சி சுந்தரேஸ்வரம் தென்னிலங்கையில் இந்துக்களின் பண்டைப் பெருமைக்குச் சான்று பகர்கின்றது.

## திருநந்தீஸ்வரம்

கொழும்பு மாவட்டத்தின் தென்பகுதியில் இரத்மலானையில் உள்ளது திருநந்தீஸ்வரம். கோட்டை இராச்சியம் நிறுவப்படு முன்பே பலநூற்றாண்டு காலம் பழமைவாய்ந்த இச்சிவாலயம் 1518 இல் போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்டதாயினும் இன்று மீண்டும் முன்னைய பெருமையை நிலைநிறுத்தக் கூடியதாக எழுச்சி பெற்றுவருகின்றது. தைப்பொங்கல், மகாசிவராத்திரி, நவராத்திரி ஆகிய தினங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வரும் இப் பழமைமிகு சிவாலயம் பற்றி 1454இல் ராகுலதேரர் என்ற பௌத்ததுறவி சலலிஹினி சந்தேசய (பூவைவிடுதூது) என்ற தனது சிங்கள காவியத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த ஈஸ்வரன் கோயிலில் மக்கள் விரும்பும் இனிமையான தமிழில் தோத்திரம் பாடுவார்கள் என்று 1454 இல் அவர் குறிப்பிட்டுள்ளமை இப்பகுதியில் இந்து சமயத்தினதும், தமிழ் மொழியினதும் பழமைக்கு ஆதாரமாயுள்ளது.

## அருணாசலேஸ்வரம்

கொழும்பு மாநகரின் வடக்கே கடலையண்டிய முகத்துவாரத்தில் அருணாசலேஸ்வரர் பர்வதவர்த்தனி அம்பாளுடன் கோயில் கொண்டுள்ளார். காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட சிவலிங்கம் மூலமூர்த்தியாக விளங்குகின்றது.

நித்திய நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெறும் இச்சிவாலயத்தில் சிவனுக்குரிய சிறப்புத்தினங்களில் விசேடவழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. சேர். பொன். அருணாசலம் அவர்களின் நற்பணியால் இந்துப் பெருமக்களுக்குக் கிடைத்த திருத்தலம் அருணாசலேஸ்வரமாகும்.

## சோமசுந்தரேஸ்வரம்

கொழும்பு செட்டியார் தெருவில் இன்று முத்து விநாயகர் கோயிலாகத் திருப்பெயர்பூண்ட ஆலயமே பழம் பெருமை கொண்ட சோமசுந்தரேஸ்வரம் ஆகும். 1794இல் முத்துக் குளிக்கச் சென்றவர்களிடம் கடலில் கண்டெடுக்கப்பட்ட விநாயகர் இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டதால் முத்து விநாயகர் என்ற பெயர் வழக்கில் வந்துள்ளது. எனினும் பண்டைய சிவலிங்கம், நந்தி ஆகிய திருவுருவங்கள் இன்றும் சிறப்பாக வழிபாட்டிற்குரியவை யாயுள்ளன. நித்திய பூசைகள் சிறப்புற நடைபெறும் இவ்வாலயத்தில் சகல இந்து சமய விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. பலநூறு ஆண்டுகளாக கொழும்பு மாநகரில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் சோமசுந்தரேஸ்வரர் கொழும்பு மாநகரின்இந்து சமயத்தவரின் பண்டைய சிறப்பைத் தெளிவாக்கி நிற்கின்றார்.

## இலங்காதீஸ்வரம்

இலங்கையின் மத்திய மலை நாட்டின் நுவரேலியாவில் மலையுச்சியில் கோயில் கொண்டு அருளாட்சி செய்யும் சிவபெருமான்திருநாமம் இலங்காதீஸ்வரர் ஆகும். புனித நர்மதா நதியில் கண்டெடுக்கப்பட்ட சுயம்பு லிங்கமாக இலங்காதீஸ்வரர் அங்கு காட்சி தருகின்றார்.

மூன்று கால நித்திய பூசைகள் நடைபெறும் இவ்வாலயத்தில் தைப்பூசம், சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை உள்ளிட்ட சகல புனிததினங்களும் பூசைவழிபாடுகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.



# தமிழ் நாட்டில் சிவ வழிபாடு



*திருமதி உ. சுரேந்திரகுமார்*
*யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி*

சைவம் சிவனுடன் சம்பந்தபந்தமானது என்று திருமூலர் சைவத்துக்கு இலக்கணம் கூறுகிறார். சிவனுடன் ஒன்றியிருப்பதாகிய ஒருநிலையை எடுத்துக் கூறும் சமயநெறியையே சைவம் என்று குறிப்பிடுகின்றார். சிவவழிபாடு மிகப் பழைய தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்கும் முற்பட்டது எனலாம். தொல்காப்பியத்தில் வரும் கந்தழி என்னும் சொல்லும் தெய்வத்தையே குறிக்கும். "இறைவன்" முழுமுதற் கடவுள், சுதந்திரமுடையவன் கடந்து நிற்பவன் என்னும் பொருள்களை இச்சொல் குறிக்கும் என்று நச்சினார்க்கினியார் கூறுகிறார்.

திருக்குறள் தனது முதல் அதிகாரத்தில் இறைவனுடைய இயல்புகளை எடுத்துக்கூறுகின்றது. உலகில் நிறைந்தும் அதனைக் கடந்தும் அதனோடு உடனாயும் இருப்பவன் இறைவன் தூய அறிவினன்; விருப்பு வெறுப்பு அற்றவன்; ஒப்பற்றவன்; அருள் மிகுந்தவன்; அறவடிவினன்; உயர்குணங்களை உடையவன்; எங்கும் நிறைந்திருப்பவன் என்று கூறுகின்றது.

சங்ககாலத் தொகைநூல்களுள் சிவன் திருமால் முதலிய கடவுளரைப் பற்றிய குறிப்புக்களைக் காண்கின்றோம். காவிரிப் பூம்பட்டினம், மதுரை, வஞ்சி முதலிய பெருநகரங்களில் இக்கடவுளர்க்குரிய கோயில்கள் இருந்தன. எட்டுத்தொகை நூல்களுள் அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை ஆகிய ஐந்து நூல்களில் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிவனைப்பற்றியே அமைந்துள்ளன ஆயின் இப்பாடல்கள் பிற்காலத்தைச் சார்ந்தவை. சங்க நூல்களில் சிவனைப் பற்றிய குறிப்புக்கள் விரிவாக வந்துள்ளன. சடைமுடி உடையவன், முக்கண்ணன், நீலமணி மிடற்றன், முழு முதற் கடவுள், மாதொருபாகன், கங்கை அணிந்தவன், ஆழிந்தற் கடவுள், ஆலமரத்தின் நிழலில் அமர்ந்தவன் என்றெல்லாம் இந்நூல்கள் குறிப்பிடுகின்றன.

சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரண்டு காப்பியங்களும் சங்க இலக்கியமாகிய பத்துப்பாட்டுள் ஒன்றான மதுரைக்காஞ்சியும் பல்வேறு தெய்வங்களுக்கிடையில் சிவபெருமானுக்கே முதலிடத்தை வழங்குகின்றன "பிறவாயாக்கைப் பெரியோன்" என்று சிலப்பதிகாரமும் "நுதர்விழி நாட்டத்து இறைவன்" என்று மணிமேகலையும் கூறுகின்றன. மதுரைக் காஞ்சி சிவபெருமானுக்கு முதன்மை தந்து அவனே ஐந்து பூதங்களைத் தோற்றியவன் என்று கூறுகிறது.

ஐந்தெழுத்து மந்திரத்தைப் பற்றி முதன் முதலில் குறிப்பிடும் தமிழ் நூல் சிலப்பதிகாரம் ஆகும். இவ்வைந்தெழுத்து மந்திரம் என்றும் அது வேதத்தில் வருவதாகவும் சிலப்பதிகாரம் கூறுகிறது. செங்குட்டுவன் செஞ்சடைவானவன் அருளின் விளங்க வஞ்சித் தோன்றிய வானவன் என்றும் அவன் சிவனடியைப் போற்றினான் என்றும் அது குறிப்பிடுகிறது.

திருமந்திரத்தின் ஆசிரியராகிய திருமூலர் பல்லவர் காலத்தின் தொடக்கத்தில் வாழ்ந்திருந்தார் என்று கொள்ளலாம் திருமந்திரத்தின் ஐந்தாம் தந்திரத்தில் அவர் சைவப் பிரிவுகள் பலவற்றையும் குறிப்பிடுகிறார். 'அகத்தசைவம்', கடுஞ் சுத்தசைவம் மார்க்க சைவம், சுத்த சைவம் என்று அவற்றை வகைப்படுத்தித் தருகின்றார். இவற்றில் இருந்து பல்லவர் ஆட்சியின் தொடக்க காலத்திலேயே சிவவழிபாடு இருந்தது என்பதும் பெறப்படுகின்றது. தமிழகத்தின் நான்கு, ஐந்து, ஆறு ஆகிய நூற்றாண்டுகளில் சைவத்தின் வளர்ச்சியை திருமந்திரத்தைக் கொண்டே அறிய முடிகிறது, இதனை அடுத்து பல்லவர்கள் ஆட்சியில் மகேந்திர வர்மன் (கி.பி 600 – 630) காலமுதல் அபராஜித வர்மன் கி.பி (875 – 883) காலம் வரை நீடித்தது. அவர்கள் சிவனுடைய வாகனமாகிய நந்தியை அரச இலச்சினையாக ஏற்றுக்கொண்டார்கள். பிற்காலப் பல்லவர்களில் சிலர் வைணவ சமயத்தைச் சேர்ந்தாலும் பல்லவர் ஆட்சி முடியும் வரை நந்தி முத்திரையே அரச இலச்சினையாக இருந்து வந்தது. எனவே சைவமே பல்லவர் காலத்து அரசாங்கச் சமயமாக இருந்து வந்தது எனலாம்.

பல்லவ மன்னனாகிய மகேந்திரவர்மன் முதலில் சமணனாக இருந்து பின்னர் சைவனாக மாறியவன். சைவ சமயாசாரியர்கள் நால்வருள் ஒருவராகிய திருநாவுக்கரசரே அவனைச் சைவத்துக்கு மாற்றியவர். அவ்வரசன் சமய மாற்றத்திற்குப் பிறகு பல கோயில்களை எழுப்பினான். அவனே சைவத்தை அரசாங்கச் சமயமாக மாற்றியவன். அவனுடைய பேரனாகிய பரமேசுவரன் (கி.பி 660 – 680) கூரம் என்னும் ஊரில் ஒரு சிவன் கோயிலை உருவாக்கினான். மாமல்லபுரத்தில் கணேசர் கோயிலிலுள்ள அவனது கல்வெட்டு "சிவன் தனக்கு மேலாக எவரும் இல்லாதவன்; அவன் பிறப்பிலி; சிவனை உள்ளன்புடன் வழிபடுபவன். உருத்திரனை வணங்காத நெஞ்சினர் ஆறுமுறை சபிக்கப்பட்டவராவர்" என்று கூறுகிறது.

அவனுடைய மகனாகிய இராசசிம்மனே கி.பி 680 – 700 காஞ்சிபுரத்தில் புகழ்பெற்ற கைலாசநாதர் கோயிலைக் கட்டியவன் அக்கோயிலில் கல்வெட்டுக்களும் புராணக் கதைகளை விளக்கும் சிற்பகாட்சிகளும் நிறைந்துள்ளன. அதிலுள்ள கல்வெட்டுக்களில் ஒன்று அவனைப் பற்றிச் "சிவ சூடாமணி, சங்கர பக்தன், ஆகமப்

பிரியன், சிவபெருமானைத் தனக்கு அடைக்கலமாகக் கொண்டவன், சைவ சித்தாந்த நெறியில் நிற்பவன், அதையே தனக்குத் துணையாகக் கொண்டவன், சிவபெருமானைத் தலையில் சூடியவன் என்று குறிப்பிடுகிறது.


பல்லவர் காலத்தில் சிவநெறியே அரசாங்கச் சமயமாக இருந்தது. அவர்கள் சிவன் கோயில்களைக் கட்டினார்கள். அதன் மூலம் சைவசமயத்தைப் பரப்பினார்கள். முதன் முறையாகப் பல்லவர்களது கல்வெட்டில் "சைவசித்தாந்தம்" என்னும் தொடரைக் காண்கிறோம். சிவனடியார்களாகிய நாயன்மார்களுள் பெரும்பாலோர் பிற்காலப் பல்லவர் காலத்திலேயே வாழ்ந்தனர். எனவே அந்தக் காலத்தில் சிவ வழிபாடு பரவியிருந்தது என்றும் கொள்ளலாம். பிற்காலத்தில் 13ஆம் நூற்றாண்டில் மெய்கண்டாரால் வகுத்தளிக்கப்பட்ட சைவசித்தாந்தக் கருத்துக்களின் விதை பல்லவர் காலத்தில் தூவப்பட்டது எனலாம்.

பிற்காலப் பல்லவர் காலத்தில் வாழ்ந்த பெரும்பாலான நாயன்மார்கள் சிவபெருமானிடம் தாம் கொண்டிருந்த அன்பையும் சிவ வழிபாட்டில் மேற்கொள்ளவேண்டிய நெறிமுறைகளையும் தம்பாடல்களில் காட்டியிருந்தனர். இந்தப்பாடல்கள் திருமுறைகளாகப் பின்னர் தொகுக்கப்பட்டன சைவ சித்தாந்தத்தை முடிந்த முடிபாக எடுத்துக்காட்டி நிலை நிறுத்திய மெய்கண்டார் காலம் வரை சைவ சமயம் எப்படியிருந்தது என்பதை இந்தத் திருமுறைகள் தாம் காட்டுகின்றன.

---



# குரு பக்தி




*எஸ் ரமேஷ் (உப அதிபர்)*

*குரு / நொட்டிங்ஹில் தமிழ் வித்தியாலயம், மாவத்தகம*


இறைவனை விட குரு பெரியவர். இறைபக்தியை விட குருபக்தி மேலானது. இந்த விடயம் நீண்ட நாட்களாக பலரிடையே சந்தேகத்தை எழுப்பும் வினாவாக உள்ளது.

ஆம். இறைவனை நாம் கண்களாற் காண முடியாது. நாம் எந்நேரமும் பார்க்கக் கூடியவர். தூய மனத்துடையவராகவும், ஞானமுடையவராகவும், எந்நேரமும் எம் உயர்ச்சி பற்றியே சிந்திப்பவராயும் உள்ளவர் குரு. அப்படிப்பட்ட குரு எமக்கு அமைந்து விட்டால், இறைவனிடம் இருந்து எமக்குக் கிடைப்பது குரு மூலம் கிடைத்து விடுகின்றது. எனவே இறைவன் மீது செலுத்தும் பக்தியை குரு மீதும் செலுத்து என்பதை எமக்குக் கூற எம் முன்னோர்கள் கையாண்ட வழியே இது.

இந்த உலகமே இறைவன் திருவடி பற்றி உள்ளமை யாமறிந்த விடயம். இறைவனிடத்தில் இருக்கின்ற அனைத்து உத்தம குணங்களும் குருவிடம் உண்டு. இறைவன் தூய்மையானவர். எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர். அந்த இறைவனை எம்மாற் காண முடியாது. எனவே இறைவன் வடிவாக உள்ள குருவின் பாதார விந்தங்களைப் பற்றினால் இறைவழிபாட்டின் மூலம் கிடைக்கும் அனைத்து அனுகூலங்களும் எம்மை வந்தடைகின்றது. அதனால் குரு பக்தியானது மேலானது என எம் முன்னோர்கள் எமக்கு இயம்பி உள்ளனர்.

எம்மிடையே குருபக்தி இருக்க வேண்டும். ஆனால் நாம் தெய்வத்தை மறக்கக் கூடாது. ஏனெனில் அந்தக் குருவையும் எம்மையும் இணைத்து வைப்பவனே அந்த இறைவனாவான். தெய்வ அனுக்கிரகம் எமக்கு இல்லாவிட்டால் நாம் எப்படி நல்ல குருவைப் பெறுவது? அது முடியாத விடயம்.

*"துர்லபம் த்ரயமேவைதத் தேவானுக்ரஹ ஹேதுகம்*
*மனுஷ் யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷ ஸம்ச்ரய"*

தெய்வ அனுக்கிரகத்தால் மனிதனுக்குக் கிடைக்கின்ற முக்கியமானவை மூன்று உள. ஒன்று மனிதப்பிறவி, இரண்டாவது சத்தியத்தை அறிந்து கொள்ளல், அடுத்தது சிறந்த குரு ஒருவர் கிடைப்பது ஆகும். அந்தக் குருவுக்கு குரு, அவருக்கு குரு என நாம் எண்ணிப் பார்த்தால் இறுதியில் இறைவனே அனைவருக்கும் குரு ஆவான். எனவே தான் பரம்பொருளாகிய குரு, எமது குருவின் வடிவில் வந்து எமக்கு உபதேசிக்கின்றான். காலத்தால் கட்டுப்படாத ஈசனே அனைவருக்கும் குரு. எனவே குருவின் மீது நாம் வைக்கும் பக்தி இறைவன் மீது வைக்கும் பக்திக்கு ஒப்பாகையால் தெய்வ அனுக்கிரகம் எமக்கு தானாகவே வந்து சேரும்.

குருவை விட மேலானவர் இல்லை. குருவிடம் நாம் பூரண நம்பிக்கை வைக்க வேண்டும். அது உண்மையான நம்பிக்கையாக இருக்க வேண்டும் குருவிடம் இறைவன் காணப்படுகின்றான். குருவின் மீது நாம் வைக்கும் பக்தி எம்மை முத்தி நிலைக்கு இட்டுச் செல்லும். நாம் சிவ நிந்தை புரிந்தால் இறைவன் எம்மை மன்னிக்கத் தேவையில்லை. குரு எம்மை மன்னித்து விட்டால் அந்த இறைவன் சினம் தணிந்து விடும். ஆனால் குரு நிந்தை புரிந்த பின்னர் இறைவனிடம் சென்று மன்றாடினாலும் ஏழேழு ஜென்மத்துக்கும் அப்பாவம் எம்மைத் தொடரும்.

குரு பக்தியானது மிகவும் விசேடமானது. நல்ல குரு நாதர் எமக்குக் கிடைக்கவில்லை என்றாலும், எமக்குக் கிடைக்கும் குருவின் மூலம் நாம் இறைபக்தியின் உச்ச நிலையை அடைய

வேண்டும். எமது இறை பக்தியினால் இறைவனுக்கோ குருவுக்கோ எவ்வித இலாபமும் இல்லை. எமக்கே அதிக இலாபம்.

நாம் அனைத்திற்கும் ஆசைப்படுகின்றோம். சஞ்சலப்படுகின்றோம். மனதை உறுதியாக வைத்திருக்க முடியாதவர்களாக உள்ளோம். நாம், எப்போதும் தூய்மையாக, ஞானம் நிறைந்த இறைவனை நினைத்தால் அதே நிலையை நாமும் அடையலாம். ஒரு குருவை நாம் இந்த நிலையில் வைத்து நோக்கினால் எம் ஆன்மா பிரகாசிக்கும், உண்மையான ஆனந்த நிலை விளங்கும், எம் மனம் பக்குவப்படும். இதற்கு குரு பக்தியும், இறை பக்தியும் எமக்கு அவசியம். இதையே எம் சாத்திரங்கள் கூறுகின்றன.

குருவின் அனுக்கிரகத்தால் ஞானம் கிடைக்கும் என சாந்தோக்கிய உபநிடதத்தில் "ஆசார்யவான் புருஷோ வேத" எனக் கூறப்பட்டுள்ளது. ஆசாரியானைப் பெற்றவன் ஞானத்தை அடைகின்றான் என்பது அதன் பொருளாகும்.

கண்கள் கட்டப்பட்ட நிலையில் ஒருவன் பாலைவனத்தில் விடப்பட்டால் அவன் தன் இலக்கை அடைய முடியாது. பின் ஒருவன் வந்து கட்டை அவிழ்த்து போகும் வழியைக் கூறின் அவன் இலகுவாக தன் இலக்கை அடைவான். இது போலவே குருவின் உபதேசத்தால் நாம் எங்கிருந்து வந்தோமோ அங்கு போய்ச் சேர முடியும் என சாந்தோக்கிய உபநிடதத்தில் கூறப்பட்டுள்ளது.

ஒருவனுக்கு எத்தனை பெருமைகள் இருந்தாலும், தன் குருவின் பாதாரவிந்தங்களைப் பணியாவிட்டால் அதனாற் பயனில்லை.

எமது இதயத்திற்கு இன்பம் ஊட்டுவது இறைபக்தி. இறைவனிடமும், குருவிடமும் பக்தி செலுத்தினால் மனம் தானாகச் சாந்தமடைகிறது. மனம் குருபக்தியில் நிறைந்திருந்தால் உடனே பலன் கிடைக்கும். எமது அஞ்ஞானம் தேய்ந்து ஞானம் உதயமாகும் இடம்தான் குரு வீற்றிருக்கும் இடம்.

எமது ஆன்மா பிரம்மத்தோடு ஐக்கியப்படும் அதற்கு வழிகாட்டுவது குரு இதனாலேயே அனைத்து சமயங்களிலும் குரு பக்தி சிறப்பாக சொல்லப்பட்டுள்ளது.

*ஸத் வித்வான் உபஸ்ருப்யதாம்*
*ப்ரதிதினம் தத்பாதுகா ஸேவ்யதாம்*
*ப்ரஹ்மைகாக்ஷரம் அர்த்யதாம்*
*ச்ருதிசிரோவாக்யம் ஸமாகர்ண்யதாம்*


சத்தான, வித்தான குருவை வரிந்து கொள். தினமும் அவருக்கு பாத பூஜை செய், அவரிடமிருந்து உபதேசம், பிரணவ உபதேசம், உபநிடத, மஹா வாக்கிய உபதேசம் எல்லாம் வாங்கிக் கொள்வாயாக என்பதே இதன் பொருளாகும்.

எனவே நாம் குரு பக்தியிற் சிறந்து எல்லாம் வல்ல பரம்பொருளை மகிழ்வித்து, அவன் திருவடி எய்துவோமாக.

---

## மாமன்றச் செய்தி

# அமரர் வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரை



கொழும்பு விவேகானந்த சபையினதும், இந்து வித்தியா விருத்திச் சங்கத்தினதும் முன்னாள் தலைவரும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் துணைத் தலைவருமான அமரர் வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரை கடந்த ஜனவரி மாதம் 11ம் திகதியன்று மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்பு விவேகானந்த சபையினதும், இந்து வித்தியா விருத்திச் சங்கத்தினதும் அனுசரணையுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்கி பகவானின் சீடர் சுஜேய் கிருஷ்ணாஜி (தமிழ்நாடு) அவர்கள் "அன்றாட வாழ்வில் ஆன்மீகம்" எனும் பொருளில் பேருரையாற்றினார்.

மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் நடந்தேறிய மேற்படி வைபவத்தின்போது இந்து சமய அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அதரவு தேவையான பாடசாலை மாணவர்களுக்கு மாமன்றம் இலவச அப்பியாசப் புத்தகங்களை அன்பளிப்புச் செய்யும் ஆரம்ப நிகழ்வும் அன்றைய தினம் இடம்பெற்றது.

## தமிழ்ப் புதுவருடப் பிறப்பு

சித்திரை தமிழ்ப் புதுவருடம் வாக்கிய பஞ்சாங்கப்படி ஏப்ரல் மாதம் 14ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி 22 நிமிடத்திலும், திருக்கணிதப் பஞ்சாங்கப்படி நண்பகல் 12 மணி 17 நிமிடத்திலும், உதயமாகிறது. (இவை இப்பொழுது நடைமுறையிலிருக்கும் மாற்றத்திற்குரிய நேரப்படியாகும்.)

இப் புதிய வருடத்தின் பெயர் சுபானு என்பதாகும். மொத்தமாகவுள்ள அறுபது வருடங்களின் சுற்றுவட்டத் தொடரில் இது 17வது வருடமாகும்.

# பொலனறுவைக் காலத் திருத்தலங்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சி

கி. புண்ணியமூர்த்தி B.A. Dip. in Edu, M.Ed
அட்/தேசிய கல்விக் கல்லூரி விரிவுரையாளர்

சோழராட்சியின் தொடக்கமாகிய கி.பி. 985 முதல் கலிங்க மாகோனின் ஆட்சி முடிவாகிய கி.பி. 1255 வரையுள்ள காலம் பொலனறுவைக் காலம் என அழைக்கப்படுகிறது. பொலனறுவைக் காலத்தில் பொலனறுவை நகரம் இராசதானியாக இருந்தது. இலங்கையின் இந்து மத வரலாற்றில் உன்னதமான காலம் பொலனறுவைக்காலம் ஆகும். இக்காலத்தில் பொலனறுவை, கந்தளாய், மண்டலகிரி, விக்கிரமசலாமேகபுரம் மாதோட்டம், திருகோணேஸ்வரம், பதவியா ஆகிய இடங்களிற் பல இந்துக் கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. பௌத்த மன்னர்களும் சைவ ஆலயங்களை அமைத்து வழிபாடு செய்தமைக்குச் சான்றுகள் உள்ளன. இக்காலத்தில் நானாதேசிகள் எனும் ஐந்நூற்றுவர் என்ற வணிககணம் மிகுந்த சிறப்புப் பெற்றிருந்தமையால் நாட்டின் பல பாகங்களிலும் ஆலயங்களை அமைத்திருந்தனர். கோயில்களுக்குத் தேவையான கற்பூரம், சந்தனம், சீனப்பட்டு, அகில் ஆகிய வற்றையும் இவர்களே இறக்குமதி செய்து விநியோகித்தனர். இவர்களுடன் கம்மாளர் போன்ற உற்பத்தியாளர்கள், வேளக்காரர், வீரக்கொடியோர் முதலிய படையினரும் தங்கியிருந்தமையால் பொலனறுவையில் பதினாறு இந்துக் கோயில்கள் தோற்றம் பெற்றன.

பட்டர், சிவப்பிராமணர், தேவகம்மியர் போன்றோர் ஆலயங்களில் பணிபுரிந்தனர். திருமுறைகளைப் பாடும் தேவரடியார்கள் நியமிக்கப்பட்டனர். மண்டலகிரியான நித்த விநோதபுரத்தில் (மெதிரிகிரிய) பண்டிதசோழஈஸ்வரம் எனும் ஆலயம் அமைக்கப்பட்டது. ஆதகட எனும் ஊரில் உத்தம சோழ ஈஸ்வரம் இருந்தமைபற்றிய குறிப்புகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. பாடல் பெற்ற தலமாகிய திருகேதீஸ்வரத்தில் புதிய கோயில் ஒன்று அமைக்கப்பட்டு ராஜராஜேஸ்வரம் எனப் பெயரிடப்பட்டிருந்தது. பாடல்பெற்ற கோகர்ணத்திலும் பல திருப்பணிகள் நடைபெற்றமைக்குச் சான்றுகள் உள்ளன. சோழப் பிரதானிகள் மச்சகேஸ்வரத்தில் விமானம் தொடர்பான திருப்பணி செய்ததற்கு இலங்கேஸ்வரதேவனின் சாசனத்தில் சான்றுகள் காணப் படுகின்றன. குளக்கோட்டன் கோணேஸ்வரக் கோயிலைப் புனருத்தாரணம் செய்து அங்கு திருமால், அம்மன் கோயில்களையும் அமைத்து அவ்வாலயங்களுக்கு நிலங்களையும் தானமாக வழங்கியதோடு கந்தளாய்க் குளத்தையும் திருத்தி அமைத்துள்ளான்.

இரண்டாம் கஜபாகு கோணேஸ்வரத்தில் பங்குனி உத்தரத்தில் திருவிழாச் செய்ய தசதானியங்கள் வழங்கியதுடன் ஆலய ஒழுங்குகளையும் திட்டமிட்டதற்குச் சான்றுகள் உள்ளன. அத்துடன் சோடகங்கதேவன் கோகர்ணத்திற்குச் சென்று புஷ்பாபிஷேகம் செய்தான் என்றும் சமஸ்கிருதக் கல்வெட்டு கூறுகிறது. கந்தளாய்ச் சிவன் கோயில் சோழலங்கேஸ்வரன் காலத்தில் அமைக்கப்பட்டு முதலாம் விஜயபாகு காலத்தில் விஜயராஜ ஈஸ்வரம் என அழைக்கப்பட்டது. அங்கு நங்கைசாணி எனும் பிராமணப் பெண் தனது இறந்த கணவனின் நினைவாகப் பொன், பணம் ஆகியவற்றை வழங்கி இறைவனுக்குத் திருவாபரணம் செய்தமைக்கான சான்றுகள் உள்ளன. பதவியாவில் ஆறு சிவாலயங்கள் அமைக்கப்பட்டமைக்கான ஆதாரங்களும் காணப்பட்டன.

## சோழராட்சிக் காலத்தில் பொலனறுவையில் தோற்றம் பெற்ற கோயில்கள்

சோழர் ஆட்சிக் காலத்தில் பொலனறுவை இராச்சியம் கைப்பற்றப்பட்டு சோழமண்டலம் எனும் பெயரில் சிறப்புப் பெற்றிருந்தது. பொலனறுவையை ஜனநாதமங்களம் எனப்பெயரிட்டு சோழ அரசர்கள் ஆட்சி செய்து வந்தனர். இக்காலப்பகுதியில் பல இந்துக் கோயில்கள் எழுப்பப்பட்டன. பொலனறுவையில் பதினான்கு இந்துக் கோயில்களின் அழிபாடுகள் காணப்படுவதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். இக்கோயில்களிற் சில பதினோராம் நூற்றாண்டில் சோழராட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டவையாகும். ஏனையவை 12ம், 13ம் நூற்றாண்டுகளிலேயே அமைக்கப் பட்டுள்ளன. இவை இந்தியக் கட்டிட, சிற்பக் கலைகளின் செல்வாக்கைக் கொண்டிருந்தன.

சோழராட்சிக்காலத்தில் பொலனறுவையில் அரச பிரதானிகள், வணிகர்கள், பிராமணர்கள், கம்மாளர்கள், படை வீரர்கள் எனப் பல்வகைப்பட்டோர் குடியேறி வாழ்ந்துள்ளனர். இவர்கள் தமது வழிபாட்டுத் தேவையை நிறைவுசெய்யப் பல சிவாலயங்களையும், விஷ்ணு கோயில்களையும், அம்மன் ஆலயங்களையும் அமைத்துள்ளனர். அவை பற்றிப் பார்ப்போமானால்

### 1. முதலாம் சிவாலயம்:

இவ் ஆலயம் பூரணமாகக் கற்றளியால் அமைந்ததாகும். பொலநறுவை நகரில் மையமாக அமைந்துள்ள இக் கோயில் ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்டதாகும். இக் கோயிலின் அந்தராளம், கர்ப்பக்கிருகம் என்பவற்றின் கூரைகள் கற்பாளங்களினால் அமைந்துள்ளன. திராவிடக் கலைப் பாணியைப் பின்பற்றியே இது அமைக்கப்பட்டுள்ளது. கர்ப்பக்கிருகத்தின் வெளிப்புறச் சுவர்களில் தேவ கோஷ்டங்களும் அரைத்தூண்களும் மிகவும் செம்மையாக அமைக்கப்பட்டுள்ளன.

இக் கோயிலிலுள்ள அதிஷ்டானம், தூண்கள், அரைத்தூண்கள், தேவ கோஷ்டங்கள் என்பன பிற்காலச் சோழர் கலைப்பாணியில் அமைக்கப்பட்டுள்ளன.

இவ் ஆலயத்தின் கர்ப்பக்கிரகம் வெளிப்புறத்தில் 18' சதுரமாக அமைந்துள்ளது. அந்தராளம் 8' நீளமும் 9' 9" உயரமும் கொண்டமைந்துள்ளது. அந்தராளத்தின் இரு பக்கங்களிலுமுள்ள வழிகளிலே தோரணங்களைத் தாங்கும் அலங்காரத் தூண்கள் காணப்படுகின்றன. இங்கு மூன்று பரிவாரத் தேவர் கோயில்கள் இருந்தமைக்கான அடையாளங்கள் உள்ளன. கர்ப்பக்கிருகத்தின் தென்மேற்கில் விநாயகர்கோட்டம் அமைந்திருந்தமைக்கான ஆதாரங்களும் உள்ளன. பல்வேறு வெண்கலப் படிமங்களும் இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

## 2. இரண்டாம் சிவாலயம்:

வானவன் மாதேவீஸ்வரம் என அழைக்கப்படும் இவ் ஆலயத்தின் நீளம் 66' 4" ஆகும். கோயிலைச் சுற்றி அமைக்கப் பட்டுள்ள சுவர் 96' நீளமும் 84' அகலமும் ஆகும். மதிற் சுவர்கள் செங்கற்களால் அமைந்துள்ளன. இக் கோயில் கருங்கல்கலையும், சுண்ணக்கல்லையும் கலந்து கட்டப்பட்டது. இதன் கர்ப்பக்கிரகம் சதுரமாக அமைந்துள்ளது. அதன் அதிஷ்டானம் 4' 1" உயரமானது. கர்ப்பக்கிரகத்தின் சுவர்கள் 12' உயரமானது. கர்ப்பக்கிரகத்தின் மேலமைந்த திரிதள விமானம் 31' 9" உயரம் கொண்டது.

கிழக்கு நோக்கி அமைந்துள்ள இவ் ஆலயத்தின் முன்புறத்தில் நந்திபீடம், பலிபீடம், கொடிமரமாகியன அமைந்துள்ளன. வடகிழக்கு மூலையில் செங்கல்லால் கட்டப்பட்ட பிள்ளையார் கோயிலுள்ளது. இலங்கையில் சோழராட்சியில் ராஜேந்திரசோழனின் தாயாராகிய வானவன்மாதேவியின் நினைவாக இவ் ஆலயம் அமைக்கப்பட்டது. இவ் ஆலயத்தின் விமானம், அர்த்த மண்டபம் என்பன நல்ல நிலையிலுள்ளன. கல்வெட்டுச்செய்திகளில் பிராமணர்கள் தேவரடியார்கள் முதலியோரைப் பற்றிய குறிப்புகள், ஆராதனைகள், அறக்கட்டளைகள் பற்றிய செய்திகள் என்பன காணப்படுகின்றன.

## 3. மூன்றாம் சிவாலயம்:

கிழக்கு நோக்கி அமைந்துள்ள இவ் ஆலயம் அளவில் சிறியதும், மதில்களால் சூழப்பட்டதுமான ஒரு கற்றளி ஆகும். இவ் ஆலயம் பிரகாரம், கர்ப்பக் கிருகம், மண்டபம், முக மண்டபம் முதலிய அமைப்புக்களைக் கொண்டதாக உள்ளது. அதன் பிரகாரம் 102' நீளமும் 66' அகலமும் ஆனதாகும். இவ் ஆலயத்தின் வெளிப்புறத்திலுள்ள மண்டபம் 22' நீளமும் 20' அகலமும் கொண்டதாகும்.

## 4. நான்காம் சிவாலயம்:

செங்கல்லினால் அமைக்கப்பட்ட அழகிய இவ் ஆலயத்தின் வளாகம் 136' நீளமும் 100' அகலமும் கொண்ட சுற்றளவினையுடையது. அதன் பிரகாரச் சுவர்கள் 2' அகலம் கொண்டது. கர்ப்பக்கிருகம் வெளிப்புறத்தில் 13', 6" அளவுடைய பக்கங்களைக் கொண்ட சதுரமாகும். அதன் நடுவில் பீடமொன்றில் இலிங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இவ் ஆலயத்தின் கிழக்கில் கோபர வாசலும், வீதி ஒன்றும் காணப்படுகின்றன. தெற்கிலும், மேற்கிலும் நுழைவாசல்கள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. இறையகம், மண்டபம் ஆகியவற்றிற்கிடையில் 15' நீளமான அந்தராளம் இருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன. மண்டபம் 22' நீளமும் 12',2" அகலமும் கொண்டமைந்துள்ளது. அதில் 6' உயரமான எட்டுத் தூண்கள் இருந்தன. அதன் முன்னால் 24' அகலமுடைய மகாமண்டபம் பதினாறு தூண்களோடு அமைக்கப்பட்டிருந்தது. அதன் வடக்கிலும் சாலைகள் இருந்தன. இக்கோயிலின் மேற்குப் பிரகாரச் சுவரின் பக்கமாக மூன்று பரிவாரத் தேவர் கோட்டங்கள் இருந்தன. தென்மேற்கு மூலையில் இறையகம், மண்டபம் ஆகிய இரு பகுதிகளைக் கொண்ட 18', 4" நீளமும் 9' அகலமும் கொண்ட சந்நிதானம்அமைந்துள்ளது. அதன் இறையகத்தில் இலிங்கம் அமைந்திருந்தது.

## 5. ஐந்தாம் சிவாலயம்:

இவ் ஆலயம் செங்கல்லால் அமைக்கப்பட்ட பல கட்டிடங்களின் தொகுதியாக உள்ளது. அதன் வளாகம் 117', 6" நீளமும் 75' அகலமும் கொண்ட சுற்றளவினையுடையது. 130' நீளமான இக்கோயில் ஆறு பகுதிகளையுடையது. பிரகாரச் சுவரின் நடுவிலமைந்திருந்த கோபுரவாசல் 8', 6" அகலமானது. அதன் இரு பக்கங்களிலும் 8', அளவுடைய பக்கங்களைக் கொண்ட சதுரமான அறைகள் இருந்தன. பதினாறு தூண்களைக் கொண்ட 24' நீளமும் 23' அகலமுமுடைய இரண்டாவது மண்டபத்தையடுத்து மகாமண்டபம் காணப்படுகிறது. அது 25' நீளமும் 22' அகலமுமுடையது. அதன் தெற்குப் புறத்தில் 9' நீளமும் 7' அகலமுமுடைய வீதி இருந்தது. அப்பிரதேசத்தில் நான்கு பரிவாரத் தேவர் கோயில்கள் காணப்பட்டன. வடமேற்கில் 36',4" உயரமுடைய விமானத்தைக் கொண்ட விநாயகர் கோயில் இருந்தது.

## 6. ஆறாம் சிவாலயம்:

ஐந்தாம் சிவாலயத்திற்கு அண்மித்ததாக உள்ள இவ் ஆலயம் 54' 6" நீளமானதாகும். இதில் மூலஸ்தானம், அந்தராளம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் எனும் பகுதிகள் உள்ளடங்கியுள்ளன. 40' நீளமும் 33' அகலமும் கொண்டதாக அதன் பிரகாரத்தின் சுற்றளவு காணப்படுகிறது. இவ் ஆலயத்தின் கர்ப்பக்கிரகம் ஒரு பக்கத்திற்கு 8' கொண்ட சதுரமாக உள்ளது. இவ் ஆலயத்தின் மண்டபம் 25' 6" நீளமும் 14' 9" அகலமும் கொண்டுள்ளதாகவுள்ளது. கோயில் வளாகத்தில் மூன்று பரிவாரத் தேவர்கோட்டங்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. விமானத்தின் பின் புறம் பிள்ளையார் கோயில் ஒன்றும் உள்ளது. அதில் விநாயகர் படிமமும் இருந்துள்ளது.

### 7. ஏழாம் சிவாலயம்:

இவ் ஆலயம் 64' 2" நீளமுடையது. இதன் கர்ப்பக் கிருகம் ஒரு பக்கத்திற்கு 8' 6" கொண்ட சதுரமாக உள்ளது. இங்கிருந்த மண்டபம் 20' 4" நீளமுடையது. கோபுர வாசல் 3' 9" அகலமுடையது. அதன் இரு பக்கங்களிலும் சிறிய கூடங்கள் இருந்துள்ளன.

பொலனறுவையில் அமைக்கப்பட்ட சிவாலயங்கள் சைவ சமய வளர்ச்சியை எடுத்து விளக்குவனவாக அமைந்துள்ளன. இங்கு சிவாலயங்களைத் தவிர அம்மன் ஆலயங்களும் விஷ்ணு ஆலயங்களும் அமைக்கப்பட்டு இந்து சமயம் வளர்ச்சி பெற்றிருந்தமைக்குப் பல சான்றுகள் உள்ளன.

பொலனறுவையில்அமைக்கப்பட்டிருந்த அம்மன் கோயில் 97' நீளமும் 92' அகலமும் கொண்ட பிரகாரத்தினுள் அமைக்கப்பட்டிருந்தது. பிரகாரச்சுவர்கள் கருங்கல்லினாலும், கோயில் செங்கல்லினாலும் அமைக்கப்பட்டிருந்தது. இக் கோயில் 47' 4" நீளமும் 21' அகலமும் கொண்டதாகும். இதன் அதிஷ்டானம் 4' 3" உயரமுடையதாகும். இதன் கர்ப்பக்கிரகத்தில் எட்டுக் கரங்கள் பொருந்திய மகிஷாசுரமர்த்தினியின் உருவம் நின்ற கோலத்தில் அமைந்திருக்கின்றது. இதன் மண்டபம் ஒரு பக்கத்திற்கு 21' கொண்ட சதுரமானதாகும். அதன் சுவர் 2' அகலமானது. அதன் அந்தராளம் 8' நீளமும் 7' 6" அகலமும் உடையதாகும்.

### இரண்டாம் விஷ்ணு கோயில்:

முதலாம் விஷ்ணு கோயில் அமைக்கப்பட்டிருந்த போதும் அது பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் இரண்டாம் விஷ்ணு கோயில் பொலனறுவை நகரின் வடக்கு வாசற் புறத்தின் அரண்களுக்கு அண்மையில் அமைந்த திடலில் அமைந்துள்ளது. அதில் கர்ப்பக்கிரகம், அந்தராளம், மண்டபம் ஆகிய அமைப்புக்கள் அடங்கியுள்ளன. இறையகத்தில் விஷ்ணுவின் படிமம் ஸ்தானகநிலையில் பத்மபீடத்தில் அமைந்துள்ளது. இப் படிமத்தில் நான்கு கரங்கள் உள்ளன. இது ஒரு கற்கோயிலாகும்.

### மூன்றாம் விஷ்ணு கோயில்:

பொலநறுவைநகரில் அம்மன்கோயிலுக்கு அண்மித்ததாக மூன்றாம் விஷ்ணு ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் சுற்றுமதில்களால் சூழப்பட்டதாகவும் 150' நீளமும் 100' அகலமும் கொண்ட பிரகாரத்தில் அமைந்ததாகவும் உள்ளது. கர்ப்பக்கிரகம், அந்தராளம், மண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டதாகவும் உள்ளது. இவ் ஆலயத்தின் மண்டபம் 29' நீளமும் 22' அகலமும் கொண்டதாகவும் அந்தராளம் 9', 2" நீளமும் 7', 4" அகலமும் கொண்டதாகவுமுள்ளது. இறையகத்தில் 3', 9" உயரமுடைய ஸ்தான நிலையிலுள்ள விஷ்ணுவின் படிமமும் காணப்பட்டுள்ளது.

### நான்காம் விஷ்ணு கோயில்:

பொலநறுவைநகரிலமைந்த இவ்வாலயம் 90' நீளமுடையது. அதன் சுற்றுப்பிரகாரம் 117' நீளமும் 69' அகலமும் உடையது. இறையகம் 13', 4" நீளமும் 6' 9" அகலமும் கொண்டது. அந்தராளம் 11" நீளமும் 6,9" அகலமும் கொண்டுள்ளது. பல கூடங்களுடன் கூடிய கோபுரவாசல் இவ்ஆலயத்தில் அமைந்துள்ளது அதன் சிறப்பம்சமாகும்.

### ஐந்தாம் விஷ்ணு கோயில்:

பொலநறுவை நகரத்தில் காணப்படும் ஐந்தாம் விஷ்ணு கோயிலில் கர்ப்பக்கிருகத்தில் ஆசனக் கோலத்தில் அமைந்துள்ள விஷ்ணுவின் படிமம் லக்ஷ்மி, ருக்மணி சகிதம் அமர்ந்துள்ளதாக அமைந்துள்ளமை இவ்வாலயத்தின் சிறப்பம்சமாக உள்ளது.

பொலனறுவை நகரிலமைக்கப்பட்ட சிவாலயங்கள், அம்மன் கோயில், விஷ்ணு ஆலயங்கள் என்பன இந்து சமயம் சோழராட்சிக் காலத்தில் ஈழத்தில் எழுச்சி பெற்றிருந்தது என்பதற்கு நிலையான ஆதாரங்களாக உள்ளன எனலாம்.

மதம் எங்கே உளது? சடங்குகளிலா? கிரியைகளிலா? இல்லை; இல்லை; அன்பினில் உளது. தூயஉள்ளன்பில் உளது. உள்ளமும் உடலும் தூய்மையற்ற ஒருவன் கோவிலுக்குச் சென்று சிவனை வழிபடுவதால் பெறும் பயன் என்ன? யாதுமில்லை. உடலும் உளமும் தூய்மையுற்ற ஒருவரின் வேண்டுதலையே இறைவன் அருள்வான். உடலும் உளமும் தூய்மையற்ற ஒருவரின் வேண்டுதல் ஏற்கப்படாது; அருள் பெறாது. அகவணக்கத்தின் அறிகுறியே புற வணக்கம். அகவணக்கமும் தூய்மையும் உண்மையானவை. இவையின்றிப் புறவணக்கம் யாது பயன் தரும்? எப்பயனும் தராது என்பதை நினைவிற் கொள்ளுவீர்களாக.

சுவாமி விவேகானந்தர்

தெய்வம் அமைத்த அமைப்பைச் சந்தோஷத்துடன்
ஒப்புக்கொள்வதுதான் உண்மையான பக்தி.
(ராஜாஜி)



# சோழப் பேரரசர் காலத்து சைவசமய வளர்ச்சி



மு. நடேசானந்தன் (B.A. Dip. in Edu.)
ஆசிரிய ஆலோசகர்
பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகம்

பல்லவர் - பாண்டியப் பேரரசுகளின் வீழ்ச்சிக்குப் பின்பு ஏற்பட்ட சோழப் பேரரசின் தோற்றம் கி.பி. 880ல் உதயமாகி கி. பி. 1279 வரை நிலை பெற்று நின்றது. சோழ பரம்பரையின் ஆக்கத்திற்கு வித்திட்டவன் சோழ குலத்தின் முதல் மன்னனான விஜயாலய சோழனே ஆகும். (கி.பி. 850 – கி.பி. 871) இம் மன்னன் தஞ்சையைக் கைப்பற்றித் தன் வெற்றியின் சின்னமாக நிசும்ப சூதினி என்ற கோவிலைக் கட்டுவித்தான். சோழ ஆட்சியில் ஏற்பட்ட அமைதியும் அரசர்களிடமிருந்த அஞ்சாமை, வீரம், கொடை, காலாவிநோத ஈடுபாடுகளும், சமயப் பொறையும், வைதீக சமயப் பற்றும் இக்காலம் பல்துறைகளிலும் உயர்ந்த இடத்தைப் பெற்றதால் பொற்காலமாகப் பரிணமித்தது.

விஜயாலயனுக்குப் பின்பு அவனது மகன் முதலாம் ஆதித்தன் (கி.பி. 871 – கி.பி. 907) முடிசூட்டிக் கொண்டான். இவன் அரசியல் ஆற்றலும் போர்த் திறனும், சோழ நாட்டை விரிவுபடுத்த வேண்டும் என்ற எண்ணமும் கொண்டவன். காவிரி ஆற்றின் இரு மருங்கிலும் சிவபெருமானது கற்றளிக் கோவில்கள் பல எழுப்பியவன். சோழ நாட்டின் நிலப்பரப்பு பல்லவரால் ஆளப்படுவதை மனம் பொறுக்காது பல்லவருடன் போர் தொடுத்து பல்லவர் ஆட்சியைக் கவிழ்த்து பல்லவ ஆட்சிக்குட்பட்டிருந்த தொண்டை மண்டலத்தைச் சோழ நாட்டுடன் இணைத்து கொண்டவனாவான். இவற்றைக் கன்னியாகுமரி கல்வெட்டுக் களிலும், செப்பேடுகளின் குறிப்புகளில் இருந்தும் அறிய முடியும்.

முதலாம் ஆதித்தனுக்குப் பின்பு அவனது மகன் பராந்தகன் (கி.பி. 907 – 955) முடிசூட்டிக் கொண்டான். தன் தந்தையின் சமாதியின் மேல் கோதண்ட ராமேசுவரம் என்ற கோவிலைக் கட்டுவித்தான். இவன் பாண்டியன் மீது போர் தொடுத்ததால் பாண்டியன் தனது நாட்டைக் கைவிட்டு இலங்கைக்கு ஓடினான்.

பராந்தகனுக்குப் பிறகு முதலாம் இராஜராஜன் அரசு கட்டில் ஏறும் வரை சுமார் முப்பது ஆண்டுகள் சோழ ஆட்சி சற்றுக் குழப்பநிலையில் காணப்பட்டது. பராந்தகனுக்குப் பிறகு கண்டராதித்தன், (கி.பி. 955 – 957) இரண்டாம் பராந்தகன் (சுந்தர சோழன் (கி.பி. 957 – 973), இரண்டாம் ஆதித்தன், உத்தம சோழன், முதலாம் இராஜராஜன் முதலாம் இராஜேந்திரன், முதலாம் இராஜாதி ராஜன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராஜராஜன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன், மூன்றாம் இராஜேந்திரன், கோப்பெருஞ்சிங்கன் (கி.பி. 1229 – கி.பி. 1278) ஆகிய பல சோழஅரசர்கள் அறவழியில் நின்று ஆட்சி புரிந்தார்கள்.

இந்த மன்னர்களுள் ஆட்சிச் சிறப்பாலும் சமுதாயப் பணியாலும், சமயத் தொண்டாலும் பெரிதாகப் பேசப்படுவது முதலாம் இராஜ ராஜன் ஆட்சிக் காலமாகும். பிற்கால வரலாற்று ஆசிரியர்கள் "சோழர்காலம் ஒரு பொற்காலம்" எனச் சிறப்பித்துக் கூறுவதற்கு வித்திட்டவன் இராஜ ராஜன் எனச் சுருங்கக் கூறலாம்.

## வரலாற்றுத் தடயங்கள் (Sources)

சோழப் பேரரசின் வரலாற்றை அறிவதற்கு எழுத்துச் சாசனங்களாக (Epigraphy) கல்வெட்டுக்கள் (Inseriptions) செப்புப் பட்டயங்கள் (Copper Plates) என்பனவற்றினாலும், பழங்காலக் கட்டிடங்கள் (Monuments) நாணயங்கள், இலக்கியங்கள், வெளிநாட்டார் குறிப்புக்கள், மெய் கீர்த்திகள் என்பனவற்றின் மூலமும் அறிந்து கொள்ள முடியும்.

### 1. எழுத்துச் சாசனங்கள் :

*அ) கல்வெட்டுக்கள் :* கோவிற் சுவர்களிலும், தனிக் கல்லிலும் அரசியல், சமயம், சமுதாயம், கொடை, போர், நிவந்தங்கள் முதலிய செய்திகளைப் பொறித்து வைப்பது. தஞ்சைப் பெருங்கோவிலில் இராஜராஜனுக்கு உரித்தான அறுபத்தொரு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

*ஆ) செப்புப் பட்டயங்கள் :* செப்புப்பட்டயத்தில் மன்னர்கள் மாத்திரம் சாசனம் செய்யும் மரபு காணப்பட்டது. தமிழிலும், சமஸ்கிருதத்திலும் அதிகமான செப்பேடுகள் காணப்படுகின்றன.

**2. பழங்காலக் கட்டடங்கள் :** குறிப்பாகத் தஞ்சைப் பெருங்கோவில், கங்கை கொண்ட சோழ புரம், தாரசுரம் கோவில், திரிபுவனக் கோவில் முதலிய ஆலயங்களைக் குறிப்பிடலாம்.

**3. நாணயங்கள் :** குப்தகால நாணயத்தில் காணப்படும் வீணை குப்த மன்னனின் இசை விற்பன்னத்தை காட்டுவது போல இராஜராஜனது காலத்து நாணயங்களில் உள்ள உருவத்தின் இடக்கையில் உள்ள திரிசூலம் போர்த்திறத்தையும், பக்தியையும், வலக்கையில் உள்ள தாமரை செல்வச்சிறப்பையும் காட்டும் எனக் கொள்ளப்படுகிறது. அத்தோடு குழலூதும் கண்ணன் உருவம் சோழரின் சைவ சமய நெறியையும் வைணவ நெறியையும் ஒருங்கே போற்றிய சமயப் பொறையைக் காட்டுகின்றது.

**4. இலக்கியம் :** பெரிய புராணம் சமய இலக்கியம் என்ற வகையில் செய்தியைத் தருகின்றது. ஒட்டக் கூத்தரின் தக்கயாகப்

பரணி, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், கம்பரின் கம்ப இராமாயணம், ஜெயங் கொண்டாரின் கலிங்கத்துப் பரணி, ஒட்டக்கூத்தரின் விக்கிரம சோழனுலா, குலோத்துங்கச் சோழனுலா, இராஜ ராஜ சோழனுலா என்ற மூன்று உலாக்களும் தரும் வரலாற்று செய்திகள் மூலம் சோழர்கால செல்வச் செழுமையையும் மன்னர் மாண்பையும், மக்கள் பெருமிதத்தையும், புலவர்களின் ஏற்றத்தையும், சைவ நெறியின் மேம்பாட்டையும் பெருமளவில் அறிந்து கொள்ளலாம்.

**5. வெளிநாட்டுக் குறிப்புக்கள் :** இவை நானாதேசியர், திசையாயிரத்து ஐந்நூற்றிருவர், மணிகிராமத்தார், அஞ்சு வண்ணத்தார் என்ற வணிகக் குழுக்கள், சீன நாட்டு யாத்திரிகர் செய்திகளும், அபுசாயிட் என்ற முஸ்லிம் எழுத்தாளரின் குறிப்புக்களும், ஸ்பெயின் நாட்டின் டுடேலா என்ற இடத்து யூதரான பெஞ்சமினின் குறிப்புக்களும் ஆகும்.

**6. மெய்க் கீர்த்திகள் :** இராஜ ராஜனே முதன் முதலில் மெய்க்கீர்த்திகள் எழுதுகின்ற வழக்கத்தை ஏற்படுத்தியவனாவான். மன்னர்களைப் பற்றிய உலகியர் சாதனங்களைக் கூறுகின்ற புகழுரையாக அமைந்ததே இதுவாகும்.

சோழர் காலத்துச் சமய நிலைபற்றி அறிவதற்குச் சிறந்த சான்றாக அமைவது சமய நிறுவன நிலைக்கு உயர்த்தப்பட்ட சோழர் காலக் கோவில்களாகும். இக்காலத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் ஸ்ரீநிவாச நல்லூரிலுள்ள கோரங்க நாதர் கோவில், கொடும்பாளூர் (புதுக்கோட்டை) என்ற இடத்திலுள்ள மூவர் கோவில், தஞ்சைப்பெருங் கோயில், கங்கை கொண்ட சோழ புரம், கும்பகோணத்திற்கு அண்மையில் உள்ள திரிபுவனத்தில் கம்பகரேசுவரர் கோயில், தரசுரத்தில் (தஞ்சாவூர் மாவட்டம்) ஐராசதேசுவரர் கோவில் போன்ற ஆலயங்களைக் குறிப்பிட்டாலும் சோழப்பேரரசின் வீரத்தையும், கலையுணர்வினையும், சமயப்பற்றினையும், பக்தியுணர்வினையும் வெளிப்படுத்துபவன தஞ்சைப்பெருங்கோவிலும் கங்கை கொண்ட சோழபுரம் ஆகும்.

முதலிலே தஞ்சைப் பெருங்கோவிலைப் பார்ப்போமானால் இதனைப் பேரரசனாகிய இராஜராஜனே கட்டுவித்தான். இது 500 அடி நீளமும் 250அடி அகலமும் கொண்ட பெருங் கோயிலாகும். அரசனே பேணி வளர்த்த சமுதாய அரண்களுள் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கட்டியதைத் தலையாயதாகக் கூறலாம். இவ் ஆலயம் பேரரசின் பெருமிதத்தையும், அவனது பேராண்மையையும் பிரதிபலிக்கின்றது. நல்ல இட வசதி உள்ள இடத்தில் கட்டப்பட்ட இவ்வாலயம் விமானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், நந்தி என்பன ஒழுங்குபடுத்தப்பட்டுக் காட்டப்பட்டன. இதன் நடு விமானம் 216 அடி உயரம் கொண்டது. இதில் 108 பரதநாட்டியக் கடவுளின் வடிவங்கள் காணப்படுகின்றன. விமானத்தின் உச்சியில் 80 தொன் நிறையுடைய ஒரே கருங்கல்லை உச்சியில் தாங்கி நிற்கின்றது. போகப் போக சிறுத்துக்கொண்டே போகும் விமானமானது 13 அடுக்குகளைக் கொண்டது. இவ்வாலய மூலவராகப் பிரகதீஸ்வரர் அமைந்துள்ளார். இவ்வாலயத்தில் ஒரு கல்லிலான நந்தியும், லிங்கமும் உண்டு. இவ்வாலயம் இராஜராஜீச்சுவரம், பிரகதீஸ்வரம், பெருவுடையார் பெருங்கோயில் என்று பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

பெருவுடையார் கோயிலின் திருச்சுற்றில் எழுபது தெய்வங்களின் பரிவாலயங்கள் காணப்படுகின்றன. தங்கம் , செம்பு கலந்த உலோகத்தில் செய்யப்பட்ட இந்த இறை உருவங்கள் பின்னாளில் வெளியே எடுக்கப்பட்டு விட்டன. தற்போது உள்ளவை தஞ்சை நாயக்கர் காலத்தில் உருவாக்கப்பட்ட வெண்கலத் திருவுருவங்களாகும்.

தஞ்சைப் பெருவுடையார் உமாபரமேஸ்வரி சமேதரராக இருக்க அரசனது மனைவி உள்ளிட்ட அரச குலத்தாரின் சிலைகளும் காணப்படுகின்றன. ஆலயச்சுவரில் அங்கு நடைபெறும் எல்லா காரியங்களும் சாசனங்களாகச் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இதனால் ஏராளமான சாசனங்கள் இக்கோயிலிற் காணப்படுகின்றன.

ஆலயங்களின் ஆதிக்கமும், அந்தணரின் மேலாதிக்கமும் கொண்ட ஒரு புதுமுறைச் சமய வழிபாட்டு முறையை இராஜ ராஜன் ஆரம்பித்து வைத்தான். இவனது காலத்திற்கு முன்பு உருவாக்கப்பட்ட கோயில்கள் "கோயில்", "தளி" என்று வழங்கிவர, இம்மன்னனது காலத்திலும் அதன் பின்பும் "ஈஸ்வரம்" என்ற பெயரிலே ஆலயங்கள் உருவாக்கப்பட்டன.

பெருவுடையார் கோயிலுக்கு 400 ஆடல் மகளிரைச் சேர்த்தான். இவர்களுக்காகத் தனித்தனி வீதிகள் அமைத்து இரு மருங்கிலும் வரிசை வரிசையாக வீடுகள் அமைத்துக் கொடுத்தான். இவர்கள் இசையிலும், கூத்திலும் வல்லவராக இருந்தனர். திருவலக்கிடுதல், மெழுகிடுதல், மலர்கொய்தல், மாலை தொடுத்தல், தேவாரம் திருவாசகம் ஓதுதல், நடனமாடுதல் என்பன இவர்களது தொண்டுகளாகும். இவர்களைத் தேவரடியார், தலைக்கோலிகள், தளிச்சேரிப்பெண்டுகள், பதியிலார், கோயிற் பிணாக்கள் என்ற பெயரால் அழைத்தார்கள். தேவரடியார்களைப் போலவே நட்டுவனார்களும் பாணர்களும் ஆலயத்தில் நியமனம் செய்யப்பட்டார்கள். அவர்களுக்கும் தானம் வழங்கப்பட்டன. தேவரடியார்கள் சாந்திக்கூத்து, ஆரியக் கூத்து, சாக்கைக் கூத்து, தமிழ்க் கூத்து, தெருக் கூத்து என்று பல கூத்துக்களையும் ஆடினார்கள். கூத்து ஆடுபவர்களைக் கூத்தப்பெருமக்கள் என அழைத்தனர். கூத்து இடம் பெறுவதற்காக ஆலயங்களில் நாடக சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. மார்கழி மாதத்தில் தேவரடியார் திருவெம்பாவை ஓதினர். வைணவ ஆலயங்களில் திருவாய் மொழி, திருப்பாவை ஓதப்பட்டன. இதற்காக அரசன் பல நிவந்தங்களை வழங்கினான். உடுக்கையடித்தும் தாளம் தட்டியும் தேவாரப் பதிகம் பாடுவதற்கும் பெருவுடையார் கோயிலில் 48 பிடாரர் (ஓதுவார்) நியமனம் செய்யப்பட்டனர்.

தஞ்சைப் பெருங்கோயிலுக்கு அரசனும் அரச குடும்பத்தினரும் பல நிவந்தங்களை வழங்கினர். அவர்களது நிவந்தங்கள் மட்டுமே கல்வெட்டிற் பொறிக்கப்பட வேண்டும் என இராஜராஜன் கட்டளை இட்டிருந்தான். அவன் மேலைச் சாளுக்கிய போரிலே வென்று பெற்ற தங்கம், வெள்ளி என்பவற்றையும்

பெருங் கோயிலுக்கு அளித்தான். 40 சதுர்வேதி மங்களங்கள் பெரும் கோயிலோடு தொடர்பு கொண்டிருந்தன. அவற்றுக்கும் அரசன் நிவந்தங்கள் வழங்கினான். கி.பி. 1014ல் ஈழத்தில் பல கிராமங்களை பெருங்கோயிலுக்கு இராஜ ராஜன் நிவந்தமாக வழங்கினான். அக்கிராமங்களில் இருந்து பல பொருட்கள் ஆலயத்திற்கு ஆண்டு தோறும் அனுப்பப்பட்டு வந்தன.

நிலவரி, சொத்துவரி, தண்டப்பணம், பிற மானியங்களையோ, அல்லது பிற அரசுகளையோ கைப்பற்றுவதால் பெறப்படும் சொத்துக்கள் என்பனவும் கேயிலுக்கே உரித்தாக்கப்பட்டன. அத்தோடு ஆலயத்திற்கு உரித்தான விளை நிலங்களில் இருந்து கிடைக்கும் வாடகை நெல்லும் ஆலயத்திலே சேமிக்கப்பட்டது. கொங்கு நாட்டை வென்று வந்த ஆதித்தன் சிதம்பரத்தில் தங்கங் கொண்டு குவித்ததையும், பராந்தகனும், குலோத்துங்கனும் இத்தகைய முறையில் கொண்டு வந்த தங்கத்தால் சிதம்பரத்தில் பொன் வேய்ந்ததையும் குறிப்பிடலாம். அந்நாளைய பணக்காரன் கோயில்கள் எனக் கூறுவது பொருத்தமானது.

கற்களே இல்லாத தஞ்சாவூர்ப் பகுதியில் பெரிய பெரிய கற்களைக் கொண்டு கி.பி. 1003 – கி.பி. 1009 ஆகிய 6 ஆண்டுகளில் பெருவுடையார் கோயிலைக் கட்டுவித்தான். கோயில் சிறப்பாக நடைபெறச் சிறந்த நிருவாக அமைப்பையும் ஏற்படுத்தினான். அவன் ஒரு நிர்வாகஸ்தன் என்பதை அது பறைசாற்றுகின்றது. கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம் எனப்பல கலைகளின் முதிர்ச்சிக்குமான ஆலயமாகவே அதைக் கொள்ளலாம். மேலும் தையல், கோலமிடுதல், திருவிளக்கிடுதல் சோதிடம், நகை செய்தல், மாலை கட்டுதல், சலவை செய்தல் போன்ற பணிகளுக்காகவும் பணியாளர்களை அரசன் நியமனம் செய்தான். இவர்கள் பரம்பரை பரம்பரையாக அக்கோயிற் பணிகளிலே ஈடுபட்டு வந்தனர். அத்தோடு இசைக் கலைஞர்களையும் நுண்கலை வல்லாளர்களையும் வேலைக்குப் பணித்தான். இவர்களுள் தேர்ச்சி பெற்றவர்களுக்கு "மும்முடிச் சோழன்" என்ற விருதினையும் வழங்கிக் கௌரவித்தான்.

பெரும் வருவாயினையும், பெருஞ் சொத்துக்களையும் கொண்டு விளங்கிய பெருவுடையார் கோயில் கருவூலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஆலயத்திலே சோழ நாட்டுச் சேனைகளை அமர்த்தினான். இவர்கள் கோயிலின் சொத்துக்களையும், கோயிலினுள் சட்ட ஒழுங்கையும் நிருவாகம் செய்தனர். இச் சேனைகளை "நியாயங்கள்" என அழைத்தனர்.

இவ்வாலயத்தில் ஆண்டு விழாவாக வைகாசிப் பெருவிழா ஒன்பது நாட்கள் – சித்திரையில் திருவாட்டை விழா, பதினெட்டு நாட்கள் – வசந்த விழா, திருவாதிரை விழா இராஜ ராஜன் பிறந்த நாள் விழாவான ஐப்பசி மாதத்தில் "சதயத் திருவிழா" இவ்வாறு பல விழாக்கள் நடைபெற்றன. வைகாசிப் பெருவிழாவில் கலைஞர்கள் "இராஜ ராஜேச்சுவர நாடகம்" என்ற நாடகத்தை நடித்துக் காட்டினர்.

தஞ்சைப் பெருங்கோயில் கட்டி முடிக்கப்பட்டு கிட்டத்தட்ட இருபது ஆண்டுகள் கழிந்த பின்பு (கி.பி. 1030 ஆண்டளவில்) இராஜராஜனின் மகனான இராஜேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரத்தில் கங்கை கொண்ட சோழபுரக் கோயிலைக் கட்டுவித்தான். இக்கோயிலை அழகுப்படுத்திய நகரமும் இச் சுற்றாடலைச் செழிப்பாக்கிய வாவியும் இப்பொழுது மறைந்து விட்டன. சிறப்புமிக்க கோயில் இன்று பரந்த காட்டில் தனித்து நிற்கின்றது. இன்றும் அதன் செழுமை முழுமையாகக் குறையாமல் இருப்பது இராஜேந்திரன் ஆட்சியில் சோழப்பேரரசு இருந்த செல்வ நிலைக்கு சிறந்த சான்றாகும்.

340 அடி நீளமும் 110 அடி அகலமும் கொண்ட நீள் சதுர வடிவில் அமைந்த இவ்வாலயம் 100 அடி சதுரமுடைய சதுரத்தின் மேல் 186 அடி உயரமுடைய விமானத்தைக் கொண்டது. தஞ்சைப் பெருங்கோயில் ஆண்மை, வீரம் என்பதோடு ஒரு ஆணுக்குரிய இலட்சணங்களோடு விளங்க கங்கைக் கொண்ட சோழபுரம் எளிமை, நளினம் போன்ற பெண்களுக்குரிய இலட்சணங்களோடு விளங்குகின்றது. இவ்வாலயத்தின் விமானம் எட்டு அடுக்குகளையும் அதிற் பல சிற்ப வேலைப்பாடுகளையும் கொண்டு அழகு செய்கின்றது. கோயிலின் சுவரின் சுற்றுப்புறத்தில் உள்ள சிலைகள் அனைத்தும் பெருவுடையார் ஆலயம் போன்றே அமைந்துள்ளன.

சோழர்கால ஆலயங்கள் பல்வேறு சமூக சேவை நிலையங்களாகத் தொழிற்பட்டுள்ளன. உள்ளத்தைப் பண்படுத்த ஆலயவழிபாடு இருந்ததை போல் உடல் நோய்க்கு மருந்து கொடுக்கும் மருந்தகமாகவும் விளங்கியது. தஞ்சையில் கி.பி. 1015 சுந்தரசோழ விண்ணகர ஆதுர சாலை என்ற மருத்துவ மனையைக் குந்தவை ஏற்படுத்தினாள். திருமுக்கூடல் என்னும் கல்வெட்டின் படி வீரராஜேந்திர சோழன் ஆண்ட காலத்தில் அந்த ஊர் மகா விஷ்ணு கோயிலில் 15 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையை ஏற்படுத்தியிருந்தான். மேலும் ஆலயத்தில் எந்தெந்த நோய்க்கு எந்தெந்த மூலிகைகளைச் சேர்த்து மருந்தாக உட்கொள்ள வேண்டும் என்ற பட்டியலும் தொங்க விடப்பட்டிருந்தது.

ஆலயங்கள் உடல் பசியைப் போக்கும் அறச்சாலைகள் ஆகவும் விளங்கின. ஆலயங்களிலே தங்குவோர், அநாதைகள், வழிப்போக்கர்கள் என்போர் தத்தமது பசிப்பிணியைப் போக்கினர். அத்தோடு நாடகம், நடனம் என்பன ஆலயத்தில் அரங்கேற்றம் நடைபெறுவதால் ஆலயமானது கலைகள் வளர்க்கும் கலை அரங்கங்களாகவும், கோவில் மடங்களில் சைவ சித்தாந்த ஆய்வு செய்யும் நல்லாசிரியர்கள் இருந்து திண்ணைப் பள்ளிகள் நடத்தியதாலும், "சரஸ்வதி பண்டாரம்" என்ற நூலகம் ஆலயங்களில் ஏற்படுத்தி இருந்ததாலும் ஒரு கல்விச் சாலையாகவும் பெருமளவு சொத்துக்கள் ஆலயத்தில் இருந்ததால் ஏழைகளுக்கு பொன்னும், பொருளும் வழங்கியதால் ஒரு வங்கியாகவும், சோழர் கால ஆலயங்கள் தொழிற்பட்டன எனக் கூறலாம்.

இக்காலத்தில் இராஜராஜனது பெரு முயற்சியால் நம்பியாண்டார் நம்பிகள் தில்லைச் சிதம்பரத்தில் பூட்டி வைக்கப்பட்டிருந்த ஏடுகளை எடுத்து முதல் பதினொரு திருமுறைகளாக தொகுத்தார். ஆழ்வார் பாடல்களும் ஸ்ரீ நாத முனிகளால் நாலாயிரத்திவ்வியப்பிரபந்தங்களாகத் தொகுக்கப் பட்டதும் சோழர் காலமாகும்.

சோழர் காலத்தில் பிரம தேயங்களைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். அதாவது வேதங்களில் புலமைப் பெற்ற அந்தணர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டு அவர்களுக்குரிய

நிலங்கள் ஒரே இடத்திலே செறிவாக்கப்பட்டன. இவை பிரம தேயம் என்ற தனிப்பட்ட கிராமமாக இருந்தன. இவை நான்கு வேதங்களையும் ஒதுகின்ற அந்தணர்களுக்கு அரசனால் நன்கொடையாக வழங்கப்பட்டதால் சதுர்வேதி மங்கலம் எனவும், அக்கிரகாரங்கள் எனவும், அழைக்கப்பட்டன. இக் கிராமங்கள் முழுமையாகப் பிராமணர்களது ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. இங்கு அரசனால் எவ்வித வரிவிதிப்புக்களும் இன்றி விடுக்கப்பட்டிருந்தது. நாடெங்கும் இவ்விதமான பிரமதேயங்கள் ஏராளமாக உருவாக்கப்பட்டன. இது பிராமணர்களது தனிக்குடியிருப்பு ஆனதால் வேதப்பயிற்சிக் கல்விக்கு உதவி செய்தனர். இதனால் சமஸ்கிருதமொழி வளர்ச்சியும், ஆன்மீக வளர்ச்சியும் மேலோங்குவதற்கு காலாகியது.

சங்ககாலத்திற் பேணப்பட்ட நடுகல் வழிபாடு இங்கு வளர்ச்சி பெற்ற நிலையைக் காணலாம். சோழ அரசர்களால் தமது தந்தையின் நினைவாகக் கட்டப்படும் கோயிலை "பள்ளிப்படைக் கோயில்" எனக் குறிப்பிடப்படுகின்றது. ஆதித்த சோழனுக்கு அவனது மகன் பராந்தகன் ஆதித்தேஸ்வரம் என்ற பள்ளிப்படையைக் கட்டுவித்தான். முதலாம் இராஜ ராஜன் தஞ்சைப் பெருங்கோயிலில் உற்சவ மூர்த்தி வெளியே வருவதற்கு முதல் தனது தந்தையின் உருவச்சிலையை உலாச் செய்வதற்கு ஏற்பாடு செய்திருந்தான். இவ்வாறாக அரசனையும் தெய்வ அந்தஸ்துக்கு உயர்த்திய பெருமை சோழர் காலத்திலே உருவானது எனக் கொள்ளமுடியும்.

இவ்வாறாகச் சோழப் பேரரசர் காலத்தில் சைவசமய வளர்ச்சியானது ஆலய கட்டடத்தாலும், கலை வேலைப்பாடுகளாலும், கிரியா அனுட்டானங்களாலும், சமூகசேவைகளாலும், இலக்கிய வளர்ச்சிகளினாலும், திருமுறைத் தொகுப்பினாலும், மேலோங்கி நிற்பதற்குச் சோழ மன்னர்களது சைவ சமயப் பற்றே காரணமாகும் எனத் துணியலாம்.

---

# அன்பு வேண்டுகோள்

மக்கள் சேவையே மகேஸ்வரன் பூசை என்பதனை மறவாது மாமன்றத்தின் சமூகப் பணிகள் தொடர்கின்றன. இரத்மலானையில் இருக்கும் இந்துக் கல்லூரியின் ஆண் பிள்ளைகளுக்கு 15.03.1998 ல் ஆரம்பிக்கப்பட்டுள்ள விடுதி, நூறு மாணவர்களை ஆதரிக்கும் விடுதியாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கல்லூரியை அடுத்து இருக்கும் மாமன்றக் காணியில் பெண் பிள்ளைகளை ஆதரிக்கும் சக்தி இல்லமும், வயோதிபர்களைப் பராமரிக்கும் நிலையமும் கடந்த ஆண்டு முதல் மாமன்றத்தின் ஆதரவில் இயங்குகின்றன.

இவ்வித சமூகநலப் பணிகளை மேலும் முன்னெடுத்துச் செல்லுவதற்கு ஆதரவாகப் பின்வரும் அடிப்படையில் நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| மாதாந்த ஆதரவு | - ரூபா75,000.00 | மதிய/ இரவு விசேட போசனம் | - ரூபா7,500.00 |
| மதிய/ இரவு போசனம் | - ரூபா 6,000.00 | காலை உணவு | - ரூபா3,000.00 |

தங்களின் திருமணநாள், பிள்ளைகளின் பிறந்ததின விழாக்கள், பெற்றோர்களின் நினைவுதினம் ஆகியவற்றில் விடுதிவாழ் மாணவர்களுக்கு ஆதரவு தரும் சிந்தனை நிச்சயம் உங்களுக்கு வரும். தாராளமாக ஆதரவு தாருங்கள்.

பொருட்களாகவும் நன்கொடைகள் ஏற்றுக் கொள்ளப்படும். சகல நன்கொடைகளுக்கும் உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

ஒவ்வொரு நோன்மதி தினமும் மாலை 4.30 மணிக்கு விடுதியில் வதியும் – அந்த மாதத்தில் பிறந்த பிள்ளைகளுக்கு பிறந்ததினக் கொண்டாட்டம். அவற்றிலும் தவறாது கலந்து கொண்டு உங்களின் – எங்களின் பிள்ளைகளுடைய வாழ்வு வளம்பெற வாழ்த்துமாறும் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மாமன்றத்தின் சார்பில்
பொதுச் செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்

---

**நமக்கு கிடைத்திருக்கும் மனிதப் பிறவியை இறைவனோடு சேர்ந்து வாழ்வதற்கு நாம் பயன்படுத்த வேண்டும். இதுவே அறிவுடைமை. வாழ்க்கையில் மனிதன் நிறைவுகாண விரும்புகிறான். அந்த நிறைவு, சுயநல நிறைவு, ஆன்ம நினைவு என்று இரண்டு வகைப்படும். சராசரியாக மனிதன் சுயநலநிறைவில் திருப்தியடைந்து விடுகிறான். அதே மனிதன் காலப்போக்கில் மனப்பக்குவம் பெறும்போது ஆன்ம நிறைவைப் பெற இறைவனை நாடுகிறான்.**

**(சுவாமி கமலாத்மானந்தர்)**

# பல்லவர் காலக் கோயில்கள்


A. S. சற்குணராஜா
ஆசிரியர்
(சி.சி. தமிழ் மகாவித்தியாலயம், புவக்பிட்டி)

தமிழ் நாட்டில் தற்போது காணப்படும் காலத்தால் முற்பட்ட கோயில்கள் பல்லவர் காலத்திற்குரியவை. இவை கற்குகைகளாக, கற்கட்டிடங்களாக இலகுவில் அழிவுறாத பொருட்களால் அமைக்கப்பட்டமையினால் அவை இன்றும் எம்மால் காணக்கூடியவனவாக உள்ளன.

இக்காலத்தில் அமைந்த கோயில்களை குகைக் கோயில்கள், கற்கட்டிடங்கள், ஒற்றைக்கல் தேர்கள் (தேர் போன்ற வடிவில் கற்களிற் செதுக்கப்பட்டவை) என மூன்று வகையாகப் பாகுபடுத்தலாம். இவற்றில் குகைகள் மகேந்திர வர்மன், மாமல்லன் ஆகியோரின் காலத்திற்கு உரியதாகவும் கற்கோயில்கள் ராஜசிம்மன், நந்திவர்மன் காலத்திற்கு உரியதாகவும் ஒற்றைக் கல் தேர்கள், மாமல்லன் காலத்திற்கு உரிய சிறப்பான கலைப் பொக்கிசமாகவும் கருதப்படுகின்றன.

இவற்றில் கற்குகைகள் காலத்தால் முற்பட்டவை. இவை கற்பாறைகளில் குடையப்பட்டுத் தனியாகவோ அல்லது இரண்டாகப் பிரிக்கப்பட்ட மண்டபங்களாகவோ காணப்படுகின்றன. மண்டபம் பெரியளவாக உள்ளபோது இடையில் தூண்கள் செதுக்கப்பட்டுள்ளன. சில குகைகளில் உள்ள தூண்கள் செதுக்கல் வேலைப்பாடு கொண்டதாகவும் சில குகைகளில் உள்ள தூண்கள் செதுக்கல் அற்ற சதுர வடிவமாகவும் உள்ளன. சில தூண்களின் தலைப்பகுதியில் போதிகைகள் காணப்படுகின்றன. இவற்றின் வடிவத்தை வைத்துப் கோணப்போதிகை, தரங்கு போதிகை, வளைபோதிகை சுருள்போதிகை என வகைப்படுத்தலாம். இக்குகைகளின் சுவர்களில் காணப்படும் மாடக்குழிகளில் தெய்வ உருவங்கள் வைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. தற்போது ஒரு சில குகைகளில் மட்டும் மாடக்குழிகளில் தெய்வ உருவங்கள் உள்ளன. இக்குகை கோயில்கள் ஆகம விதிகட்கு உட்படாது அமைந்தவை. இதனால் பார்வைக்குக் கோயில் போன்ற தோற்றத்தைக் காணமுடியாது.


இப்பல்லவர் காலக் குகைகளை நாம் தனித்தனியாக நோக்கினால் மிகப் பழையதும் மகேந்திர வர்மனால் செதுக்கப்பட்டதும் லக்திசிதன் குகையாகும். இது தென் ஆற்காடு மாவட்டத்தில் மண்டகப்பட்டி என்னும் இடத்தில் உள்ளது. இக்குகையில் முற்புறம் இரண்டு தூண்களும், உட்புறம் நான்கு தூண்களும் முற்புற வாயிலில் இரு வாயிற் காப்போர் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. சென்னைக்கு அருகிலுள்ள பல்லாவரம் குன்றின் மேல் மகேந்தவர்மனால் செதுக்கப்பட்ட பஞ்சபாண்டவர் குகை உள்ளது. இக்குகையினுள் செல்வதற்கு ஐம்பது படிகள் ஏறுதல் வேண்டும். ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்படுவதுமாதிரித் தூண்கள் செதுக்கப் பட்டுள்ளன. பின் சுவரில் ஐந்து மாடக்குழிகள் வெட்டப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாக வைத்துப் பஞ்ச பாண்டவர் குகை எனப்படுகின்றது.




வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாறு பகுதியில் உரித்திர வாலிஸ்வரக் குகைக்கோயில் சிவனுக்குச் செதுக்கப்பட்டதாகக் கல்வெட்டுக்களில் கூறப்படுகின்றது. இங்குள்ள மூன்று தெய்வத் திரு மாடங்களில் நடுவில் சிவனும் இடது புறத்தில் திருமாலும் வலப்புறத்தில் பிரம்மாவும் வைக்கப்பட்டிருக்க வேண்டுமென கருதப்படுகின்றது. நீண்ட சடை முடியும் பூணூலும், குண்டலமும் கொண்ட வாயிற் காப்போர் காணப்படுகின்றனர். இக்குகையின் வடப்பக்கமாகச் சிறிய குகை ஒன்று உள்ளது. இங்குள்ள தூண்கள் வட்ட வடிவிலான தாமரை வடிவங்களைக் கொண்டுள்ளன. இக்குகையில் உள்ள கல்வெட்டின் படி திருமால் கோயிலாக இது கருதப்படுகின்றது.

வல்லம் வசந்தேஸ்வரர் கோயிலானது மூன்று குகைகளைக் கொண்டது. முழுமை பெற்ற பெரிய குகையானது இன்றும் வழிபாடு நடைபெறும் சிவன் கோயிலாக உள்ளது. நடுவில் உள்ள மண்டபத்தில் தெய்வத்திருமாடங்கள் தலையில் கொம்புகள் கொண்ட வாயிற் காப்போர், முன்புறம் உள்ள மாடத்தில் வலம்புரிப் பிள்ளையார், வலப்பக்கத்தில் பெண் தெய்வ உருவம், தரையில் அமைக்கப்பட்ட சிவலிங்கம் போன்றவை காணப்படுகின்றன.

தலவானூர் சத்துரு மல்லன் கோயிலில் நில மட்டத்திற்கும் குகையின் தரைக்கும் இடையில் துணை மேடை வார்ப்புப் பகுதி தம்பம், கழுத்து ஆகிய அடித்தளப் பகுதிகள் செதுக்கப்பட்டுள்ளன. முகப்பின் உச்சியில் ஐந்து கந்தர்கள் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. குகையானது கருவறை, இடைமண்டபம், முகமண்டபம் ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது. கருவறையில் லிங்கமும், முன்னால் வாயிற் காப்போரும் வைக்கப்பட்டுள்ளன. சீய மங்கலத்திலுள்ள பல்லேஸ்வரத்தில்




இடையில் சிங்கமும் மேற்புறத்தில் தரங்குப் போதிகையை கொண்ட தூண்கள், மாடக்குழிகளில் பெண்உருவங்கள், வாயிற்காப்போர் உருவங்கள் போன்றவை காணப்படுகின்றன.

திருச்சி லலிதாங்குரன்கோயில், உச்சிப் பிள்ளையார் அமைந்துள்ள மலையில் காணப்படுகின்றது. இங்குள்ள தூண்களின் உச்சியில் தரங்குப் போதிகையும் நடுவில் அன்னம், யானை, மீன், பவளம், தாமரை, கின்னாரி கொடிக்கருக்கு போன்ற அலங்காரங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சிவலிங்கம், மகேந்திர வர்மன் போன்ற சிலைகள் வைக்கப்பட்டிருந்தாலும் தற்போது மகேந்திர வர்மன் சிலை காணப்படவில்லை.

விளாபாக்கம் பஞ்சபாண்டவர் குகையில் அவருடன் சேர்ந்து செதுக்கப்பட்ட தூண்களும் அதில் தரங்குப் போதிகை, தாமரை மலர் அலங்காரம் ஆகியவற்றுடன் வாயிற்காப்போர், இயக்கி உருவங்கள் போன்றவையும் காணப்படுகின்றன திருக்கழுக் குன்றம் குகையானது இரண்டு மண்டபங்களையும் திரிபங்க நிலையில் அமைந்த வாயிற் காப்போர்களையும் மாடக்குழிகளில் அமைந்த திருமால், பிரம்மா உருவங்களையும் கொண்டுள்ளது.

மாமல்லபுரம் கோடிக்கால் மண்டபம் எனப்படும் குகை கொற்றவை கோயில் எனக் கருதப்படுகின்றது. பெண் வாயிற் காப்போர் காணப்படுவது இக்கோயிலின் சிறப்பியல்பாகும்.

சிங்கவரம் அரங்கநாதர் குகைக் கோயிலில் மூலவராக அரங்கநாதரும், கொற்றவையின் காலடியில் மண்டியிட்டுத் தனது தலையை வெட்டிப் படைக்க முற்படும் பூசாரியின் சிற்பமும் திரிபங்க நிலையில் அமைந்த பெண் பக்தர்களின் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. தாமரை மலர் அலங்காரங்கள் கொண்ட தூண்கள், வாயிற் காப்போர் செதுக்கல்களும் உள்ளன.

சாளுவன் குப்பம் அதிரனச் சந்த மண்டபம் எனப்படும் குகையில் சதுர வடிவத் தூண்கள் சுருள் போதிகையுடன் விளிம்பு, பூதகட்டு, கபோதம் ஆகியவற்றைக் கொண்டு அமைந்துள்ளன. லிங்கம், சோமஸ்கந்தர் சிற்பம், திருமால், பிரமன், சிங்கத்தின் மேல் அமர்ந்த கொற்றவை மகிடாசுரனை வதைத்தல், வாயிற் காப்போர் போன்றவை செதுக்கப்பட்டுக் காணப்படுகின்றன. ஏனைய பல்லவர் காலக் குகைக் கோயில்களான குரல் மணில் முட்டம் குகையில் ஏழு தெய்வத் திருமாடங்கள் காணப்படுகின்றன. உருவங்கள் எதுவும் காணப்படவில்லை. திருக்கோகர்ணம் சிவன் குகையில் லிங்கம், பிள்ளையார் சிற்பங்கள் காணப்படுகின்றன.

மேலைச்சேரி சிகாரிப் பல்லவேசுவரம் என்னும் குகைக் கோவிலில் மூலப் பாறையில் செதுக்கப்பட்ட லிங்கம் காணப்படுகின்றது. வேறு செதுக்கல்கள் எதுவும் இல்லை.

செங்கழுநீர்ப்பட்டுச் சிங்கப் பெருமாள் கோவிலானது நரசிங்கர் புடைப்புச் சிற்பத்தைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

இவ்விதமாகப் பல்லவர் காலத்தில் குடையப்பட்ட ஆலயங்களின் எண்ணிக்கை 38 வரையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

*(தொடரும்)*

# இல்லறத்தில் இருந்தாலும் இறைவனோடு இருக்கலாம்

ல்லறத்தார்கள் ஆன்மிக வாழ்க்கையை எப்படி நடத்துவது? இல்லறத்தார்களுக்குப் பணம் சம்பாதிப்பது, குழந்தைகளை வளர்ப்பது, அவர்களுக்குக் கல்வி புகட்டுவது போன்ற பல பிரச்சினைகள் இருக்கின்றன.

இவ்வளவு பொறுப்புக்களைச் சுமந்துள்ள இல்லறவாசிகள் ஆன்மிக வாழ்க்கையில் எப்படி ஈடுபடமுடியும் என்ற சந்தேகம் வரலாம்.

இதனை *ஸ்ரீராமகிருஷ்ணர்* ஓர் உதாரணத்துடன் விளக்குகிறார். பெரிய மனிதரின் வீட்டு வேலைக்காரி எஜமானரின் குழைந்தைகளையெல்லாம் தன் குழைந்தைகள் போலவே கவனித்துக் கொள்கிறாள். ஆனால், அவளது மனம் முழுவதும் கிராமத்திலிருக்கும் தனது குழைந்தைகள் மேல்தான் இருக்கும்.

அதேபோல் இல்லறத்தில் இருந்து கொண்டு நம் கடமைகள் எல்லாவற்றையும் செய்துதான் ஆக வேண்டும். ஆனாலும் மனதில் இறைவனை நினைக்க வேண்டும்.

*(இராமகிருஷ்ண விஜயம்)*

# குப்தர் கால இந்து மத மறுமலர்ச்சி

செ. பிரபாகரன் (B. A)
ப/ தமிழ் மத்திய கல்லூரி, பண்டாரவளை

## குப்தர் காலத்துக்கு முற்பட்ட மௌரியகால நாகரீகம் (கி. மு 324– கி. பி 320)

வேத காலத்தைத் தொடர்ந்து வந்த காலப் பிரிவில் பதினாறு அரசுகள் நிலவியதாக பௌத்த நூல்கள் தெரிவிக்கின்றன. அவந்தி, வற்சம், கோசலம், மகதம் என்ற நான்கு அரசுகளுமே அவையாகும். இவற்றுள் மகத அரசே தலைசிறந்த அரசாக விளங்குகின்றது. இந்தியாவின் ஆதார பூர்வமான வரலாறு மகதத்தின் எழுச்சியுடனேயே ஆரம்பித்ததெனலாம். மகதத்துப் பெருமன்னர் ஹரியங்கன் என்பவனின் பரம்பரையில் வந்த பிம்பிசாரன் எனும் மன்னன் பதினைந்து வருடங்கள் அங்க நாட்டை (தற்போது கிழக்கு பீகார்) அடிமைப்படுத்தி நேபாளம் வரை தனது இராஜ்ச்சியத்தை விரிவு படுத்தினான். பிம்பிசாரனின் மகனான ஆஜாதசத்ரு தனது தந்தையைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான். இவனுக்குப் பின் இவனது தம்பியான உதயி தனது ஆட்சிக்காலத்தில் குசுமபுரம் என்னும் நகரைப் புனரமைத்து பாடலிபுரம் என்ற பெயருடைய நகராக்கினான். இந்நகரமே மகத மன்னருக்கும் பின் வந்தோருக்கும் முதன்மையான நகரமாகி விளங்கிப் புகழ் பெற்றது.

மௌரிய அரசனான சந்திரகுப்தனின் மறைவைத் தொடர்ந்து அவனது மகனான பிந்துசாரன் கி. மு 300 – கி. மு 273 வரை ஆட்சி செய்தான். இவனுக்குப் பின் அவனது மகனாகிய "அசோகன்" கி. மு 269 இல் ஆட்சிப்பீடமேறி தேவானாம்பியதாசி (தேவர்க்கினியன்) தேவானாம்பிய (தேவர்க்குப்பிரியன்) போன்ற பட்டங்களைப் பெற்று ஏறத்தாழ 30 வருடங்கள் வரை வட இந்தியாவில் ஆட்சி புரிந்தான். இவனே "சாம்ராட் அசோகன்" எனும் சிறப்புப் பெயரையும் பெற்றான். போரில் மிகுந்த நாட்டம் கொண்டவனான இவன் கலிங்க நாட்டுடன் எட்டு வருடங்களாக நடத்திய போரின் போது ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் பேர் கைது செய்யப்பட்டதுடன் ஒரு இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். அத்துடன் அதேயளவு மக்கள் காயமும் அடைந்தனர். இத்தகைய அழிவுகளினால் பெறப்பட்ட கலிங்கத்து வெற்றி சாம்ராட் அசோகனின் மன அமைதியைக் குலைத்தது. கலிங்கத்துப்போர் நடைபெறும்வரை இந்துவாகவிருந்த அசோக மன்னன் கௌதம புத்தரின் அகிம்சா போதனைகளால் கவரப்பட்டு பௌத்த மதத்தில் சேர்ந்து பல அற நடவடிக்கைகளில் ஈடுபட்டு மக்களையும் அவ்வழியில் ஈடுபடுத்தியதுடன் தனது மைந்தனான மகிந்தனையும் மகளான சங்கமித்தையையும் பௌத்த மதத்தைத் தழுவச் செய்து அவர்களை இலங்கைக்கு அனுப்பி அவர்கள் மூலம் இலங்கை மன்னனையும் மக்களையும் பௌத்தத்தைத் தழுவச் செய்வதில் வெற்றியும் கண்டான். இதன் காரணமாக தனது முன்னோர்களால் கட்டியெழுப்பப்பட்ட பேரரசுகள் பலவீனமடையக் காரணமாக அமைந்தான் எனவும் அவன் குறை கூறப்பட்டான்.

சாம்ராட் அசோகனின் மரணத்தின் பின் அவனது பரம்பரையில் வந்த குணாளனும் அவனைத் தொடர்ந்து பிருகத்ரதனும் ஆட்சி செய்தபோது புஷ்யமித்திரன் என்னும் சேனாதிபதி பிருகத்ரதனை பதவியிலிருந்து கவிழ்த்து அரசு கட்டிலேறியதுடன் மௌரியப் பேரரசு வீழ்ச்சி கண்டது. புஷ்யமித்திரன் சுங்கர் என்னும் புதிய அரசபரம்பரையை நிறுவினான். சாதவாகனர் என்னும் அரசவம்சத்தைச் சேர்ந்தோர் சுங்கரைத் தோற்கடித்து சாதவாகன அரசை நிறுவினர். இவர்களின் பின்னர் கலிங்கரும் அதன்பின் குஷானரும் அவர்களை வெற்றி கொண்டு குப்தரும் ஆட்சியைக் கைப்பற்றியதுடன் குப்தப் பேரரசு கி. பி 320 இல் உதயமாகியது.

## குப்தர் பேரரசின் எழுச்சி

தென்னிந்தியாவில் பல்லவர், சோழர், நாயக்கர் ஆட்சிக் காலத்தில் இந்து சமயமும் இந்துக் கலைகளும் வளர்ச்சியுற்றதற்கு ஒப்பான இந்து மத மறுமலர்ச்சியை வட இந்தியாவிற் குப்தர் காலத்தில் காணமுடிகின்றது. இக்காலம் வட இந்திய வரலாற்றுக் காலங்களில் "பொற்காலம்" எனவும் இதனை வர்ணிக்கின்றனர். நவீன காலத்தில் இந்து சமயம், கலாசாரம் என்பன குப்தர் கால வளர்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டது. இக்காலத்தில் சமய சிந்தனை, இலக்கியம், நுண்கலைகள், விஞ்ஞானம் ஆகியவற்றில் பூரண வளர்ச்சி காணப்பட்டது. இவ்வளர்ச்சிகளுக்கு இக்கால மன்னர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். இவ்வகையில் மகாராஜகுப்தன், கடோற்கஜகுப்தன், சந்திரகுப்தன், சமுத்திர குப்தன், விக்கிரமாதித்தன், குமாரகுப்தன், ஸ்கந்தகுப்தன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

குப்தர்களின் கலாசார செல்வாக்கு இந்தியத் துணைக் கண்டத்தின் ஏனைய பகுதிகளிலும் அதற்கு வெளியேயும் குறிப்பாக தென்கிழக்காசிய நாடுகளிலும் பரவின. முழுமுதற்கடவுள் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட சைவ, வைணவ, கௌமார சமய மரபுகள் வளர்ச்சி பெற்ற காலமாக குப்தர் காலம் விளங்குகின்றது.

## குப்தர் காலச் சமய நிலை

குப்தர் காலத்தில் சைவசமயக் கோட்பாடுகள் சுவேதாஸ்வர உபநிடதங்கள், யசுர் வேதம் என்பவற்றின் மூலமும் வைணவக் கோட்பாடுகள் இதிகாசங்கள் மூலமும் சிறப்பாக பகவத்கீதை மூலமும் வெளிப்படுத்தப்பட்டன. இவை இக் காலப்பகுதியிலேயே முழுமையாக ஏற்கப்பட்டு பின்பற்றப்பட்டன. மேலும் பிரம்மா,

விஷ்ணு, சிவன் எனும் திரிமூர்த்தி வழிபாடு குப்தர் காலத்திலேயே முக்கிய இடம் பெறுகிறது.

வைதீகமும் பொதுவழக்கும் சங்கமமாகி இந்து கலாசாரமும் வழிபாட்டு முறைகளும் வளர்ச்சி பெற்றன. மன்னர்கள் தமது அரச முத்திரைகளில் சமய சின்னங்களைப் பொறித்தனர். சமய நெறிகள் ஆலய வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டமையால் கோயில்களும் தோற்றம் பெற்றன. சிவனுக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டன. சைவசமயத்தில் பாசுபதர், காளாமுகர், பைரவர் எனும் பிரிவுகள் காணப்பட்டன. வைணவரில் பாகவதர், பாஞ்சராத்திரர் எனும் பிரிவுகளும் சமணர்களில் சுவேதம்பரர், திகம்பரர் எனும் பிரிவினரும் காணப்பட்டனர். கி. பி 2ம் நூற்றாண்டில் உருவாகிய அறுவகை தரிசனங்களான சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை முதலியன இக்காலத்தில் முழுமை பெற்றன.

சைவமும் வைணவமும் மன்னரால் ஆதரிக்கப்பட்டாலும் வைணவமதம் கூடிய செல்வாக்கைப் பெற்றது. விஷ்ணுவை வழி பட்டோர் பாகவதர் எனப்பட்டனர். இக்காலப்பகுதியில் அவதாரக் கருத்துக்கள் சிறப்புப் பெற்றன. திருமாலின் பத்து அவதாரங்களில் விஷ்ணு அவதாரமே சிறப்புப் பெற்றிருந்தது. தென்னிந்தியாவில் சமகாலத்தில் பன்னிரு ஆழ்வார்களும் வைணவ பக்தி இயக்கத்துக்கு அடித்தளம் இட்டனர். அலகபாத் கல்வெட்டில் சமுத்திர குப்த மன்னன் "இவன் பூமியில் அவதரித்த கடவுளின் பிரதிநிதி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளான். இக்கூற்றின் மூலம் குப்தர் காலப் பகுதியில் அவதாரத்தத்துவம் ஏற்படுத்திய தாக்கத்தை அறிய முடிகின்றது.

குப்தர் காலத்தில் முருக வழிபாடு இருந்தமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. குப்தர் கால நாணயங்களில் முருகனின் உருவங்களும் மயில் உருவங்களும் பொறிக்கப் பட்டுள்ளன. குப்தர் காலத்திலேயே கௌமார நெறி பரத கண்டமெங்கும் பரவியது. மன்னர்கள் பலரும் குமார, ஸ்கந்த எனும் பெயர்களைப் பெற்றிருந்தனர். குமார சம்பவம் எனும் காளிதாசரின் புகழ் மிகு காவியம் இக்காலக் கௌமார நெறியின் வளர்ச்சிக்குச் சான்று பகர்கின்றது. தக்கணத்தில் குமாரக் கடவுளை வப்பஸ்வாமி, வப்பாரபட்டகர் என அழைத்தனர். இச்சான்றுகள் இக்காலப்பகுதியில் கௌமார நெறி அடைந்திருந்த வளர்ச்சியினை எடுத்துக்காட்டுகின்றது.

குப்தர் காலமானது இந்து இலக்கிய வரலாற்றில் உச்ச கட்ட வளர்ச்சியைக் கொண்டிருந்த காலமாக விளங்கியது. இக்காலப்பகுதியில் இந்துமதச் சார்புடைய பாடல்கள், பல்வகைப்பட்ட இலக்கண நூல்கள், இலக்கிய நூல்கள், நீதி நூல்கள், சமய நூல்கள், நாடக நூல்களெனப் பல நூல்கள் எழுச்சி பெற்றிருந்தன. மகாபாரதம், இராமாயணம் போன்றவை இறுதி வடிவம் பெற்று நாடெங்கும் செல்வாக்குப் பெற்றன. இவை இந்துப் பண்பாட்டின் பல் வேறுபட்ட இலட்சியங்களை உள்ளடக்கிய கருவூலங்களாகப் போற்றிப் பேணப்பட்டன.

சமஸ்கிருதம் இக்காலப்பகுதியில் தேவபாஷையாகக் கருதப்பட்டதுடன் சூத்திர வடிவிலான சமய இலக்கியங்கள் பல தொகுக்கப்பட்டன. வாயுபுராணம், மச்சபுராணம் போன்றவைகளும், அறுவகைத் தரிசனங்களின் சிறு நூல்களும் விருத்தியுரைகளும் எழுந்தன. தர்மசாஸ்திரங்களில் யக்ஞவல்லியர் ஸ்மிருதி, நாரத ஸ்மிருதி, காத்தியாயனர் ஸ்மிருதி, பிரகஸ்பதி ஸ்மிருதி, விஷ்ணு ஸ்மிருதி போன்ற பல ஸ்மிருதிகள் இக்காலத்திலேயே எழுத்துருவம் பெற்றன.

இக்காலப்பகுதியில் மகாகவி காளிதாசரின் இரகுவம்சம், குமாரசம்பவம் எனும் காவிய இலக்கியங்களும் சாகுந்தலம், விக்கிரம ஊர்வசியம், மாலவிகா அக்கினி மித்திரம், மிரிச்சகடிகவு எனும் நாடகங்களும் மேகதூதம், இருதுசம்காரம் எனும் சிறுகாப்பியங்களும் தோன்றின. அவ்வாறே நீதிநூல்களின் வரிசையில் காமாந்தகனுடைய நீதிசாரம், தண்டியாசிரியர் எழுதிய தண்டியலங்காரம் எனும் அணி இலக்கண நூல், ஆரியப்பட்டீயம் எனும் வானியல் நூல் என்பன குறிப்பிடத்தக்கன.

## குப்தர் காலக் கலைகள் (கட்டிடம், சிற்பம், ஓவியம்)

குப்தர் காலமானது கட்டடம், சிற்பம், ஓவியம் போன்ற கலைகளில் எழுச்சிபெற்ற காலமாகவே விளங்கியது. கலைகளின் மெய்ப்பொருளினை உணர்ந்து அழகியல் உணர்வின் முதிர்வோடு நிதானமாகவும், செழுமையாகவும் கலைவடிவங்கள் கையாளப்பட்ட காலமாகத் திகழ்வது குப்தர் காலமாகும்.

குப்தர் காலக் கட்டிடக் கலையை நோக்கின் அங்கு காணப்பட்ட இந்துக் கோயில்களின் முக்கிய சிறப்பியல்புகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். அவை:-

1. சிகரங்கள் இல்லாத தட்டையான கூரைகள், கோயில் முன் சிறிய புகுமுக மண்டபம்
2. பெரிய சதுரப் போதிகைகளைக் கொண்ட தூண்கள்
3. கோயில் வாயில்களின் இருபுறமும் கங்கையையும் யமுனையையும் செதுக்குச் சிற்பங்களாக அமைத்தல்

குப்தர் காலக் கட்டிடங்களை இந்தியாவின் உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப்பிரதேசம் ஆகிய இடங்களிற் காணலாம். பெரும்பாலான கட்டிடங்கள் செங்கற்களாலானவையாகவும் ஒரு சில கற்களால் ஆனவையாகவும் அமைந்துள்ளன.

குப்தர்கால கற்றளிக் கோயில்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம் அவை:-

1. சிறு சதுரக் கோயில்கள்
2. சிறு சிகரங்களைப் பெற்ற கோயில்கள்
3. கொஞ்சம் வளர்ச்சியடைந்த சிகரக் கோயில்கள்

## சிறு சதுரக் கோயில்கள்

இக்கோயில்களில் கற்கள் சதுரமாக நன்கு செதுக்கப்பட்டிருக்கும். அதன் முன் சிறுமண்டபமும் அமைந்திருக்கும். சிகரம் அமைக்கப்படவில்லை. உதாரணம் 2ம் சந்திர குப்தனால் கட்டப்பட்ட உதயகிரியில் மலையைக் குடைந்து அமைத்த குடைவரைக் கோயிலைக் குறிப்பிடலாம்.

## சிறு சிகரங்களைக் கொண்ட கோயில்கள்

இவ்வகைக் கோயில்கள் நாச்னா – குட்டார எனும் ஊரிலுள்ள பார்வதிக் கோயில், பூமாரவில் உள்ள சிவன் கோயில், லத்கான் கோயில், துர்க்கா கோயில், கோன்ட்குடி (Kontgudi) மேகுடி (Megudi) ஆகிய இடங்களிலுள்ள கோயில்கள் இத்தகைய அமைப்பை உடையனவாகும். நாச்னா, குட்டாரா, பார்வதிக் கோயில், லத்கான் கோயில், மேகுடிக் கோயில் என்பவற்றில் கட்டிடத்தின் மேல் கோஷ்டம் போன்றதொரு அமைப்புக் காணப்படுகின்றது. சிகரங்களில் நான்கு மூலைகளிலும் ஆமலகம் (நெல்லிக்காய்) போன்ற வேலைப்பாடுகள் உள்ளன. துர்க்கா கோயில் மண்டபம் பௌத்த சேதியத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது. எனத் தெரிகின்றது.

## சிறிது வளர்ச்சியடைந்த சிகரங்கள் கொண்ட கோயில்கள்

இவ்வகைக் கோயில்கள் சாஞ்சி தியோகாவிலுள்ள தசவதாரக் கோயில், நாச்னா குட்டாரவில் உள்ள மகாதேவர் கோயில், பட்டாரி எனும் ஊரிலுள்ள கோயில், புத்தகயாவில் புதுப்பிக்கப்பட்ட மகாபோதி பித்தரக் கோன் கோயில், ஐகோளில் உள்ள உச்சிமல்லி குடிகோயில் என்பன மேற்படி அமைப்பை உடையனவாகும்.

சாஞ்சி தியோகார் எனுமிடத்திலுள்ள தசாவதாரக் கோயில் அழகிய 40 அடி உயரமுடைய சிகரத்தை உடையது. 5ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இவ்வாலயம் சிறந்த கலையழகுடன் கூடிய பிரகாரத்தையும், படிகளையும் கொண்டுள்ளது. கங்கை, யமுனை ஆகிய நதித் தெய்வங்கள் வாயிலில் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலின் அமைப்பானது மிகவும் அற்புதமானது. பௌத்த தூபி ஒன்றை மாதிரியாகக் கொண்டு எடுக்கப்பட்ட இந்துக் கோயில் இதுவாகும். சாஞ்சி தியோகோ நரநாராயணர் எனவும் இவ்வாலயம் அழைக்கப்பட்டது.

கான்பூர் மாவட்டதிதிலுள்ள பித்தரக் கோன் கோயில் செங்கல்லால் ஆனது. இதன் கூரை பிரமிட் வடிவத்தை ஒத்தது. இது குப்தர் காலப் பொறியியல் நுட்பத்தை விளக்கி நிற்கின்றது. கர்ப்பக் கிருகம், அந்தராளம், அர்த்த மண்டபம் ஆகிய அமைப்புக் களையுடையது.

குப்தர் காலப் பாணியை மையமாகக் கொண்டே பிற்காலத்தில் சிற்ப சாஸ்திரங்கள் இந்துக் கோயில்களை நாகரம், வேசரம், திராவிடம் என வகைப்படுத்தியிருந்ததனையும் அவதானிக்க முடிகின்றது.

## குப்தர் காலச் சிற்பக் கலைகள்

குப்தர் காலக் கலைகளில் தலைசிறந்தது சிற்பக் கலையாகும். இக்காலத்தில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் பலவும் ஆடை ஆபரணங்களுடன் காட்சி தருகின்றன. உடலழகைக் காட்டும் நிர்வாணச் சிலைகளை இவர்கள் படைக்கவில்லை. குப்தர் காலச் சிற்பங்களில் சிறப்பு யாதெனில் அக்காலச் சிற்பங்கள் தமக்கென தனியான பாணியில் சிற்பங்களை அமைத்திருந்தமையாகும். சிவன், விஷ்ணு, விநாயகர், குமாரக்கடவுள், திருமால் அவதாரங்கள் போன்ற அழகிய சிற்பங்கள் அமைக்கப்பட்டன.

இக்காலப்பகுதியில் புத்தரின் சிற்பங்களும் வடிவமைக்கப்பட்டன. அவ்வகையில் சாரணாத்தில் கிடைத்த அமர்ந்த வண்ணம் உள்ள புத்தர் சிலை, வடமதுரையில் அரும்பொருட் காட்சியகத்தில் நின்ற நிலையிலிருந்த புத்தர் வடிவம், சுல்தான் கஞ்சில் உள்ள புத்தரின் செப்புச் சிலை என்பன இக்காலத்திலெழுந்த சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டுகளாகும். குப்தர் காலத்தில் செய்யப்பட்ட புத்தர் சிலைகள் யாவும் சுருட்டை மயிருடன் கூடியனவாக அழகாகக் காட்சி தருகின்றன.

இக்காலப்பகுதியில் கல்லிலே செதுக்கப்பட்ட சிற்பங்களுள் சிறப்பு வாய்ந்தவை அஜந்தாவில் காணப்படுகின்றன. இங்கேயும் புத்தருடைய சிலைகள் மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. சிற்பங்கள் அமைக்கும் போது அவர்கள் மனித உருவத்திற்குரிய தன்மைகளைக் கொடுக்காது தெய்வீகத் தன்மை அளித்துள்ளனர். சாஞ்சியில் போதி சத்துவர் ஒருவரின் உடற்குறை கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதுவும் மிக அழகாகச் செதுக்கப்பட்ட சிற்பமாக விளங்குகின்றது.

புத்தருடைய சிற்பங்களுக்கடுத்தாக சிறந்து விளங்குவது சிவனுடைய சிற்பங்களாகும். குஷானர் காலத்தில் சிவபெருமானை இலிங்கவடிவில் வழிபட்டனர். ஆனால் குப்தருடைய காலத்தில் சிவன் இலிங்க உருவில் ஒரு முகத்துடனும் மற்றும் நான்கு முகங்களுடனும் படைக்கப்பட்டு வணங்கப்பட்டார். உமையொரு பாகனாகவும் இத்தெய்வம் வணங்கப்பட்டது. திருமாலுடைய அவதாரங்களும் முதன் முதலாகச் செதுக்கப்பட்ட காலமும் இதுவேயாகும்.

வடமதுரையில் அமைந்த திருமாலின் சிற்பம் மிகவும் அழகானது. உதயகிரியில் உள்ள குகை வாயிலில் திருமாலின் வராக அவதாரம் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. விஷ்ணு பன்றி வடிவமெடுத்து புவிமடந்தையை மீட்கும் இக்காட்சி குப்தர் காலச் சிற்பங்களுள் அற்புதமானதாகும்.

பௌத்த, சமண மதங்களின் எழுச்சியினால் இந்து மதத்தின் செல்வாக்கு கடல் கடந்த நாடுகளுக்கும் சென்றது. மலாக்கா, சுமாத்திரா, ஜாவா, கம்போடியா, இந்தோனேஷியா ஆகிய இடங்களுக்கும் பரவின. நாளந்தாவில் இருந்த 80 அடி உயரமான வெண்கலச் சிலையைக் கண்டு ஷியாங் ஹியாங் எனும் சீன யாத்திரிகன் வியந்து போற்றியுள்ளான். இதைத் தவிர குதூப்மினாரில் தேனிரும்பினால் நிறுவப்பட்ட 23' அடி 3'' உயரமுடைய தூண் குப்தர் கால உலோக அறிவை வியக்க வைக்கும் அற்புதமான தூணாகும்.

குப்தர் காலத்தில் வெளியிடப்பட்ட பொற் காசுகளும் அக்காலத்துக் கலைச் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறு குப்தர் காலம் இந்து மத மறுமலர்ச்சிக் காலமாகவும் இந்தியக் கலையுலகின் பொற்காலமாகவும் நிகழ்கின்றது.

*உசாத்துணை நூல்கள்:*


1. இந்து நாகரீகம் III திரு. சொக்கன்
2. இந்து நாகரீகத்திற் கலை திரு. காரை சுந்தரம்பிள்ளை





**இது சிறுவர்களுக்கான சிறப்புப் பகுதி. ஸ்ரீராமகிருஷ்ணரின் நீதிக் கதை ஒன்றினை இங்கு தருகிறோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இக்கதையைப் படித்துக் காட்டி அதன் தத்துவத்தை விளக்குவது கடன்.**

# முழுமையாக அறிந்தபின் முடிவுசெய்

ஒரு நகரத்தில் பார்வையற்றவர்களுக்கான பள்ளிக்கூடம் ஒன்று இருந்தது. பார்வை இல்லாத அவர்கள் எந்தப் பொருளையும் தொட்டுப் பார்த்தும் முகர்ந்தும்தான் புரிந்து கொள்ள வேண்டி இருந்தது.

ஒரு நாள் ஆசிரியர் யானையைப் பற்றிக் கதை சொல்லிக் கொண்டிருந்தார். குழந்தைகளுக்கோ அது புரியவே இல்லை. குழந்தைகள், "ஐயா! யானை எப்படி இருக்கும்?" என்று கேட்டனர்.



ஆசிரியருக்கு எப்படி விளங்க வைப்பது என்று புரியவே இல்லை. அவர், "உங்களுக்கெல்லாம் யானையைப் பற்றிப் புரிய வைக்க எனக்குத் தெரியவில்லை. அதனால் உங்களை எல்லாம் யானையிடம் அழைத்துச் செல்கிறேன். அப்போது நீங்கள் உண்மையிலேயே யானையைப் புரிந்து கொள்வீர்கள்" என்றார்.

யானையை நேரே தொட்டுத் தெரிந்து கொள்ளப் போகிறோம் என்பதால் குழந்தைகளுக்கு ஒரே மகிழ்ச்சி.

ஒரு சர்க்கஸ் கம்பெனிக்கு, ஆசிரியர் அந்தக் குழந்தைகளை அழைத்துச் சென்றார். மனேஜரிடம் சென்று "ஐயா! இந்தக் குழந்தைகள் பார்வை இழந்தவர்கள், யானை எப்படி இருக்கும் என்பதை அறிய ஆவலாக இருக்கிறார்கள். இவர்கள் யானையைத் தொட்டு மகிழத் தயவுசெய்து நீங்கள் அனுமதி கொடுங்கள்" என்று கேட்டார்.

அவரும் உடனே உதவியாளர்களைக் கூப்பிட்டு, "இந்தக் குழந்தைகளுக்கு ராதா என்னும் பெயருடைய யானையைக் காட்டுங்கள்" என்றார்.

ஒரு உதவியாளன் ராதாவைக் கட்டிவைத்திருக்கும் மரத்தடிக்கு ஆசிரியரையும், குழந்தைகளையும் அழைத்துச் சென்றான். அவன் மாவுத்தனிடம், "இந்தக் குழந்தைகள் யானையைத் தொடும் போது ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

எல்லோரும் ஒரே கூச்சல் போட்டுக் கொண்டு யானையைச் சூழ்ந்து கொண்டனர்.

ஒரு மாணவனை ஆசிரியர் தூக்கிவிட்டார். அவன் யானையின் காதைத் தடவிப் பார்த்து விட்டு, "ஓ! யானை விசிறிபோல இருக்கிறது" என்று எண்ணிக் கொண்டான்.

மற்றொருவன் யானையின் காலைத் தன் இருகைகளாலும் தடவிப் பார்த்து, "யானை தூண் போலத்தான் இருக்கிறது" என்று முடிவு செய்து விட்டான்.

மூன்றாமவன் தும்பிக் கையைப் பார்த்து , "கனத்த தடிபோல் இருக்கிறது" என்று எண்ணினான்.

மற்றொருவன் வயிற்றைத் தடவிப் பார்த்து, "யானை ஒரு பெரிய ஜாடிபோல் இருக்கிறது" என்று நினைத்துக் கொண்டான்.

இப்படி எல்லோருக்கும் யானையைத் தொட்டுப் பார்த்துத் தெரிந்து கொண்டதால் அளவு கடந்த மகிழ்ச்சி. தங்களுக்குள் பேசிக்கொண்டே தங்கள் ஆசிரியரோடு மனேஜரிடம் வந்தனர்.

"என்ன? எல்லோரும் யானையைத் தொட்டுப் பார்த்தீர்களா? எப்படி இருக்கிறது யானை? கூறுங்கள் பார்க்கலாம்" என்று கேட்டார் மனேஜர்.

முதல் மாணவன், "ஐயா! யானை ஒருபெரிய விசிறிபோல் இருக்கிறது" என்றான். இரண்டாம் மாணவன், "இல்லை, இல்லை. அவன் கூறுவது தவறு. பள்ளிக் கூடத்து வராந்தாவில் உள்ள தூணைப் போலத்தான் யானை இருக்கிறது" என்றான். இதைக் கேட்ட மூன்றாவது குழந்தை பெரிதாகச் சிரித்து, "சரியான முட்டாள்கள் நீங்கள். அது விசிறியும் அல்ல, தூணும் அல்ல. விளையாட்டுக் கூடத்தில் பெரிய மாணவர்கள் உடற்பயிற்சி செய்ய

வைத்திருக்கும் கனத்த தடிபோல் யானை இருக்கிறது" என்றான். நான்காமவன் எல்லோரையும் தள்ளிவிட்டு, முன்வந்து, "ஐயா, இவர்கள் சொல்வது எதுவும் சரியில்லை. நான் நன்றாகத் தொட்டுப் பார்த்தேன். அது ஒரு பெரிய ஜாடி போலத்தான் இருந்தது! நான் சொல்வது தான் சரி, இல்லையா?' என்று கேட்டான்.

பின்னர் அந்தக் குழந்தைகள் யானையைப் பற்றித் தங்களுக்குள் சண்டை போடத் தொடங்கி விட்டனர். இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மனேஜர் சிரித்துக் கொண்டு, "உங்கள் சண்டையை நிறுத்துங்கள். யானை எப்படி இருக்கிறது என்பதை நானே உங்களுக்கெல்லாம் சொல்கிறேன். உண்மையிலேயே நீங்கள் ஒவ்வொருவரும் கூறியது சரிதான். அதே நேரத்தில் தவறும் கூட. ஏனெனில் நீங்கள் ஒவ்வொருவரும் யானையின் ஒவ்வொரு பகுதியை மட்டுமே தொட்டிருக்கிறீர்கள். அதையே 'யானை' என்று நினைத்து விட்டீர்கள். யானை விசிறி போலவும், தூணைப் போலவும், பெரிய தடி போலவும், ஜாடி போலவும் இருக்கிறது என்பது ஒரு பகுதிதான் சரி. ஆனால் அந்த ஒரு பகுதியே யானையில்லை. யானை என்ற பெரிய உருவத்தின் சிறுசிறு பகுதிகளை நீங்கள் தொட்டுப் பார்த்து, உங்களுக்குத் தோன்றியது போலப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். முழு யானையையும் பார்த்தால்தான் உங்களுக்கு எது உண்மை என்பது விளங்கும். வீணாக ஏன் சண்டையிடுகிறீர்கள்?" என்றார்.

கடவுளைப் பற்றி நாம் போட்டுக் கொள்ளும் சண்டையெல்லாம் கண்ணற்ற அந்தச் சிறு குழந்தைகள் யானையைப் பற்றிப்போட்ட சண்டை போலத்தான் இருக்கிறது. அங்கு இங்கு என்று சொல்ல முடியாத எல்லையில்லாத அந்தக் கடவுளைப் பற்றி நாம் அறிந்து கொண்டதெல்லாம் ஒரு பகுதிதான். நம் அனுபவத்தைக் கொண்டு அவரை ஓர் எல்லைக்கு உட்படுத்தக் கூடாது.

கடவுள் பல்வேறு வகைப்பட்ட மக்களின் அனுபவங்களின் மொத்த உருவம் மட்டுமல்ல, அதற்கும் அப்பாற்பட்டவர்.

எனவே அவரைப் பற்றிப் பேசும் போது நம் நிலையை உணர்ந்து பணிவுடன் பேச வேண்டும். மற்றவர்களுடைய கருத்துக்களும் உண்மையாக இருக்கக் கூடும் என்று அவர்களுடைய கருத்துக்களுக்கும் மதிப்புத் தரவேண்டும்.

# முன்னேறிப் போ

ஒரு விறகுவெட்டி, விறகு வெட்ட காட்டிற்குச் சென்றான். வழியில் எதேச்சையாக அவன் ஒரு பிரம்மச்சாரியைச் சந்தித்தான். அந்த பிரம்மச்சாரி அவனிடம், 'அப்பா, முன்னேறிப் போ' என்றார். வீட்டுக்குத் திரும்பிய விறகுவெட்டி "பிரம்மச்சாரி என்னை ஏன் முன்னேறி போகச் சொன்னார்? என்று யோசிக்கலானான்.

நாட்கள் கழிந்தன. ஒருநாள் அவன் உட்கார்ந்திருந்தான், அப்போது அந்த பிரம்மச்சாரி சொன்னது அவனுக்கு நினைவு வந்தது. உடனே, 'இன்று நான் இன்னும் முன்னேறிப் போவேன்' என்று எண்ணிக் கொண்டான். காட்டிற்குப் போய் இன்னும் முன்னால் போய்ப் பார்த்தான். எண்ணற்ற சந்தன மரங்கள்! மகிழ்ச்சியுடன் அவற்றை வெட்டி வண்டி வண்டியாகக் கொண்டு வந்தான்; சந்தையில் விற்று பெரும் பணக்காரனானான். சில நாட்கள் சென்றன. பிரம்மச்சாரி கூறிய 'முன்னேறிப் போ' என்ற வார்த்தைகள் மீண்டும் அவனது நினைவிற்கு வந்தன. அன்று, காட்டில் அதிக தூரம் சென்று பார்த்தான், அங்கே நதிக்கரையில் வெள்ளிச் சுரங்கம்! இப்படி ஒரு பேற்றை அவன் கனவிலும் நினைக்கவில்லை. சுரங்கத்திலிருந்து வெள்ளியைக் கொண்டு வந்து விற்பதில் ஈடுபட்டான். தாராளம் பணம் கிடைத்தது, கொழுத்த பணக்காரனாகிவிட்டான். இவ்வாறு சில நாட்கள் கழிந்தன. ஒருநாள் உட்கார்ந்து, 'பிரம்மச்சாரி என்னை வெள்ளிச் சுரங்கம் வரை மட்டுமே போகுமாறு சொல்லவில்லையே, அவர் என்னை முன்னேறிப் போகும்படியல்லவா சொன்னார்' என்று எண்ணினான். இந்த முறை நதியைக் கடந்து சென்று பார்த்தான்; அங்கே தங்கச் சுரங்கம்! 'ஓகோ, இதற்காகத்தான் பிரம்மச்சாரி, முன்னேறிப் போ என்று சொன்னார் போலும்' என்று நினைத்தான். சில நாட்களுக்குப் பிறகு மேலும் சென்றபோது வைரமும் மாணிக்கமும் குவியல் குவியலாகக் கிடப்பதைக் கண்டான். அவனுக்குக் குபேரனுடையதைப் போன்ற ஐசுவரியம் கிடைத்தது.

ஆகவேதான் எதைச் செய்தாலும் முன்னேறிப் போகப்போகமேலும்மேலும் நல்லது கிடைக்கும் என்று சொல்கிறேன். சிறிது தியானம் செய்து ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டதும், ஆக வேண்டிய தெல்லாம் ஆகிவிட்டது என்று நினைத்துவிடாதே.

(நன்றி: ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்)

**சரியானது எது என்று உணர்ந்த பிறகும் அதைச் செய்யாமல் இருப்பதுதான் மிகக் கோழைத்தனம்**

*(கன்பூஷியஸ்)*

மாணவர் ஒளி

**இது மாணவர்களுக்கான பக்கம். இதில் சமய வரலாறு, மற்றும் புராணக் கதைகள் உட்பட மாணவர்களுக்குப் பயனுள்ள பல விஷயங்கள் அலங்கரிக்கப்படுகின்றன. இது போன்ற விஷயங்கள் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.**

# பெரிய புராணக் கதைகள்

## திருநீலநக்க நாயனார்

சோழ வள நாட்டில் சாத்தமங்கை என்னும் சிற்றூரில் திருநீலநக்க நாயனார் தோன்றினார். அவர் ஓர் அந்தணர். அவர் சிவ வழிபாடு புரியும் சமயங்களில் அவருடைய துணைவியார் பூசைக்கு வேண்டிய பொருள்களைத் தாங்கிவருவார்.

ஒருநாள் நாயனார் அயவந்தி ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்தார். அப்போது சுவாமிமீது சிலந்தியொன்று விழுந்தது. அம்மையார் அதுகண்டு வாயால் ஊதிச் சிலந்தியை அப்புறப் படுத்தினார். நாயனார் வாய் நீர் இறைவன்மீது படுமாறு ஊதியதால் மனைவியார் மீது ஆத்திரம் கொண்டு மனைவியாரை நோக்கி "உன்னை நான் இனித் துறந்தேன்" என்றார். அவ்வம்மையார் பயந்து ஆலயத்திலேயே தங்கி இருந்தார். நாயனார் வீட்டுக்குச் சென்றார்.

சிவபெருமான் நாயனாரின் கனவில் தோன்றி, "அன்பனே! என் மேனியைப் பார். உன் மனைவி ஊதிய இடம் தவிர மற்ற இடம் எல்லாம் சிலந்தியின் கொப்புளங்கள் தோன்றியுள்ளன" என்றார். விழித்தெழுந்த நாயனார் மிகவும் வியப்படைந்து விரைந்து சென்று ஆலயத்திலிருந்த தம் அருமைத் துணைவியாரை அகத்துக்கு அழைத்து வந்தார்; இறைவனை மனமார வாயாரப் பாடித் துதித்தார்.

ஒரு சமயம் திருஞானசம்பந்தர் அவ்வூருக்கு எழுந்தருளினார். நாயனார் அவரை வரவேற்றுத் திருவமுது செய்வித்து அவரோடு வந்த பாணரையும் உபசரித்தார். சிலகாலங் கழித்துத் திருஞானசம்பந்தரின் திருமணத்தைத் தரிசித்துச் சிவப்பேற்றை அடைந்தார்.

## நமிநந்தியடிகள் நாயனார்

இவர் சோழ நாட்டிலுள்ள ஏமப்பேறூரில் தோன்றினார். இவர் ஒரு அந்தணர்; சிவத்தொண்டிலும் சிவனடியார் தொண்டிலும் வழுவாது வாழ்ந்தவர்.

நமிநந்தியடிகள் திருவாரூரில் கோயில் கொண்டிருக்கும் வன்மீக நாதரை வழிபட்டு அளவில்லாமல் விளக்குகள் வைக்க எண்ணினார். மாலைக்காலம் நெருங்கியவுடன் அருகிலுள்ள சமணர் வீடுகளில் சென்று சிவபெருமானுக்கு விளக்கு எரிக்க எண்ணெய் வேண்டுமெனக் கேட்டார். அவர்கள் "உங்கள் கடவுளின் கையில் நெருப்பு இருக்கும்போது விளக்கு எதற்கு?" என்று கேட்டனர். அவர்கள் பேச்சைக் கேட்டு மனம் உடைந்த நாயனார் சிவபெருமானிடம் முறையிட்டார். அப்போது, "குளத்து நீரையே கொண்டு விளக்கு எரிப்பாயாக" என்று சிவபெருமான் அசரீரியாக மொழிந்தார். அடியவர் அவ்வாறே செய்து, பொழுது விடியுமளவும் விளக்கு எரித்து வந்தார்.

ஒரு சமயம் திருவாரூர் வீதிவிடங்கப் பெருமான் திருவிழாவைக் கண்டு மகிழ்ந்து, பலரைத் தொட்டதால் தீட்டு உண்டாயிற்று என்று எண்ணி, அவர் மனைவியார் அழைத்தும் வீட்டினுள் செல்லாமல் வெளியிலேயே இருந்தார். அதற்குள் கடவுள் திருவருளால் அவருக்குத் தூக்கம் உண்டாயிற்று. அயர்ந்து தூங்கும்போது அவர் கனவில் சிவபெருமான் தோன்றி "திருவாரூரில் பிறந்தவர்கள் அனைவரும் சிவகணங்களே; அதை நீ காண்பாய்" என்று கூறி மறைந்தார்.

நாயனார் விழித்தெழுந்து தாம் நினைத்தது குற்றம் என்று அறிந்து திருவாரூருக்குச் சென்று அவ்வூரில் பிறந்தவர்களை எல்லாம் சிவகணங்களாகக் கண்டு வணங்கி, அவர்கள் அந்த உருவம் நீங்கப்பெற்று முன்போல் ஆனமையையும் பார்த்துச் சிவபெருமானை மனமார ஓதினார். பின்னர் தம் குடும்பத்துடன் அவர் திருவாரூரில் குடிபுகுந்து சிவப்பணி செய்து முத்தி அடைந்தார்.

## திருஞானசம்பந்தர்

சோழ வள நாட்டில் சைவ நெறி தழைத்தோங்கும் சீர்காழி எனும் சிறந்த தலம் ஒன்று உண்டு. அங்கு செந்தண்மை பூண்டொழுகும் அந்தணராகிய சிவபாதவிருதயர் என்னும் ஒரு பெரியார் இருந்தார். அவர்தம் வாழ்க்கைத் துணைவியார் பகவதியார் என்னும் பண்புடைய நங்கையார். இருவரும் சிவனடியை மறவாத சிந்தையாளர்கள். இருவரின் இல்லறமென்னும் நல்லறத்தின் பயனாக ஓர் அழகிய புதல்வர் தோன்றினார். பெற்றோர் தம் அருமைப் பிள்ளையாரை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள்.

பிள்ளையார் அறிவிலும் திருவிலும் உயர்ந்து விளங்கினார். பிள்ளையாருக்கு வயது மூன்று ஆயிற்று. ஒரு நாள் சிவபாதவிருதயர் பிள்ளையாரையும் உடன் கூட்டிக்கொண்டு கோயிலுக்குச் சென்றார். குழந்தையைக் கரையிலே இருக்கச் செய்து தாம் மட்டும் குளத்தில் இறங்கிக் குளிக்க ஆரம்பித்தார். பிள்ளையார் தம் தந்தையைக் காணாமல் திகைத்து, "அம்மா அப்பா" என்று அழத் தொடங்கினார். அவர் அழுகை கேட்டுச்

சிவபெருமான் பார்வதியோடு அவர் முன்பு தோன்றினார். உடனே பார்வதி தேவியார் ஒரு பொற்கிண்ணத்தில் அவருக்கு ஞானப்பால் கொடுத்தார். அந்தப் பாலை உண்டதும் பிள்ளையாரின் அறிவும் வளர்ந்தது. அவர் அழுகையை நிறுத்தி இறைவனையே எண்ணிக் கொண்டிருந்தார்.

சிவபாதவிருதயர் நீராடியபின் குளக்கரைக்கு வந்து குழந்தையின் வாயில் பால் வடிவதைக் கண்டார்; ஆத்திரங் கொண்டார்; "உனக்குப் பால் தந்தவர் யார்?" என்று ஒரு கொம்பை எடுத்து ஓங்கினார். பிள்ளையார் வானத்தில் சுட்டிக் காட்டிச் சிவபெருமானின் அருளால் உமாதேவியார் தமக்குப் பால் கொடுத்த தன்மையை ஒரு பதிகமாகப் பாடினார்.

*"தோடுடைய செவியன் விடையேறியோர்*
*தூவெண் மதிசூடி*
*காடுடைய சுடலைப் பொடிபூசி*
*என்னுள்ளங் கவர்கள்வன்*
*ஏடுடைய மலரான்முனை நாள்பணிந்*
*தேத்தவருள் செய்த*
*பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா*
*னிவனன்றே?"*

*(தோடு - காதணி. விடை - எருது. மதி - சந்திரன். ஏடு - இதழ். மலரான் - பிரமன். பீடு - பெருமை)*

என்பது அவர் பாடிய முதற் பாட்டாகும். இத்தெய்வத் திருப்பாட்டைக் கேட்டுச் சிவபாதவிருதயர் பெருவியப்புக் கொண்டார். அன்று முதல் பிள்ளையாருக்குத் திருஞான சம்பந்தர் என்பது பெயராயிற்று.

திருஞானசம்பந்தர் இளம் பருவத்திலேயே தம் தந்தையாரின் தோள்மேல் ஏறிக்கொண்டு பற்பல சிவத் தலங்களையும் கண்டு பதிகங்கள் பாடினார். திருநீலகண்டப் பெரும்பாணர் என்பவரும் எப்போதும் அவருடனே சென்று அவர் பாடல்களை யாழில் இட்டு வாசித்தார்.

சம்பந்தர் பற்பல தலங்களுக்கும் சென்று அற்புதங்கள் பல நிகழ்த்தினார். சிவபெருமானின் திருவருளால் அவருக்குத் திருவரத்துறை என்னும் ஊரில் முத்துச் சிவிகையும், முத்துக் குடையும், முத்துச் சின்னங்களும் கிடைத்தன. தகுந்த வயதில் சம்பந்தருக்கு உபநயனமும் நடைபெற்றது.

பின்னர் அவர் திருவையாறு முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருப்பாச்சிலாச்சிரமம் என்னும் ஊரை அடைந்தார். அங்கு கொல்லி மழவன் என்பவனுடைய மகள் முயலகன் என்னும் நோயால் துன்புற்றிருப்பதைக் கண்டு பதிகம் பாடி அந்நோயை நீக்கினார். சம்பந்தர் அவ்வூரை விட்டுப் புறப்பட்டுத் திருவலஞ்சுழி, பட்டீச்சரம் முதலிய தலங்களைத் தரிசித்துத் திருவாவடுதுறையை அடைந்தார். அங்கு தம் தந்தையார் சிவபாதவிருதயர் செய்ய விரும்பிய யாகத்திற்குப் பொருள் இல்லாமையை உணர்ந்து இறைவனின் அருளை வேண்டிப் பதிகம் பாடினார். இறைவன் திருவருளால் ஒரு பூதம் அவருக்கு வேண்டிய பொன்னைக் கொண்டுவந்து கொடுத்துச் சென்றது.

ஒரு சமயம் திருஞானசம்பந்தர் திருமருகல் என்னும் ஊருக்குச் சென்றிருந்தார். அங்கு பாம்பினால் தீண்டப்பட்டு ஒரு வணிகன் உயிர் துறந்தான். அதனால் அவன் மனைவி கதறி அழுவதைக் கண்ணுற்று மனம் இரங்கிச் சிவபெருமானைக் குறித்து ஒரு பதிகம் பாடினார். அந்த வணிகன் தூங்கி எழுபவனைப்போல் உயிர் பெற்று விழித்தெழுந்தான். அதன் பின்னர், சம்பந்தர் திருவாரூர், திருப்புகலூர் முதலிய ஊர்களுக்குச் சென்று திருவீழிமிழலையை அடைந்தார். அங்கு திருநாவுக்கரசர் என்னும் சிவனடியாரைக் கண்டு அளவளாவினர். இருவரும் திருமறைக்காடு என்னும் வேதாரணியத்தை அடைந்தனர். அங்கு சிவாலயம் பேதங்களால் எப்போதும் மூடப்பட்டிருந்தது. திருநாவுக்கரசர் பதிகம் பாடிக் கதவைத் திறப்பித்தார். இருவரும் இறைவனை மனமார வழிபட்டனர். பின்னர் சம்பந்தர் பதிகம் பாடிக் கதவை அடைப்பித்தார். அன்றுமுதல் அக்கதவும் திறப்பதும் அடைப்பதுமாக இருந்தது.

அக்காலத்தே பாண்டியன் சமண சமயத்தில் மூழ்கிக் கிடந்தான். அவன் மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரும், அமைச்சராகிய குலச்சிறை நாயனாரும் சைவ மதத்தைத் தழுவிச் சிவத்தொண்டில் ஈடுபட்டிருந்தனர். அவர்களிருவரின் வேண்டு கோளுக்கிணங்கி, சம்பந்தர் பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையை அடைந்தார். அவர் தம்மை வாதில் வெல்வதற்கு வந்திருப்பதாக அறிந்த சமணர்கள், அவர் தங்கியிருந்த மடத்துக்குத் தீ வைத்தனர். அத் தீ அவரை ஒன்றும் செய்யவில்லை. அது வெப்பு நோயாகி அரசனைப் பற்றிக் கொண்டது. சமணர்கள் அந்த நோயைத் தீர்க்க எவ்வளவோ பாடுபட்டும் பயனில்லை. சம்பந்தர் பதிகம் பாடி திருநீறு பூசி,

*"மந்திர மாவது நீறு; வானவர் மேலது நீறு;*
*சுந்தர மாவது நீறு; துதிக்கப்படுவது நீறு;*
*தந்திர மாவது நீறு; சமயத்தில் உள்ளது நீறு;*
*செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே"*

*(வானவர் - தேவர்கள். சுந்தரம் - அழகு.)*

என்னும் திருநீற்றுப் பதிகத்தைப் பாடினார். அரசனின் வெப்பு நோய் நீங்கிற்று.

பின்னர் சமணசமய ஆசாரியர்களுடன் திருஞானசம்பந்தர் அனல் வாதத்திலும் புனல் வாதத்திலும் வெற்றி பெற்றார். பாண்டியன் அன்றுமுதல் நல்லறிவு வாய்ந்து சைவ சமயத்தைத் தழுவினான். சம்பந்தர் பாண்டியனிடம் விடை பெற்றுச் சீர்காழியை வந்தடைந்தார். பிறகு அத்தலத்தை விட்டுப் புறப்பட்டுத் திருக்களர், பாதாளீச்சரம் முதலிய தலங்களை வழிபட்டுச் சென்றார். பிறகு போதிமங்கை என்னும் ஊரில் புத்தநந்தி என்பவன் அவரை எதிர்த்ததால் அவன் தலையில் இடிவிழுந்து மாண்டான். அவருடன் வாதிட்ட பௌத்தர்கள்

எல்லாரும் தோல்வியடைந்து சைவர்கள் ஆனார்கள். பின்பு சம்பந்தர் திருவோத்தூரை அடைந்தார். அங்கு ஒரு சிவனடியார் வைக்கும் பனை மரங்கள் எல்லாம் ஆண் பனைகளாகிக் காயாமல் இருப்பதைக் கண்டு சமணர்கள் அவரை இகழ்ந்தார்கள்.

திருஞானசம்பந்தர் 'பூத்தேர்ந்தாயன' என்னும் பதிகம் பாடி அவற்றைப் பெண் பனைகளாக மாறிக் காய்க்கும்படி செய்தார். மயிலாப்பூரில் சிவநேசச் செட்டியார் என்பவர் திருஞானசம்பந்தருக்கு மணம் முடிக்க எண்ணி இருந்த தம் பெண், பாம்பு கடித்து இறந்ததால் அவள் எலும்புகளைக் குடத்திலிட்டுச் சம்பந்தர் மயிலாப்பூருக்கு வந்தபோது அவரிடம் அக்குடத்தைப் படைத்தார். திருஞானசம்பந்தர் இறைவன் திருவருளை எண்ணி "மட்டிட்ட புன்னை" என்ற பதிகத்தைப் பாடினார். பூம்பாவை என்னும் அப்பெண் உயிருடன் எழுந்தாள். சம்பந்தர் தம்மால் உயிர்ப்பிக்கப்பட்ட பெண்ணை மணக்க மறுத்துவிட்டார்.

அதன் பிறகு திருஞானசம்பந்தர் சீர்காழிக்கு மீண்டார். அங்கு ஒரு நல்ல நாளில் நம்பியாண்டார்நம்பி என்பவரின் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். திருமணம் செய்து கொண்ட அன்றே சம்பந்தர் திருநல்லூர் பெருமணத்திலுள்ள சிவாலயத்தில் தம் மனைவியாருடன் சென்று இறைவனை வழிபட்டார். அங்கு தோன்றிய பேரொளியில் ஞானசம்பந்தர் தம் மனைவியாருடன் சென்று சுற்றத்தாரும் அடியார்களும் பின் தொடர மரணமில்லாப் பெருவாழ்வை அடைந்தார். திருமணத்துக்கு வந்திருந்தோரும் அப்பேரொளியில் கலந்து பேரின்பப் பெருவாழ்வை அடைந்தார்கள்.



# தாண்டவ மகிமை




*சாமளை கனகசபாபதி*

ஆண்டு 10

திருக்குடும்பக் கன்னியர் மடம் கொழும்பு 04


*"குனித்த புருவமும் கொவ்வைச்*
*செவ்வாயிற் குமிண் சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம் போல்*
*மேனியிற் பால் வெண்ணீறும்*
*இனித்தமுடனே எடுத்த*
*பொற்பாதமுங் காணப்பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவதே*
*இந்த மாநிலத்தே"*

என்று சொல்லிப் போந்தார் நால்வருள் மூத்தவரான அப்பர் பெருமான். வளைந்த புருவமிரண்டும்; கொவ்வைப் பழமொத்த சிவந்த வாயிற் தவழும் புன்சிரிப்பும்; விரிந்தாடும் சடையும்; பவளம் போன்றிலங்கும் மேனியிற் பொலியும் திருநீறும்; தூக்கிய திருவடியும்; ஆகிய இத்தகைய அருங்கோலத்தை தில்லையிலே காண்பதற்கு மனிதப் பிறவியை எடுக்க விரும்புவதாக பக்திச் சுவை நனிசொட்ட; கருத்தமைந்த பதிகத்தை உள்நினைந்து பாடிச் சொரிந்தார் மருணீக்கியார்.

எம்பெருமான் கைலைநாதன் உயிர்களை உய்வடையச் செய்யும் பொருட்டுக் கொண்ட அருட்கோலங்களிலே முதன்மையும் சிறப்பும் பெற்றது, நடராஜ மூர்த்தமாகும். கோயிலென்று சிறப்பாக வழங்கும் சிதம்பரத்திலே நடராஜப் பெருமான் ஆடும் ஆனந்தக் கூத்து 'பஞ்ச கிருத்தியத் திருநடனம்' என்று அழைக்கப்படுகின்றது. 'கிருத்தியம்' என்றால் தொழில் என்று பொருள்படும். ஆகவே வரையறையற்ற நித்தியப் பொருளாகிய இறைவனின் ஐந்தொழில்களையும் எடுத்தியம்பும் இக்கூத்து 'பஞ்ச கிருத்தியத் திருநடனம்' எனக் கூறுப்படுகின்றது. பூலோகத்தின் இதயமாக விளங்கும் பாரதத்தில் இதயத்துடிப்பாய் விளங்கும் பொற்சபேசர் நடராஜப் பெருமானின் கூத்து நின்றால் அண்ட சராசரங்கள் எல்லாம் செயலற்று நின்றுபோம். "ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே"

நடராஜரின் புண்ணியத் திருவுருவம் திருவைந் தெழுத்தின் வடிவமே என்று சைவ மெய்யியலாளர் பொருள் கூறுவர். 'சிவாயநம' என்ற மந்திரத்தில் 'சி' படைத்தற் தொழிலையும், 'வ' காத்தற் தொழிலையும் மேலும் 'ய', 'ந', 'ம' ஆகிய எழுத்துக்கள் முறையே அருளல், அழித்தல், மறைத்தல் ஆகிய தொழில்களையும் குறித்து நிற்கின்றன. தில்லைக் கூத்தர் ஏந்திய உடுக்கையில் இகரமும், வீசிய வரத கரத்தில் வகரமும், அபய கரத்தில் யகரமும், அனலில் நகரமும், ஊன்றிய திருவடியின் கீழ் மகரமுமாக 'ஓங்காரப் பொருளாகிய' திருவாசியின் நடுவே திருநடம் புரிகின்றார். நடராஜப் பெருமானின் திருவாசி 'பிரணவம்' ஆகும். திருவாசியின் மேல் விளங்கும் இருபத்தொரு அனற் கொழுந்துகளின் மத்தியில் திருவைந்தெழுத்து வடிவமாக நடராஜர் வீற்றிருக்கின்றார்.

*"தோற்றம் துடியதனில் தோயுந்திதி அமைப்பில்*
*சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமாம்*
*ஊன்று மலர்ப் பதத்தில் உற்ற திரோதம் முத்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு"*

என்று மொழிகின்றார் மனவாசகங் கடந்த தேவர். நடராஜப் பெருமானின் அங்கங்கள் ஒவ்வொன்றும் அவரியற்றும் தொழில்களையும், அவரின் எண்ணற்ற இயல்புகளையும் விளக்கி நிற்கும். அவர் வலக்கரத்தே கொண்டுள்ள உடுக்கு 'சிருஷ்டி'யைக் குறிக்கும். அவ்வுடுக்கின் நாதத்திலிருந்தே 'ஸா', 'பா' என்ற

இயற்கை ஸ்வரங்கள் தோன்றின. அபய கரம் சகல ஆன்மாக்களையும் முன்னின்று காத்தலைக் குறிக்கும். அனல் தாங்கும் இடது திருக்கரம் சம்ஹாரத்தையும் வரத ஹஸ்தம் மோட்சப் பலனையும் உணர்த்துகின்றது. முத்தி இன்பம் நல்கும் தூக்கிய திருவடி அருளலாற்றலையும், ஆணவ மலத்தின் அடையாளமான முயலகனை ஊன்றி நிற்கும் பாதம் மறைத்தலையும் , குறித்து நிற்கின்றன. ஆதியும் அந்தமுமில்லா சோதிக் கடவுள் , வலச்செவியில் குழையும் இடச்செவியில் தோடும் அணிந்திருக்கும் தன்மை ஆணோடு பெண்ணாய் அமைந்த இவ்வுலகம் தன்னுருவே என்பதைக் காட்டுகின்றது. அவர் திருமேனி தூய்மையின் அடையாளமாகவும் அதிலே பொலியும் இரட்சை பராசக்தி வடிவையும் அறிவிக்கின்றன. திருமுக மண்டலம் தலைமையையும் எல்லை கடந்த அழகையும் காட்டும். நீலகண்டம், மழு என்பன முறையே இறைவனின் பெருங் கருணையையும், பேராற்றலையும் உணர்த்தும். பொற்பாதத்தை அலங்கரிக்கும் சிலம்பும் கழலும் உயிர்களின் வினைகளை அறுப்பதாகக் கருதப்படுகின்றது. அவர் திருமுகத்தே பதியும் முக்கண்களும் இச்சா, கிரியா, ஞான சக்திகளைப் பிரதி பலிக்கின்றன. பிறையும் கங்கையும் இறைவனின் பரந்துபட்ட பேரறிவை விளக்க; சடைமுடி இவர் ஆன்மாக்களுக்கு ஞானம் ஊட்டும் நிலையை உணர்த்தும். இவர் கரத்தே கொண்டிருக்கும் மான், பரம்பொருள் வேதநாயகன் என்பதைக் காட்டி நிற்கின்றது. ஈற்றிலே இவர் தரிக்கும் புலித்தோல் மேலிட்டு எழும் கோபத்தை அடக்கும் பான்மையை விளக்கும்.

இத்தகு உண்மைத் தத்துவங்களைத் தன்னகத்தே பொதித்திருக்கும் நடராஜர், பொற்கலசத்தின் கீழ் ஆடுவது தாண்டவமாகும். இறந்த உடல்களின் மத்தியிலே என்பு மாலை புனைந்து ஆடும் அற்புதக் கூத்தையே தில்லையம்பலத்திலும் ஆடி மகிழ்கின்றார் அந்த ஆனந்தக் கூத்தர். முப்பத்தெட்டு அங்கஹாரங்களைக் கொண்ட இவ்வருள்நிறை தாண்டவத்தை முதன் முதலில் அருளியவரும் அவரே. எம்பெருமான் அந்திப் பொழுதில் ஆடிவரும் தாண்டவம் முதலில் நூற்றியெட்டுக் கை, கால் நிலைகளான கரணங்கள் மூலம் விளக்கப்படுகின்றது. சிவனின் பொற்பதந் தூக்கி ஆடும் அற்புதக் கூத்தாம் தாண்டவமானது ஆனந்தத் தாண்டவம், கௌரி தாண்டவம், சந்தியா தாண்டவம், காளி தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், திரிபுர தாண்டவம், சிவ தாண்டவம் எனப் பிரதானமாக ஏழு வகைப்படும்.

அவர் சிதம்பரத்திலுள்ள கனகசபையில் ஐந்தொழிலையும் விளக்கும் ஆனந்தத் தாண்டவத்தையும்; வெள்ளியம்பலச் சபையில் காத்தலின்பத்தை உணர்த்தும் சந்தியா தாண்டவத்தையும்; இரத்தினசபையில் மறைத்தலை அறிவுறுத்தும் திரிபுர தாண்டவத்தையும் திருநெல்வேலி தாமிர சபையில் படைத்தலை உணர்த்தும் முனி தாண்டவத்தையும் இறுதியாக அழித்தலை விளக்க சுடலையில் சம்ஹார தாண்டவத்தையும் ஆடி, உலகின் சகல ஜீவராசிகளையும் இரட்சிக்கின்றார். அவர் ஆடிச்சென்ற நூற்றியெட்டு வகைத் தாண்டவங்களிலே நாற்பத்தெட்டுத் தாண்டவங்களைத் தாமாகவும், முப்பத்தாறை பார்வதியுடனும், ஒன்பதை பகவான் ஸ்ரீ நாராயணனொடும், மூன்றைக் கந்தப் பெருமானுக்காகவும் எஞ்சிய பன்னிரு தாண்டவங்களைப் பிற தேவர்களுக்காகவும் ஆடினார்.

இத்தகைய வியப்பூட்டும் சிறப்பைப் பெற்ற நடேசருக்குரிய அபிடேகங்கள் ஆறு உள. அவற்றுள் மார்கழித் திருவாதிரை அபிடேகம் மிகவும் போற்றத்தக்கதும் முதன்மை பொருந்தியதுமாகும். தேவர்களின் விடியற் பொழுதாக இலங்கும் தெய்விக மாதமாம் மார்கழித் திங்களில் திருவெம்பாவையின் இறுதி நாளான மார்கழித் திருவாதிரையன்று காண ஒண்ணாத காட்சி ஆருத்திரா தரிசனமாகும். பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய முனிவர்களின் இரு விழிகளுக்குத் தரிசனம் தரும் தில்லைச் சிற்சபேசனை ஆருத்திரா தரிசனத்தின்போது காணக் கிடைப்பதே ஒரு தனிப்பெரும் பேறாகும். இத்தரிசனத்தைக் காண உலகெங்கணும் உள்ள சைவர்கள் சிதம்பரத்தை நாடி வருவார்கள். உலகெங்கும் பரந்திருக்கும் சிவாலயங்களிலும் இப்புண்ணிய அபிடேகதினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. குறிப்பாகக் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் பெருந்திரளான மக்களின் மத்தியில் இது வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

வாதவூரராம் மணிவாசகர் யாத்த திருவாசகம், திருக்கோவையார் என்பவற்றைக் கைப்பட எழுதி "அழகிய சிற்றம்பலமுடையான்" என்று கையொப்பமிட்டார் சிதம்பரத் தலைவன். இது கண்டு 'தில்லையுள்ளார் பொருள் கேட்க இதுதான் பொருளென்று கைகாட்டி மறைந்து' சாயுச்சிய முத்தி பெற்றார் மணிவாசகர். இதனாலன்றோ ஆருத்திர தரிசனத்தின் போது மாணிக்க வாசகரை நடேசர் சந்நிதானத்தில் வைத்து வழிபடுவர் அந்தணப் பெரியார்கள். இத்தகு சிறப்பு வாய்ந்தது தில்லைக் கனகசபை.

இத்தகைய சிறப்புக்கள் ஒருங்கே அமைந்த ஆடவல்லானின் ஆனந்தத் தாண்டவத்தை திருவாதிரையன்று கிடைக்கப்பெறும் ஆருத்திரா தரிசனத்தில் கண்டு ஆன்ம ஈடேத்திற்கு வழி சமைப்போமாக!

*"கற்பனைக் கடந்த சோதி*
*கருணையே உருவமாகி*
*அற்புதக் கோலம் நீடி*
*அருமறைச் சிரத்தின் மேலாம்*
*சிற்பரவி ஓமமாகும் திருச்*
*சிற்றம்பலத்துள் நின்று*
*பொற்புடன் நடம் செய்கின்ற*
*பூங்கழல் போற்றி போற்றி."*

**இறைவன் திருவடியை அடைய விரும்புபவர்களுக்கு**
**இருக்கவேண்டிய முதல் தகுதி புலனடக்கம்.**
(சுவாமி கமலாத்மானந்தர்)




# திருவிளையாடற் புராணக் கதைகள்

## அட்டமாசித்தி உபதேசித்த படலம்

சிவபெருமான் திருக்கயிலாய மலையில் ஆலமர நிழலில் இருந்தார். உமாதேவியார் அவருக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். எம்பெருமான் சிவகணத்தவர்க்கும் முனிவர்கட்கும் சில தருமங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார். அச்சமயம் முருகப்பெருமானுக்குப் பால் கொடுத்த இயக்கப் பெண்கள் அறுவரும் வந்து, "ஐயனே! அடியேங்களுக்கு அட்டமாசித்திகளை உபதேசித்தருள வேண்டும்" என்று வேண்டினர். சிவபெருமான் அவர்களை நோக்கி, "நீங்கள் பார்வதியைச் சிந்தித்தால் அவற்றை அருளுவாள்" என்று எட்டுச் சித்திகளை அவர்களுக்கு உபதேசித்தார். அவர்கள் ஊழ்வினையால் அவற்றை மறந்தார்கள். இதனால் சிவபெருமான் சினங்கொண்டு அவர்களைப் பட்டமங்கை என்னும் தலத்தில் ஆலமரத்தடியில் கருங்கல்லாகுமாறு சபித்து, பின்னர் ஆயிரம் வருடம் கழித்துத் தாம் வந்து பழைய உருவம் தந்து, அட்டமாசித்திகளையும் உபதேசித்தருளுவதாகக் கூறினார்.

இயக்கியர் அறுவரும் பட்டமங்கையில் ஆலமரத்தினடியில் கருங் கல்லாய்க் கிடந்தார்கள். ஆயிரம் வருடங்கள் சென்றன. சோமசுந்தரக் கடவுள் ஓர் ஆசாரிய வடிவம் கொண்டு அக்கருங்கற்களின் மீது அருள்நோக்கம் செலுத்தினார். உடனே அக்கற்கள் பழைய வடிவம் கொண்டன. இயக்கிமார் அறுவரும் ஆசாரியரை வணங்கினார்கள். ஆசாரியர் அவர்கள் தலைமீது கைவைத்து, எட்டுச் சித்திகளையும் உபதேசித்தார். இயக்கிமார் அறுவரும் உமாதேவியாரைத் தியானித்துத் திருக்கைலை மலையை அடைந்தார்கள்.

## விடையிலச்சினை இட்ட படலம்

காஞ்சிபுரத்தில் காடு வெட்டிய சோழன் என்பான் ஒருவன் சிவநெறி போற்றும் செல்வனாய் வாழ்ந்து வந்தான். அவன் மதுரைச் சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடலைக் கேள்விப்பட்டு அவரைத் தரிசிக்க விரும்பினான். சிவபெருமான் அவன் கனவிலே தோன்றி, "அன்பனே! நீ உருவம் மாறித் தனித்துச் செல்" என்றார். இறைவன் கட்டளைப்படியே சோழ மன்னன் தனியே நடந்து வைகைக் கரையை அடைந்தான். அந்நிலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவது கண்டு அவன் உள்ளம் கலங்கினான்.

அப்போது சிவபெருமான் ஒரு சித்தராக வேடம் கொண்டு வந்து வைகை நதியை வற்றுமாறு செய்தார்; பின்னர் சோழ மன்னனை அழைத்துச் சென்று, "பொற்றாமரைக் குளத்தில் குளிக்கச் செய்வித்துத் திருக்கோயிலில் சென்று தம்மையும் மீனாட்சியம்மையையும் வணங்குவித்தார். சோழன் வந்த செய்தியினைப் பாண்டியன் அறியின் இடையூறு உண்டாமென்று உணர்ந்த சித்தசுவாமி, அவனை வடக்கு வாயிலின் வழியாக விடுத்து, கதவைப் பூட்டி இடபக் குறியிட்டுத் தம் திருக்கோயிலில் எழுந்தருளினார்.

மறுநாள் வடக்குவாயிற் கதவில் தன் கயற் (மீன்) குறிக்குப் பதிலாக இடபக் குறி இட்டிருப்பதைக் கண்டு பாண்டியன் ஐயங் கொண்டான். அன்று அவன் உணவும் கொள்ளாமல் உறங்கலானான். சிவபெருமான் அவன் கனவிலே தோன்றி நடந்ததைக் கூறி ஐயம் நீக்கினார்.

பாண்டியன் விழித்தெழுந்தான்; இறைவன் கருணையை எண்ணி எண்ணி இன்ப வெள்ளத்தில் மூழ்கினான்; இத்திருவிளையாடலை அனைவருக்கும் கூறி எல்லோரையும் இன்ப வெள்ளத்தில் திளைக்குமாறு செய்தான்; பின்னர் தன் மைந்தனாகிய இராசேந்திர பாண்டியனிடம் தன் அரசை ஒப்படைத்துவிட்டுச் சிவபதவி அடைந்தான்.

## தண்ணீர்ப் பந்தல் வைத்த படலம்

இராசேந்திர பாண்டியன் காலத்தில் காடு வெட்டிய சோழன் சோமசுந்தரப் பெருமானை வெளிப்படையாகச் சென்று வழிபட எண்ணினான்; பாண்டியனைத் தன் நண்பனாகக் கொள்ளின் இவ்வெண்ணம் நிறைவேறுமென்று கருதிப் பாண்டியனுக்குப் பல வரிசைகளை அனுப்பினான்; அவனுக்குத் தன் மகளைக் கொடுப்பதற்கும் உடன்பட்டான். ஆனால் இராசேந்திரன் தம்பியாகிய இராசசிங்கன் ஒரு சூழ்ச்சி செய்தான். தன் அண்ணனுக்குப் பேசப்பட்ட பெண்ணைத் தானே மணந்து காடு வெட்டிய சோழனின் மருமகன் ஆனான்.

காடு வெட்டிய சோழன் பாண்டிய நாட்டைத் தன் மருமகனுக்கு உரிமையாக்க விரும்பி மதுரையை நோக்கிப் படையெடுத்து வந்தான். நண்பனே தனக்குப் பகைவனாகி வருவதை அறிந்த பாண்டியன், சோமசுந்தரப் பெருமானிடம் முறையிட்டு வருந்தினான். எல்லாம் வல்ல பெருமான் அசரீரியாக நின்று, "பாண்டியனே! நீ நாளை உன் படையோடு சென்று சோழனை எதிர்க்கக் கடவாய்; வெற்றி உனக்கே கிட்டுமாறு செய்வோம்" என்றார்.

மறுநாள் பாண்டியனும் சோழனும் கடும்போர் புரிந்தார்கள். பாண்டியனின் சேனை சிறியதாயினும் சிவபெருமான் திருவருளால் ஒன்று பலவாக மாறிப் போரிட்டது. உச்சிவேளை வந்தது; கடும் வெயிலால் இருபடை வீரர்களும் நீர் வேட்கை மிகுந்து வருந்தினர். அப்போது சோமசுந்தரப் பெருமான் பாண்டியனின் படை நடுவில் ஒரு தண்ணீர்ப் பந்தலைப் பரப்பினார்; அங்கு ஒரு தவசியாக வந்து ஒரு கெண்டியைத் தாங்கி வீரர்களின் நீர் வேட்கையை நீக்கினார்.

நீர் பருகி இளைப்பு நீங்கிய பாண்டியனின் வீரர்கள் சோழன் படை வீரர்களை வென்று சோழனையும் அவன் மருமகனையும் சிறைப் பிடித்துவந்து பாண்டியன் முன்னர் நிறுத்தினர். பாண்டியன் சோழனைத் தண்டிக்காமல் பெருந்தன்மையோடு அவனுக்கு யானைகளும் குதிரைகளும் ஆபரணங்களும் கொடுத்தனுப்பினான்; ஆனால், தன் தம்பியின் செருக்கு அடங்குமாறு அவன் செல்வங்களில் சிலவற்றை மாற்றி, அவனை வேறாக ஒதுக்கி வைத்தான். பின்பு அவன் எல்லா உயிர்களையும் அன்னைபோல அன்புடன் காப்பாற்றி வந்தான்.

## இரசவாதம் செய்த படலம்

பாண்டிய நாட்டில் திருப்பூவணம் என்னும் சிவதலம் ஒன்று உண்டு. அங்கு திருக்கோயிற் பணிபுரியும் உருத்திர கணிகையர்களுள் பொன்னனையாள் என்பவள் ஒருத்தி இருந்தாள். அவள் சிவனடியார் தொண்டிலும் சிறந்து விளங்கினாள்.

பொன்னனையாள் சிவபெருமான் திருவுருவை வார்ப்பிக்க விருப்பம் கொண்டாள்; அத்திருவுருவைக் கருவினாற் செய்தாள். நாடோறும் அவளுக்குக் கிடைத்த வருவாய் மகேசுவர பூசைக்கே போதுமானதாக இருந்தது. திருவுரு வார்ப்பிக்கப் பொருள் கிட்டாமல் அவள் வருந்தினாள்.

அன்பர்கள் வேண்டுவனவற்றை வேண்டியவாறே அளிக்கும் இறைவன் ஒருநாள் சித்தர் உருக்கொண்டு பொன்னனையாளின் இல்லத்தை அடைந்தார். அவள் சித்தரை அகமும் முகமும் மலர வரவேற்று வழிபட்டாள். அவரிடம் சிவபெருமானின் திருவுருவை வார்ப்பிக்கப் பொருள் இல்லை என்பதை முறையிட்டாள். சித்தராகிய சிவபெருமான், அவளை நோக்கி, "பெண்ணே, உன் இல்லத்தில் உள்ள பித்தளைப் பாத்திரம், ஈயப் பாத்திரம் முதலிய எல்லாப் பாத்திரங்களையும் இங்கே கொண்டு வா" என்றார். உடனே பொன்னனையாள் தன் வீட்டில் வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், பித்தளை, வெண்கலம் முதலிய உலோகங்கள் எல்லாற்றையும் கொண்டு வந்து சித்தர்முன் வைத்தாள். சித்தர் அவற்றின்மீது திருநீறு சிதறி, பொன்னனையாளைப் பார்த்து "நீ இவற்றை இன்று இரவு நெருப்பில் இட்டு எடுத்தால் இவை பொன்னாக மாறுவதைக் காணலாம். அவற்றைக் கொண்டு சிவபெருமான் திருவுருவை வார்ப்பிக்கக் கடவாய்" என்று கூறி மறைந்தார்.

சித்தராய் வந்தவர் சிவபெருமானே என்று தெளிந்த பொன்னனையாள் துன்பம் நீங்கி இன்பம் அடைந்தாள். சித்தர் கூறியபடியே அவள் அவ்வுலோகங்கள் எல்லாவற்றையும் நெருப்பில் இட்டுப் பொன்னாக்கிச் சிவபெருமான் திருவுருவை வார்ப்பித்தாள். அவ்வுருவின் பேரழகைக் கண்டு களித்து, "அழகிய பிரானோ" என்று அதை முத்தமிட்டுப் பிரதிட்டை செய்தாள். பின்பு அவள் விழாக்கள் முதலியனவும் நடத்தினாள். சில ஆண்டுகள் கழிந்தபின் அவள் சிவலோகம் அடைந்தாள்.

## சோழனை மடுவில் வீட்டிய படலம்

இராசேந்திர பாண்டியனுக்குப் பின்னர் அவன் குமாரன் இராசேச பாண்டியனும், இராசேச பாண்டியனுக்குப் பின்னர் அவன் குமாரன் இராசகம்பீரனும், இராசகம்பீரனுக்குப் பின்னர் அவன் மகன் பாண்டிவமிசதீபனும், அவனுக்குப் பிறகு அவன் மைந்தன் புரந்தரசித்தும், புரந்தரசித்துக்குப் பின்னர் அவன் குமாரன் பாண்டிவமிசபதாகனும், அவன் ஆண்ட பின்னர் அவன் குமாரன் சுந்தரேசபாதசேகரனும் மதுரையிலிருந்து செங்கோலோச்சினார்கள்.

சுந்தரேச பாதசேகரன் சிறிய படையையே வைத்திருந்து, அதன்பொருட்டுச் சிறிது பொருளையே செலவிட்டு, மிகுதியைக் கொண்டு சோமசுந்தரருக்கு முடி, கண்டிகை முதலிய இரத்தினாபரணங்களைச் செய்வித்தான். கோபுரம், மாடம் முதலியவைகளில் இரத்தினம் வேய்வித்தான்.

பாண்டியனின் சேனைச் சுருக்கத்தை அறிந்து, ஆயிரம் பரிக்கோர் சேவகன் என்னும் சோழன் மதுரைமீது படையெடுத்து வந்தான். பாண்டியன் பரமனை வேண்டி அவர் ஆணைப்படி சோழனை எதிர்த்துப் போரிட்டான். இறைவன் திருவருளால் பாண்டியன் சேனை சோழன் கண்களுக்கு ஒரு பெரிய கடல்போலத் தோன்றியது. சோமசுந்தரப் பெருமானும் ஒரு வேடவடிவம் கொண்டு வேலாயுதம் தாங்கிச் சோழனுக்கு ஒரு யமன் போல நின்றார். இருவரும் கோபத்தோடு போர் புரிந்தனர். சோழன் அவர்தம் வேலாயுதத்திற்கு அஞ்சிக் குதிரையோடும் ஓடினான். பாண்டியன் சோழனைப் பின்தொடர்ந்து ஓடினான். சோழன் திரும்பிப் பார்த்தான்; வேடுவனைக் காணாமையால் திரும்பிப் பாண்டியனை எதிர்த்தான்; பாண்டியன் பின்வாங்கி ஓடிவந்து மதுரையின் மேற்கில் உள்ள ஓர் ஆழமான மடுவில் வீழ்ந்தான். சோழனும் அவ்வாறே தானும் வீழ்ந்தான். பாண்டியன் சிவபெருமான் திருவருளால் எழுந்தான். சோழன் அந்த மடுவிலேயே ஆழ்ந்து இறந்தான். பாண்டியன் தன் செல்வங்களை இறைவனுக்கே படைத்து இன்புற்றிருந்தான்.

நம் செயல்கள்தான் நமக்கு தீமைகளை ஏற்படுத்துகின்றன. எனவே, செய்யும் செயலை சிந்தித்து கவனமாகச் செய்ய வேண்டும்.

(ரூஸ்வெல்ட்)

ஆன்மீகக் கதை

# திருவைந்தெழுத்தின் அற்புதம்

புலவர் விசாலாட்சி மாதாஜீ

*"வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே"*

முன்னொரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் பெயர் தசாருகன். இவன் சிங்கம் போன்ற வலிமை உடையவன் தவத்தினால் மேம்பட்டவன். போர் செய்வதில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். நீதி நெறி திறம்பாது செங்கோல் வளையாது தனது நாட்டைக் கண்ணை இமை காப்பது போலப் பாதுகாத்து வந்தான். குடி மக்களைப் பொன்னைப் போற் போற்றி மன்னுயிரையும் தன்னுயிரைப்போலப் பேணி அரசாண்டு வந்தான். இதனால் எல்லோரும் அரசனைப் புகழ்ந்து போற்றி வந்தார்கள்.

இவ்வரசன் அழகிய அரசியை திருமணம் செய்தான். அவ்விளவரசியின் அழகிற்கும் குண நலன்களுக்கும் சைவப் பண்புகளுக்கும் யாருமே ஈடிணை இன்றி காணப்பட்டாள். இவள் சிவபக்தியிற் சிறந்து காணப்பட்டமையால் சிவ சின்னங்களையும் சிவ நாமங்களையும் உயிர்க்குயிராய் நேசித்து வந்தாள்.

இதனால் சிவமூல மந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாட்சரம் என்னும் திருவைந்தெழுத்தைக் குழந்தைப் பருவத்தில் இருந்தே தியான நிலையிலிருந்து ஜெபித்து வந்தாள். உலகின் முழுமுதற் பொருளாகிய எம்பெருமானாகிய சிவபெருமானைத் தனது இருதய கமலத்தில் வழுத்தி "நமசிவாய மந்திரத்தை" தியானமும் ஜெபமும் செய்து வந்தாள். இதனால் இளவரசி தனது துணைவனாகிய கணவனை விடத் தவவலிமையில் மிகுந்து காணப்பட்டாள்.

ஒரு நாள் அரசன் தனது பத்தினித் தெய்வமாகிய இளவரசியைத் தீண்டித் தழுவ விரும்பினான். அவ்விளவரசி தூர விலகி அரசனே மனது வேறாகிய பெண்களும், நோயினாற் பீடிக்கப்பட்ட பெண்களும் உள்ளத்தால் கணவனை விரும்பாத பெண்களும் மனம் நோக நடந்து கொள்ளவோ, அவர்களைத் தீண்டவோ கூடாது. இனி விரதமிருக்கும் பெண்களையும் கற்பமுற்ற பெண்களையும் தீண்டவே கூடாது.

நான் கணங்கள் மீது சிறிதும் விருப்பமின்றி எம்பெருமானின் மீது அளவற்ற அன்பு பூண்டு எம் பெருமானின் செந்தாமரைக் காடன்னை செம்பவள பாதார விந்தங்களை என் இதயக் கமலத்திற் பதித்து ஸ்ரீ பஞ்சாட்சர மந்திர தியானமும் ஜெபமும் செய்யும் என்னைத் தாங்கள் தழுவாது தாங்கள் விரும்பும் அழகிய பெண்ணைத் தேடிச் சென்று திருமணம் செய்து அவரைத் தழுவி உங்கள் சிற்றின்ப வேட்கையைத் தீர்த்துக் கொள்ளுங்கள்" என அவனது இளவரசி கூறினாள்.

ஆனால் அவன் இளவரசியின் வார்த்தைகளையும், வேண்டுதல்களையும், நிராகரித்து இளவரசியின் அழகில் மயங்கி அவளை வன்கண்மையாகப் பலாத்காரமாக அணைத்தான். என்ன ஆச்சரியம், அற்புதம் அவளது உடம்பிலிருந்து எழுந்த சிவக்கனல் அரசனது கழுத்தில் இருந்து அன்றலர்ந்த புதிய நறுமணத்துடன் காணப்பட்ட மாலை அப்படியே வாடி வதங்கிக் கருகியது. அவன் பூசி இருந்த சந்தனக் குழம்பு சாம்பராகி விட்டது. அவன் அணிந்திருந்த பொன்னாபரணங்கள் எல்லாம் கரிய நிறமாக இருந்தன. அவனுடைய உடலானது வெம்மையால் தகதகவென்று கொதித்தது.

அரசன் துடிதுடித்து துணைவியை விட்டு விலகினான். வேதாகம விதிப்படி அக்கினி வளர்த்துத் திருமணஞ் செய்த துணைவி மீது விருப்பம் கொண்டு தழுவியது குற்றமா? என்றோங்கி இவ்வாறெல்லாம் நிகழக் காரணம் யாது? எனத்தன் துணைவியை வினாவினான்.

"அரசே! பிறவியைத் தருகின்ற ஆணவமல இருளானது கெட்டு ஞான வொளியையும் இறையருளையும் பெருக்குகின்ற ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தைத் துருவாசக முனிவர் எனக்கு உபதேசித்தார். அதனை அடியேன் இடைவிடாது ஜெபித்தும் தியானம் செய்தும் வந்தமையால் மனம் வாக்கு காயம் ஆகிய திரிகரண சக்தியைப் பெற்றேன். எனது உடல் மிக மிகப் புனிதம் அடைந்துள்ளது. அதனால் புண்ணிய உடலைப் பாவஞ் செய்து உடல் தீண்ட முடியவில்லை" என்று இளவரசி கூறினாள்.

அதன் பின்னர் அரசனும் அரசியும் யமுனைக் கரையில் தவஞ்செய்து கொண்டிருந்த கர்க்கி முனிவரை அடைந்து அவருடைய திருவடிகளை வணங்கினர். அரசன் முனிவரின் பாதார விந்தங்களை இறுகப் பற்றி "சுவாமி அடியேன் பிறவித்தளையின் நின்றும் உலகம்பகைமை துன்பங்களில் நின்றும் விடுபடத் தாங்கள் அருள் நெறி காட்டும். சிவமூல மந்திரமாகிய திருவைந்தெழுத்தை உபதேசம் செய்தருள வேண்டுமென" வேண்டினான்.

முனிவர் அரசன் மீது கொண்ட பெரும் கருணையால் அவ்வரசனது தலை மீது தனது கைகளை வைத்து ஆசி கூறி உண்மைப் பொருளாகிய திருவைந்தெழுத்தை உபதேசம் செய்தருளினார்.

அந்தளவில் அவ்வரசனுடைய உடலில் இருந்த அளவற்ற உரோமங்களின் துவாரங்களில் இருந்து எண்ணற்ற கரிய காகங்கள் வெளியே பறந்து சாம்பல் ஆகின.

இதனைக் கண்ட அரசன் ஆச்சரியமடைந்து "இவ்வாறு இக்காகங்கள் என்னுடம்பிலிருந்து பறக்கவும் பின்னர் எரிந்து சாம்பலாகவும் காரணம் யாது?" என்று முனிபுங்கவரை வணங்கி கேட்டான்.

முனிவர் அருளும் கருணையும் பொங்கித் ததும்பும் பேரானந்த பரவசம் உடையராய் அசரனைப் பார்த்து "அரசே நல்வினை தீவினை என்பவற்றைச் செய்து பலபிறவிகளை எடுத்தாலும் சஞ்சித வினையின் தொடர்ச்சியானது திருவைந்தெழுத்தின் மகிமையால் இனிமேல் பாவம் தொடராது அவைகள் காகங்களாகி வெளியே பறந்து சாம்பராகி விட்டன. அதனால் நீயும் உன் துணைவியும் புனிதர்களாகி விட்டீர்கள்" என்று கூறினார்.

இதன் பின்னர் அரசனும் மனைவியும் முனிவரை வணங்கித் தம் நகரை அடைந்து நீதி நெறி தவறாது செங்கோல் செலுத்தி இல்லறம் என்னும் நல்லறம் இயற்றி வையகத்தில் வாழ்ந்தனர்.

*பி.கு : இக்கதையின் மூலம் ஒவ்வொரு சைவ சமயத்தினரும் சமய தீட்சை பெற்று சிவ மூல மந்திரத்தை ஜெபமும் தியானமும் செய்தால் பகைமை பிணி மூப்பு முதலியவற்றில் இருந்து விடுபடுவார்கள் என்பதை வலியுறுத்தியுள்ளது.*

*AUM*

# HISTORY OF HINDUISM AND ITS DEVELOPMENT IN SRI LANKA AND PROBLEMS FACED BY HINDUS IN SRI LANKA

*A Presentation by*

## ALL CEYLON HINDU CONGRESS

*Represented by*

Mr. V. Kailasapillai & Mr. Kandiah Neelakandan
President General Secretary

at

**THE FIRST INTERNATIONAL CONFERENCE AND GATHERING OF THE ELDERS**
**Held at Mumbai, India**

**from 4 TO 9 FEBRUARY 2003**

## HISTORY AND DEVELOPMENT

### 1.1. Brief History

The majority of the Hindus in Sri Lanka practise Saivism and it can be traced to antiquity. At the All World Hindu Conference held in 1982, Hon. Justice S. Sharvananda, who was then a Judge of the Supreme Court of Sri Lanka (and later rose to be the Chief Justice of Sri Lanka from 29th October, 1984 to 21st February 1988), traced the history and development of Hinduism in Sri Lanka. Full copies thereof are circulated to the participants.

Furthermore, Sri Lankan scholars in Saiva Siddanta literature have made significant contributions to Saiva Sitthantha thought in Sri Lanka. Copies of an article on this aspect written by Shri N. Murugesa Mudaliyar on the occasion of the said World Conference in 1982 are circulated to the delegates of this conference.

There have been several architects of Hindu heritage in Sri Lanka. Copies of an article by R. N. Sivapragasam, Editor of the "Hindu Organ" on the same occasion are also presented at this Conference. The role played by Sri La Sri Arumuga Navalar, Shri Yogaswami (whose followers were Shri Subramaniya Swami of Hawaai and Lord Soulbary's son) and a galaxy of individuals from Sir Pon Ramanatham Sir Pon Arumachaam to Saiva Periyar Sivapathasuntharam and Sir Kanthiah Vaithianathan are significant.

### 1.2. UNIQUE FEATURES

When tracing the history of Hinduism in Sri Lanka, the following unique features need to be highlighted.

- Reference to practice of Saivism in Ramayana. There have been several references in Ramayana to Ravana being a Saivite and of his worship of Lord Shiva.

- Pre-historic records reveal that there were five (5) Eeswarams for Lord Shiva, namely Rameswaram, Thiruketheeswaram, Thirukoneswaram, Munneswaram and Naguleswaram. Except for Rameswaram in India, the other 4 Eeswarams are in Sri Lanka and it is also said that there was Thanthonteeswaram in North Central Sri Lanka and Chandrasekaram Siva Temple in Dondra in South Sri Lanka. Historians record that the Chandrasekeram Siva Temple was built by Vijaya and it was destroyed by the Portuguese.

- Naguleswaram is in the North, Thirukoneswaram is in the East, Thiruketheeswaram and Munneswaram are on the West and Chandrasekaram was in the South, Saint Thirumoolar in his Thirumanthiram refers to this country as "Sivapoomi", meaning the land of Lord Shiva.

- History also records that even a number of Sinhalese kings who ruled various parts of Sri Lanka had constructed a number of Hindu Temples. However, the arrival of the Portuguese, followed by the Dutch the destruction of a number of Hindu Temples commenced.

- The role played by Sri La Sri Arumuga Navalar who was the champion of the Hindu Renaissance in Northern Sri Lanka in the latter part of the 19th century is significant as recorded by Hon. Justice Sharvananda in his Article referred to above. He studied Bible and translated it into Tamil. However he made his fellowmen to realize that they should not be allowed to be converted as Christians.

- Establishment of a Chair for Hindu Civilisation. It is said that it is only in a University in Sri Lanka, namely Jaffna University that there is a separate Chair for Hindu Civilisation. Teaching of Hinduism - Hinduism is being taught to all the Hindu children in all the Government schools.

- First World Hindu Congress in Sri Lanka was held in 1982 and the next world Hindu Congress is to be held form the 2nd to the 7th May 2003 in Sri Lanka.

## 2. PROBLEMS

2.1.1 We cannot contend with the above significant achievements because of the sufferings and problems faced by Hindus in Sri Lanka particularly from 1983.

2.1.2 Architects of Hinduisms in Sri Lanka (from Sri La Sri Arumuga Navalar and Sir Pon Ramanathan to Sir Kanthiah Vaithianathan) built Temples and schools and saved our traditions.

2.1.3. Several of our Temples and schools were destroyed or damaged during the last two decades.

2.1.4. Although Hon. V. Radhakrishnan Provincial Minister of Education and Hindu Religious Affairs of Central Province in Sri Lanka referred to the problems caused by caste system in the plantation areas it must be mentioned that such situation has almost ceased to exist in the North-East. Although this issue is largely social and not religious we agree that it need be eradicated.

## 2.2. DESTRUCTION OF HINDU TEMPLES

During the war over the last two decades, a number of Hindu Temples were damaged and a report prepared by the Hindu Religious

Ministry of the Sri Lankan Government is also circulated. In the North-East province alone 1479 temples were damaged and total costs of repairs estimated were more than Rs.283 Million. This is only in respect of the Temples in the North and East, registered with the Ministry. Several other Temples in the North-East and a large number of temples in the other seven provinces were also damaged. Although a number of Temples have been renovated, some with the financial assistance form the State partly and the others by worshippers, the historic temple at Mannar, namely Thiruketheeswaram is still being renovated. The Thiruketheeswaram Temple Restoration Society has estimated that it will need a further sum of Rs. 62 million to complete all the restoration, as the Army had destroyed all the buildings around the temple, and the place was deserted. The Thiruketheeswaram Temple Restoration Society is in the process of constructing quarters for priests and staff and also madam for pilgrims. The consecration ceremony is scheduled to take place on the 14th June, 2003. Copies of our memoranda on these matters are also circulated.

## 2.3. DISPLACED

A large number of people have been displaced due to the war situation in the North and East, and a good number of them are internally displaced and others have emigrated. We have helped displaced persons and refugees in numerous ways.

## 2.4. SUFFERINGS OF HINDUS

All Ceylon Hindu Congress has from time to time submitted memoranda and issued statements on the problems faced by the Hindus in Sri Lanka. Copies thereof are also circulated. These show the problems faced by Hindus and humilation meted out to Hindu Priests.

## 2.5. HUMANITARIAN SERVICES

The All Ceylon Hindu Congress, a Federation of Hindu Religious Associations and Trusts have been extending humanitarian services to Hindus affected by the war. Among those who suffered significantly, are a number of Hindu children who were rendered orphans due to the death of their parents. The All Ceylon Hindu Congress took steps to establish a Hostel at Colombo Hindu College, Ratmalana, and about 100 boys and 14 girls are being maintained by the All Ceylon Hindu Congress.

At the same time the All Ceylon Hindu Congress has been assisting the following institutions in the North and East :-

- Batticaloa Y.M.H.A. (in constructing Sri Vipulanathar Home for Elders).
- Yogar Swami Thiruvadi Nilayam (Elders Home) Kilinochchi
- Mahadeva Ashram Kilinochchi (Orphanage for needy children)
- Iniya Valva Illam Mullaitivu (institution looking after the blind)

Our services are financially supported by Manitha Neyam Trust also.

## 2.6. EDUCATION

Hindu children have suffered because of the discriminatory treatment meted by the successive governments in Sri Lanka in respect of admissions to the Universities. A number of schools in the North-East were destroyed during the war. Furthermore Hindu Schools have been receiving all step-motherly treatment from the State and the Provincial Councils. A number of schools have no teachers to teach Hinduism. Non-Hindus have been appointed as Principals of some schools where the majority of students are Hindus.

### 2.7. UNETHICAL CONVERSION

Making use of the poverty of poor Hindus certain foreign funded institutions are engaged in unethical conversion activities. We have been protesting against the same. While we recognize the fundamental right of thought conscience and religion we have been urging, and Hon. T. Maheswaran, Hindu Religious Affairs Minister of the Central Government has decided, to legislate against proselytism/ unethical conversion of people from one religion to another by the use of force or allurement or by fraudulent or unethical means.

### 2.8. NEED OF FINANCIAL ASSISTANCE

We have been rendering our services with limited financial resources available to us. When the other religions groups are funded by their foreign counterparts we do not receive such financial assistance. Most of our donors have suffered as the victims of the unfortunate incidents in Sri Lanka. Hence the support of the International Hindu Community is welcome to pursue our social welfare projects.

V. KAILASAPILLAI — PRESIDENT

KANDIAH NEELAKANDAN — HONY. GENERAL SECRETARY

**ALL CEYLON HINDU CONGRESS**

(FEDERATION OF HINDU RELIGIOUS ASSOCIATIONS AND TRUSTS IN SRI LANKA)

---

## மாமன்றத்தில் தியான வகுப்புகள்

உடலின் சூஷ்மமான பகுதியை எழுச்சியடையச் செய்வதோடு மட்டுமல்லாமல் ஆனந்தமான, ஆரோக்கியமான வாழ்விற்கு, அவசியமான மன ஆரோக்கியத்தை ஏற்படுத்தவும் உதவவும் சக்கரத் தியானம் போதிக்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை மாமன்றம் செய்துள்ளது. கலந்து கொள்ள விரும்புவோர் ரூபா 100. 00 செலுத்தி முன் பதிவுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 8.00 மணி முதல் 9.00 மணிவரை மாமன்றத்தில் தியான வகுப்புகள் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு மாமன்றத்துடன் தொடர்பு கொள்ளவும்.

---

இக் கலியுகத்திலே மக்கள் மிகவும் தாழ்ந்த நிலையை அடைந்து விட்டார்கள். எது வேண்டுமாயினும் செய்யலாம். பின் புண்ணிய தீர்த்தங்களுக்கும் தலங்களுக்கும் சென்றால் பாவம் நீங்கும் என்று கருது கின்றார்கள் அழுக்குள்ளத்துடன் திருக் கோயில் செல்பவன் தன் பாவ மூட்டையை மேலும் அதிகமாக்கிக் கொள்கின்றான். முன்னிலும் பெரிய பாவியாகி வீடு திரும்புகின்றான். புண்ணிய தலங்களும் புண்ணிய தீர்த்தங்களும் புனிதமானவை; புனித மாதவர் நிறைந்தவை. புண்ணிய நதியில்லாத, திருக்கோவில் இல்லாத இடத்திலே ஒரு புண்ணிய புருஷர் இருந்தால் அவ்விடமும் புண்ணிய க்ஷேத்திரமே. பாவமே செய்பவர் மலிந்த ஓரிடத்திலே நூறு திருக்கோவில்கள் இருந்தாலும் அது புண்ணிய தலமாகாது. புண்ணிய தலங்களில் வசிப்பது மிகக் கடினம்; ஏன்? மற்ற இடங்களில் ஏதாவது பாவம் செய்தால் அதை நீக்குதல் எளிது. புண்ணிய தலங்களில் பாவம் செய்தால் அதைப் போக்கல் அரிது; மிக அரிது.

சுவாமி விவேகானந்தர்

# மும்பாய் மாநாட்டு நிகழ்வுகள்

கடந்த பெப்ரவரி மாதத்தில் இந்தியாவின் மும்பாய் நகரில் நடந்த "பழைய பாரம்பரியங்களும் கலாசாரங்களும்" மாநாட்டில் மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை, பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன், மாமன்ற விடுதிகள், முதியோர் இல்லக் குழுச் செயலாளர் திருமதி அ. கயிலாசபிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர். மாநாட்டு நிகழ்வுகள் தொடர்பான சில காட்சிகள் இவை



மாநாட்டுக்கு வருகை தந்திருந்த பிரமுகர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.



மாநாட்டில் கலந்து கொண்ட மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சர் திரு. வி. இராதாகிருஷ்ணன், திரு. திருமதி கயிலாசபிள்ளை.




மாமன்றத் தலைவர் உரையாற்றுகிறார்.



மாமன்றப் பொதுச் செயலாளர் உரையாற்றுகிறார்.



சுவாமி விக்னானந்தா அவர்களுடன் மாமன்றப் பிரதிநிதிகள்.

## சக்தி இல்லத்தில்



மாமன்ற விடுதிகள் முதியோர் இல்லக் குழுச் செயலாளர் திருமதி. அ. கயிலாசபிள்ளை அவர்களுடன் இரத்மலானை "சக்தி இல்ல"த்தில் வதியும் பிள்ளைகள்.

# இந்தச் சுடரில் ..............


01. பஞ்ச புராணங்கள்

02. மகா சிவராத்திரி தத்துவம்

04. மகா சிவராத்திரி வரலாறு

06. திருக்கேதீச்சரமும் மகா சிவராத்திரியும்

07. ஈஸ்வரன் கோயில் கொண்ட திருத்தலங்கள்

09. தமிழ் நாட்டில் சிவ வழிபாடு

10. குரு பக்தி

12. பொலனறுவைக் காலத் திருத்தலங்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சி

15. சோழப் பேரரசர் காலத்துச் சைவ சமய வளர்ச்சி

19. பல்லவர் காலக் கோயில்கள்

21. குப்தர் கால இந்து மத மறுமலர்ச்சி

24. முழுமையாக அறிந்த பின் முடிவுசெய்

25. முன்னேறிப் போ

26. பெரிய புராணக் கதைகள்

28. தாண்டவ மகிமை

30. திருவிளையாடற் புராணக் கதைகள்

32. திருவைந்தெழுத்தின் அற்புதம்

33 HISTORY OF HINDUISM AND ITS DEVELOPMENT IN SRI LANKA AND PROBLEMS FACED BY HINDUS IN SRI LANKA


**இந்து ஒளி வெளியீடு**

அலுவலக உதவி:

திரு. மு. சின்னையா

திரு. அ. கனகசூரியர்

**அடுத்த சுடர்**

சுபானு வருடம்

சித்திரை — ஆனி

**வாழ்த்து**

பாலொடு அபயனும் காணா மலரடி நீடு வாழ்க
காலனைக் காய்ந்த காலன் கழலடி இனிது வாழ்க
ஆலமதுண்ட அண்ணல் அருள்நெறி போற்றி நாளும்
சலமது நீங்கி என்றும் இன்புற்று நீடு வாழ்வாம்.

# இந்து ஒளி


அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
சித்திரபானு வருடம் தை — பங்குனி இதழ்
மாசித் திங்கள் 17ம் நாள்
01. 03. 2003



**ஆசிரியர் குழு :**

புலவர் அ. திருநாவுக்கரசு
திரு. கந்தையா நீலகண்டன்
திரு. க. இராஜபுவனீஸ்வரன்
திரு. மு. பவளகாந்தன்
திரு. த. மனோகரன்
திரு. கு. பார்த்தீபன்


| | | |
|---|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா | 20.00 |
| வருடாந்த சந்தா | ரூபா | 80.00 |
| வெளிநாட்டு வருடாந்தச் சந்தா | U.S டொலர் | 10.00 |


**அகில இலங்கை இந்து மாமன்றம்**
A. C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 2, இலங்கை.
இணையத்தளம் : http://www.hinducongress.org
மின்னஞ்சல் : admin@hinducongress.org
தொலைபேசி எண் : 434990, தொலைநகல்: 344720



இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.


# HINDU OLI


Thai - Pankuni
ALL CEYLON HINDU CONGRESS
1st MARCH 2003



**Editorial Board:**

Pulavar A. Thirunavukarasu
Mr. Kandiah Neelakandan
Mr. K. Rajapuvaneeswaran
Mr. M. Pavalakanthan
Mr. D. Manoharan
Mr. G. Partheepan


| | | |
|---|---|---|
| Price | Rs. | 20.00 per copy |
| Annual Subscription | Rs. | 80.00 |
| Foreign Subscription | U. S. $ | 10.00 |

(Including Postage)


**ALL CEYLON HINDU CONGRESS,**
A. C. H. C. Bldg.
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha,
Colombo - 2, Sri Lanka.
Website: http://www.hinducongress.org
E.mail: admin@hinducongress.org
Telephone No. : 434990, Fax No. : 344720


Next Issue:
**Sithirai - Aani**


Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.



PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO -13. TEL.: 330195